ஸீராவின் ஒளியில் சிறுபான்மை முஸ்லிம்களின் வாக்குரிமை

07



05

தேவை: விழுமிய அரசியல்



பலஸ்தீனும் எங்களை ஒன்றிணைக்காவிட்டால்...

03



# மீள்பார்வை

මීල්පාර්වෛ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 385 • 05 ஜனவரி 2018 வெள்ளிக்கிழமை • ரபீஉல் ஆகிர் 1439 • விலை 40.00

RI MOBILE
Wholesale Dealers in Mobile Phone Accessories
077-3050949
077-4843323
Tel: 011-2439470
151/11, Mumbai Plaza, 2nd Cross Street, Colombo - 11
Branch: 159/21, Green Arcade, Main Street, Colombo - 11
தேவையான பொருட்களை இருக்குமிடத்தில் இருந்தே மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் 0777 777 761
0777 674 941



# அசத்தியம் அழிந்தே தீரும்

## - ரவி சொன்ன அல் குர்ஆன் வார்த்தைகள் மெய்யாகின

பிணைமுறை மோசடி தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ள அர்ஜுன் அலோசியஸிடமிருந்து வீடொன்றை இலஞ்சமாகப் பெற்றதற்காகவும், இந்த விடயத்தில் ஆணைக்குழுவின் விசாரணைகளை தவறாக வழிநடத்தியதற்காகவும் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருனாநாயக்க மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையை ஜனாதிபதி வெளியிட்டார்.

2015-16 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விற்பனை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்வுகளை முன்மொழிவதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

2015-16 காலப்பகுதியில் நிதி அமைச்சராக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவரான ரவி கருனாநாயக்க, மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் தற்போது குற்றமிழைத்தவராகக் கருதப்பட்டுள்ள அலோசியஸ் குடும்பத்திடமிருந்து வீடொன்றை இலஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டு மேலெழுந்த போது கடந்த ஓகஸ்ட் மாதம் ''பெருமையுடன் பின்வரிசையில் போய் அமர்வதாகத்'' தெரிவித்து தனது பதவியை இராஜினாமா செய்தார்.

(பக். 15)

## குடியிருப்புக்கள் அமைக்க முன் வர்த்தமானி அறிவித்தலை நீக்கியிருக்க வேண்டும்



வில்பத்து வனப்பிரதேசம் சேதமாக்கப்படுவது தொடர்பில் சூழலியலாளர்கள் உள்ளிட்ட பலரும் முன்வைத்து வந்த முறைப்பாடுக ளைத் தொடர்ந்து இது தொடர்பில் கணக்காளர் நாயகம் திணைக்களம் தயாரித்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதன்படி, குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டுள்ள விலத்திக்குளம் பிரதேசம் வனப்பாதுகாப்புப் பிரதேசமாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதால், இந்தப் பிரதேசங்களில் நிறுவப்பட்ட குடியிருப்புக்கள் சட்டவிரோதமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பக். 15)

## ஜெருசலத்தை பிரிக்க முடியாமல் புதிய சட்டம் நிறைவேற்றியது இஸ்ரேல்



கிழக்கு ஜெரூஸலம் பலஸ்தீனின் தலைநகராக இருக்க வேண்டும் என்ற உலக அபிப்பிராயத்தை மீறும் வகையில், புனித நகரத்தின் எந்த ஒரு பாகத்தையும் வெளிநாட்டு நிர்வாகம் பெறுவதற்கு இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்குகள் தேவையென வலியுறுத்தும் சட்டமொன்றை கடந்த செவ்வாயன்று (02) இஸ்ரேல் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

பலஸ்தீன நிர்வாகத்திற்கு ஜெரூசலத்தின் ஒரு பகுதியை வழங்குவதை கடினப்படுத்தும் முயற்சியாகவே இந்த சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

(பக். 14)

## துறைமுக நகருக்கு புதிய சட்டம்



துறைமுக நகரை கையாளக் கூடிய புதிய சட்டமொன்று இவ்வருடம் மார்ச் மாதமளவில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என மேற்குப் பிரதேச அபிவிருத்திக்கான அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

துறைமுக நகரத்தின் உட்கட்டமைப்பு வேலைகள் அனைத்தும் 2020 இல் பூர்த்தி செய்யப்படும். துறைமுக நகரம் தனியான நிதி மாவட்டமாகக் கருதப்படும். இந்த நகரத்தில் 200,000 பேர் வசிக்க முடியும். சீன துறைமுகத்தின் ஒரு பிரதான முதலீடாக இது அமையும். இந்து சமுத்திரப்பிரதேசத்துக்கான சிறந்த வர்த்தக, நிதி நிலையமாக இது அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (பக். 15)

## ஏறாவூர் நகர சபை டெங்கு ஒழிப்புக்கு ஒத்துழைக்காமலில்லை



மட்டக்களப்பு மாவட்டத்தின் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களுக்கு ஏறாவூர் நகர சபை தனது பூரண ஒத்துழைப்பை வழங்குகிறது என ஏறாவூர் நகர சபைச் செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயில் தெரிவித்தார்.

பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு பரிசோதனை நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கிய ஐந்து ஊழியர்களும் ஏறாவூர் நகர சபையால் வாபஸ் பெறப்பட்டுள்ளதாகவும், ஏறாவூர் நகர சபையின் செயலாளர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராயும் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை எனவும் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த 27 ஆம் திகதிய கூட்டத்தில் நகர சபைச் செயலாளரின் சார்பில் கலந்து கொண்ட உத்தி யோகத்தரும் பொறுப்புக் கூறக்கூடிய அதிகாரியாக இல்லை என அரசாங்க அதிபர் எம். உதயகுமாரினால் வெளியேற்றப் பட்டுள்ளார்.

இது தொடர்பில் ஏறாவூர் நகர சபையின் செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயிலை மீள்பார்வை தொடர்பு கொண்டு வினவிய போது, தனது ஊழியர்களில் பெண் ஊழியர்களே அதிகமாக இருப்ப தனால் ஐந்து ஊழியர்களை கள வேலைக்கு அனுப்புவது சாத்திய மில்லை என்பதனால் (பக். 15)

## இலங்கையின் சனத்தொகையில் 7500 பேர் ஒருபால்வினையாளர்கள்



இலங்கையின் சனத் தொகையில் ஒருபால் சேர்க்கையாளர்களின் எண்ணிக்கை தற்போது 7500 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு செயல்திட்டப் பிரிவு அறிக்கையிட்டுள்ளது.

12 இலட்சம் பேரிடமிருந்து எடுக்கப்பட்ட இரத்த மாதிரிகளின் பரிசோதனையின்படி, 280 பேர் எயிட்ஸ் நோய்க்கு ஆளாகியிருப்பது தெரியவந்துள்ளது என தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு செயல் திட்டப் பிரிவின் பணிப்பாளர் Dr சிசிர லியனகே தெரி வித்தார். இவர்களில் பெண்கள், சிறுவர்களும் உட்படுவ தாகவும், அதிகமானவர்கள் ஆண்பால்வினையாளர்கள் எனவும் அவர மேலும் தெரிவித்தார்.


இவ்வாறானவர்களில் அதிகமானவர்கள் மேல்மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும், காலி, குருநாகல மாவட்டங்களிலும் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

New City Hardware
58, Messeger Street, Colombo - 12
Tel: 011-43777931, 011-5830188, 011-4377934
Fax: 011-2334671 Email: newcity@hotmail.com
உங்களுக்குத் தேவையான தரமான உபகரணங்களுக்கு நாடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே செல்லும் இந்தப் பாதை?

- ஜுனைத் M. ஹாரிஸ்



முஸ்லிம் பெண்கள் தனியாக ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு உள்ள கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு தமது அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். ஆண் துணையோடு மாத்திரம்தான் முஸ்லிம் பெண்கள் ஹஜ் கடமையை நிறைவேற்ற முடியும் என்ற கொள்கை நியாயமற்றதாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாமிய நெறிமுறைகளின் படி, ஹஜ் கடமையை நிறைவேற்றும் பெண்களுடன் ஆண் துணை இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்குரிய பல நியாயமான காரணங்களும் உள்ளன.

இந்நிலையில், இந்தியாவில் முஸ்லிம் பெண்களின் உரிமையை பாதுகாக்க விளைவதாக தன்னைக் காட்டிக் கொள்ளும் பிரதமர் மோடி, இஸ்லாத்தின் விழுமியங்களை கொஞ்சம் கொஞ்சமாக கருவறுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதற்கு முன்னர் முத்தலாக்கை தடை செய்யும் சட்டம் மோதியின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. இதனை அடுத்து சில தினங்களுக்கு முன்னர் முஸ்லிம் பெண்களின் திருமண உரிமைகளை பாதுகாக்கும் சட்டம் என்ற பேரில் ஒரு பிரேரணை லோக் சபாவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இஸ்லாமிய விழுமியங்களை சீர்குலைப்பதற்காக முதலில் எடுக்கப்படும் ஆயுதமாக பெண்களின் உரிமைக்கான குரலாகக் காட்டிக் கொள்ளப்படும் இவ்வாறான முயற்சிகளை நாம் பார்க்கலாம். பெண்களுக்குரிய சம அந்தஸ்த்து பற்றியும், அவர்களுக்குரிய உரிமைகள் பற்றியும் இஸ்லாம் தெளிவாக எடுத்துரைத்துள்ளது. வெளித் தோற்றத்தில் அவர்கள் மீதான கட்டுப் பாடுகளாகவும், உரிமை மீறலாகவும் பார்க்கப்பட்டாலும் அந்த விழுமியங்களால் முஸ்லிம் பெண்களின் கௌரவமும், பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளதை யாரும் மறுக்க முடியாது. மோடியின் முன்னெடுப்புக்கள் எங்கு போய் முடியப் போகிறதோ தெரியவில்லை.




# அறுவடை

- முபாரிஸ் J.M.

பெற்றோர்களால் அடிமைகள் போல் அடக்கி ஆளப்படும் பிள்ளைகள் பெற்றோரின் கரங்களை விட்டுத் தூரமாகிய பின், சிறு வயதில் இருந்து தான் அனுபவிக்காத அனைத்து சுதந்திரங்களையும் மொத்தமாக அனுபவிக்க முற்படுகிறார்கள்.

அப்போது அவர்கள் நிலை குலைந்து, யாராலும் கட்டுப்படுத்த இயலாத, மிக மோசமான ஆளுமைகளாக உருவெடுக்கிறார்கள். இது எல்லா உறவுகளுக்கும் பொருந்தும் இதற்குத் தினம் தினம் பல சான்றுகளைக் காண முடிகிறது.

# புத்தாண்டு வாழ்த்து கூறினால்..?

- ரஸ்மி. காலி

புத்தாண்டு வாழ்த்துச் சொல்வது, அவ்வாழ்த்துக்கு பதில் சொல்வது 'பித்அத்' (புதுமை), வழிகேடு, பெரும் பாவம் என்று தஃவா சென்டர்களில் இருந்தும், வீடுகளில் இருந்தும் பதிவு போடும் போராளிகளுக்கு எங்கே தெரியப் போகின்றது, முஸ்லிமல்லாதவர் களையே பெரும்பான்மையாகக் கொண்ட நிறுவனங்களில் வேலை செய்யும் விரல் விட்டு எண்ணக் கூடிய முஸ்லிம்கள், தங்களை நோக்கிச் சொல்லப்படும் வாழ்த்துக்களுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்று தெரியாமல் படும் திண்டாட்டம்.

- ஆபித் அஹமட்.

வேலைத்தளங்களில் மட்டுமல்ல. பல்கலைக்கழகங்களில் பாடசாலைகளில் கூட அதே திண்டாட்டம்.

- றஷீட் தல்ஹான்.

இப்படியான சந்தர்ப்பங்களில் நாம் முந்திக் கொண்டு சொல்லாமல் அவர்கள் சொன்னால் எப்படி நபிகளார் யூதர்களின் சலாத்திற்கு பதில் அளித்தார்களோ அந்த முறையில் அணுகினால் பிரச்சினை சுலபமாக முடிந்து விடும்.

- சஹ்ரான் கரீம்.

யாராவது வாழ்த்துச் சொன்னால் திரும்ப வாழ்த்துவதில் எனது ஈமான் எந்த விதத்திலும் பறிபோய் விடப் போவதில்லை. எனக்கு யாராவது வாழ்த்துச் சொன்னால், நான் நிச்சயம் பதிலளிப்பேன்.

- பாறுக் ஹுவைரிஸ்.

தாராளமாக நாமும் வாழ்த்து சொல்லலாம்...!

# "இலுமினாட்டி" கட்டுக் கதையை இஸ்லாமியர்களிடம் நன்றாக விற்கக் கூடியதாயுள்ளது

- முரளிதரன் மயூரன்

ஏற்கனவே அவர்கள் மனங்களில் 'யூத சதி' அரசியல் நன்கு பதியவைக்கப்பட்டுள்ளது. வெறுமனே பாலஸ்தீனத்தில் யூத-இஸ்ரேலிய அரசு செய்யும் அடக்கு முறைகளால் மட்டும் இம்மனநிலை உருவாகவில்லை. இஸ்லாமிய நம்பிக்கையாக / வரலாறாக இது பல இஸ்லாமிய அமைப்புக்களால் பரப்புரை செய்யப்படுகிறது. மத நம்பிக்கையோடு கலந்து சிறு வயதிலிருந்து ஊட்டப்படும் கருத்துக்களை மனதிலிருந்து அகற்றுவது மிகவும் கடினம்.

தற்போதைய உலகின் பொருளாதாரக் கட்டமைப்பு உழைக்கும் மக்களைச் சுரண்டி அதனால் வரும் இலாபத்தைக் கொண்டு இந்த உலகை ஆளுகிறது. இந்த உண்மையை மக்களிடமிருந்து மறைப்பதற்காக சொல்லப்படும் கட்டுக்கதை தான் 'இலுமினாட்டி'.


அதாவது, அரசியல் பொருளாதாரம் பற்றிய தேடலையும் விழிப்புணர்வையும் மழுங்கடிப்பதற்காகச் செய்யப்படும் கண்கட்டி வித்தை.

ஏற்கனவே மத அடிப்படை வாதத்தினூடாகவும் மதத் தீவிரவாதத்தினூடாகவும் அரசியல் நீக்கம் செய்யப்பட்டு, பார்வையிழந்தவர்களாக மாற்றப்பட்டு வரும் முஸ்லிம் சமூகத்தை மேலும் முட்டாள்களாக்குவதில் இந்த இலுமினாட்டிக் கதையும் பங்கெடுக்கிறது.

இந்தப் பொருளாதார அமைப்பே உலகில் போர்களையும் அழிவுகளையும் வதைகளையும் வறுமையினையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

அதற்கு, போலி இணையத் தளங்களையும் குப்பையாய் குவியும் யூடியூப் வீடியோக்களையும் விட்டு விட்டு, அரசியல் பொருளாதாரத்தைக் கற்க முயற்சி செய்ய வேண்டும்.

# இலவச ஒரு நாள் ஊடகச் செயலமர்வு, மீடியா டிப்ஸ் 3 ஆவது முறையாகவும்




மாவனல்லை (JM Media) ஜே.எம் மீடியா ஊடக நிறுவனம் மற்றும் ஜே.எம் மீடியா ஊடகக் கல்லூரி இணைந்து மூன்றாவது முறையாகவும் ஏற்பாடு செய்திருக்கும் இலவச ஒரு நாள் ஊடக செயலமர்வு 2018 ஜனவரி மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாவனல்லை ஹயா வரவேற்பு மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை இடம் பெறவுள்ளது.

இந்த இலவசக் கருத்தரங்கு தேசிய புகழ் பெற்ற அறிவிப்பாளர் ஏ.ஆர். எம் ஜிப்ரி, சிரேஷ்ட ஊடகவியலாளர் நவ்ஷாட் முஹிடீன் உட்பட பல ஊடகவியலாளர்களைக் கொண்டு நடாத்தப்படவுள்ளது. நாடளாவிய ரீதியில் தமிழ் பேசும் ஊடகர்கள், மாணவர்கள், ஊடக அறிவை வளர்த்துக் கொள்ள விரும்புகின்றவர்கள், ஊடக ஆர்வலர்கள், சமூக வலைத்தளங்கள் மற்றும் செய்தி இணையங்களை செயற்படுத்துகின்றவர்கள் அனைவரும் வயதெல்லையின்றி இச்செயலமர்வில் பங்குபற்றி பயன்பெறலாம்.

பங்கு பற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக தகவல்கள் மற்றும் பதிவுகளுக்கு, ரஸா மல்ஹர்தீன்

0777 162 511

# பேஸ்புக்கில் உங்களுக்கு, எதிராக இட்டுக்கட்டுகிறார்களா..?



சமூக வலைத்தளங்களில் தனிநபருக்கு எதிராகவோ அல்லது நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து உடனடியாக அறியத் தருமாறு காவல்துறை தலைமையகம் கேட்டுகொண்டுள்ளது.

முகபுத்தகம் உள்ளிட்ட அனைத்து சமூக வலைத்தளங்களிலும் ஒருவருக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்கு அநாகரிகமான இடுகைகள் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

ஆபாச நடிகர் நடிகைகளின் உடலையும், பழிவாங்க நினைப்பவரின் தலைப்பகுதியையும் இணைத்து பதிவேற்றம் செய்யும் கலாசாரம் இலங்கையில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதாக காவற்துறை தலைமையகம் சுட்டிக் காட்டியுள்ளது. இது தொடர்பில் 0112 320 141/ 0112 320 142/ 0112 320 143/ 0112 320 144/ 0112 320 145 அல்லது 0112 326 979 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு சைபர் பிரிவிற்கு அறிவிக்க முடியும், என்பதோடு இடுகைகளை அகற்றி கொள்வதற்காக 0112 691 692 என்ற இலக்கத்திற்கு அறிவிக்க முடியும் என்பதோடு report@cert.gov.lk என்ற இணையத்தள முகவரிக்கு அறிவிக்குமாறும் கேட்டுகொள்ளப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களில் ஆபாச புகைப்படங்கள் காணொளிகளை பதிவேற்றம் செய்தல், தகாத வார்த்தைகளால் விமர்சனம் செய்தல், மத ரீதியான கருத்துக்களை தவறான வழியில் பயன்படுத்துதல், விபசாரத்திற்கான விளம்பரங்களை மேற்கொள்ளுதல், போதைப்பொருள் விற்பனைக்கான தொடர்புகளை அறிவித்தல், தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான எழுத்துரு அல்லது காணொளி பதிவேற்றங்கள் மேற்கொள்ளல் உள்ளிட்ட முதன்மை குற்றங்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறான சட்டவிரோத ஈடுபடுவர்கள் தொடர்பிலும் அவர்களின் குடும்ப பின்னணி தொடர்பிலும் ஊடகங்களில் பகிரங்கமாக பொது விளம்பரம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சம்மாந்துறையில் மூன்று ஓய்வுபெற்ற அதிபர் திலகங்களுக்கும் மற்றும் கலை இலக்கிய துறைகளில் பங்காற்றிய மகான்களுக்குமான நினைவுகூர் நிகழ்வு பாவலர் பஸீல் காரியப்பர் ரசிகர் வட்டம் -ஸ்ரீலங்கா எனும் அமைப்பின் ஏற்பாட்டில் அதனுடைய ஸ்தாபிதத் தலைவர். தேசமான்ய. ஜலீல் ஜீயின் தலைமையிலும் நாடறிந்த ஒலிபரப்பாளரும் இளம்புரவலர், மனித நேயன் இர்ஷாட் ஏ. காதர் அவர்களின் [illegible] கல்லூரியில் நடைபெற்றது. (சாஜித் அலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனும் எங்களை ஒன்றிணைக்காவிட்டால்...

நேசன்

உலகில் நீதி செத்துமடியவில்லை. அது மொத்தமாக செத்து மடிகின்ற வேளையில் உலகம் இருக்கப் போவதுமில்லை. அநீதியும் அநியாயமும் எந்தக் கொம்பனிடமிருந்து கோலோச்சினாலும் அதற்கெதிராக எங்கோ ஒரு மூலையிலிருந்து எவனோ ஒரு ஆண்டியேனும் குரல் கொடுக்காமல் இருந்ததில்லை இந்த உலகில்.

பலஸ்தீன் விவகாரமும் உலகில் நீதிக்கும்-அநீதிக்கும், நியாயத்துக்கும்-அநியாயத்துக்கும், சத்தியத்துக்கும்-போலிக்குமிடையிலான போராட்டமாக உலகெங்கும் அங்கீகரிக்கப்பட்டு வருகிறது என்பதைத்தான் ஐக்கிய நாடுகள் சபையின் 128 நாடுகளின் வாக்களிப்பு சொல்லுகிறது. தனது அடாவடித்தனத்தால் உலகையே ஆட்டிப் படைக்கின்ற அமெரிக்காவின் ஜெரூசலம் பிரகடனத்துக்கு எதிராக உலகின் வறுமையில் உழலுகின்ற நாடுகள், அனைத்துக்கும் அமெரிக்காவிலேயே தங்கியிருக்கும் நாடுகள், அமெரிக்காவின் கைப்பொம்மைகள் என உலகின் பெரும்பாலான நாடுகள் வாக்களித்தன.

என்னை எதிர்த்து நின்றால் உன் முதுகெலும்பையே முறிப்பேன் என்று நாட்டுப்புறச் சண்டியனின் பாணியில் அமெரிக்கா தனது அட்டகாசத்தை அரங்கேற்ற முயற்சித்த போதும் நீதியை ஆதரிக்கின்ற உலகப் பெரும்பான்மைக்கு முன்னால் 'உலகத்தின் பொலிஸ்காரன்' சற்று ஆடித்தான் போகவேண்டியிருந்தது.

இந்த எதிர்ப்புக்களுக்குக் காரணமாக உலகின் பல்வேறு நாடுகளிலும் நிகழ்த்தப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளின் அழுத்தங்கள் அமைந்திருந்தன. பலநாடுகளிலும் நீதியை விரும்பும் மக்கள் வீதிகளில் இறங்கி, பலஸ்தீனில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று போராடினார்கள். அரசுகளின் கொள்கைகளையும் போக்குகளையும் தாண்டி மக்களின் நீதிக்கான குரலுக்கு பல நாடுகள் அடிபணிய வேண்டியிருந்தன. முஸ்லிம், அரபு நாடுகளுக்கு அப்பால் உலக மக்கள் அனைவரும் திரண்டு இந்த அநீதிக்கு எதிராக ஒன்றுதிரண்டார்கள்.

அரசியல் நிலைப்பாடுகளையும் தாண்டி இலங்கையிலும் இதுபோன்றதொரு எதிர்ப்புப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, கூட்டு எதிர்க்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகள், முஸ்லிம் அரசியல் கட்சிகள் என அனைத்துக் கட்சிகளும், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் போன்ற சிவில் நிறுவனங்களும் ஒரே மேடையில் ஒன்று திரண்டன. பலருடைய கணிப்பின்படி இலங்கையில் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் ஒன்றிணைந்து சங்கமித்த முதல் தருணமாக பலஸ்தீனுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்பதற்கான இந்தப் பேரணி அமைந்திருந்தது.

இலங்கை மக்கள் இதனை ஒரு முஸ்லிம் பிரச்சினையாகப் பார்க்கவில்லை. மாறாக நீதிக்கான குரலாகவே அங்கு உரையாற்றியவர்களின் குரல்கள் ஓங்கி ஒலித்தன. அமைச்சர் ராஜித சேனாரத்ன அங்கு உரையாற்றுகையில், இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு, இஸ்ரேல் இராணுவத்தின் அடக்குமுறை, பலஸ்தீனின் செயற்பாடுகளையெல்லாம் முடக்கி அம்மக்களை அடிமைகளாக மாற்றும் அநியாயங்களை நாங்கள் அங்கு விஜயம் செய்த போது கண்டோம். இந்த ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தற்போது முழு உலகின் கவனமும் திரும்பியுள்ளது. இவற்றுக்கெதிரான பலஸ்தீன மக்களின் நியாயமான போராட்டத்தை உணர்ந்த எவரும் பலஸ்தீனுக்கு ஆதரவளிக்காமல் இருக்க முடியாது என்று தெரிவித்தார்.



ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க உரையாற்றும்போது, நடுநிலையாகவும் மனிதாபமான ரீதியிலும் சிந்திக்கும் நாடுகளே உலகில் அதிகமாக உள்ளன என்பதனை பலஸ்தீன் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை நடத்திய வாக்கெடுப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு, இஸ்ரேலின் அச்சுறுத்தலான செயற்பாடுகள் போன்றவற்றை புறந்தள்ளி உலக நாடுகள் அனைத்தும் நியாயத்தின் பக்கம் நின்றுள்ளன. இன்று உலக நாடுகளின் நடுநிலையான செயற்பாடுகள் அமெரிக்காவை புறமொதுக்கியுள்ளது. பலஸ்தீன் விவகாரத்தில் நாங்கள் என்றுமே அவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுவோம், அதில் மாற்றத்துக்கு இடமில்லை என்று கூறினார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் தனதுரையில், உலகின் நியாயமான அபிப்பிராயங்களை பலஸ்தீன் வென்றுள்ள இந்தத் தருணத்திலிருந்து பலஸ்தீனின் விடுதலைக்கான அடுத்த கட்ட போராட்டங்கள் துவங்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டியூ குணசேகர, பலஸ்தீனை முன்னிலைப்படுத்தி உலகம் நீதி நியாயத்தின் பால் ஒன்று திரள வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று குறிப்பிட்டார்.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பலஸ்தீனின் விடுதலைக்கான போராட்டம், பலஸ்தீன் நாட்டினதோ, அங்கு செறிந்து வாழும் முஸ்லிம்களினதோ போராட்டமாகவன்றி முழு உலகிலும் நீதி நியாயத்தை நேசிக்கின்ற மக்களின் போராட்டமாக தற்போது வடிவெடுத்துள்ளது. இது பலஸ்தீனின் சாத்வீகப் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகும். தென் ஆபிரிக்க மக்களின் விடுதலை வீரராக உலகெங்கும் மதிக்கப்படும் நெல்சன் மண்டேலா, பலஸ்தீன மக்களுக்கு சுதந்திரம் கிடைக்கும் வரை, தென் ஆபிரிக்க மக்களின் சுதந்திரப் போராட்டம் முழுமையடைவதில்லை என்று குறிப்பிட்டிருந்தார். பலஸ்தீன் பூமி பலஸ்தீனர்களுக்குரியது, அது அவர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என மகாத்மா காந்தி குறிப்பிட்டிருந்தார்.

இப்படியாக உலகின் நீதி நியாயத்துக்காகப் போராடியவர்களையும் நீதி நியாயத்தை நேசிப்பவர்களையும் ஒன்றுபடுத்துகின்ற மையப்புள்ளியாக இன்று பலஸ்தீன் விவகாரம் மாறியிருக்கிறது. இதனை நோக்கி முழு உலக முஸ்லிம்களையும் எப்படி ஒன்றுபடுத்த முடியும் என்பதனை அரபு மற்றும் முஸ்லிம் நாடுகள் திட்டமிட வேண்டும்.

அதேபோல இலங்கை முஸ்லிம்களை ஒன்றுபடுத்தக் கூடிய சாதனமாகவும் பலஸ்தீன் விவகாரத்தை கையாள முடியும். உலக நாடுகளும் இலங்கையின் சிதறுண்ட பல்வேறு கட்சிகளும் பலஸ்தீன் விவகாரத்தில் நீதியின் பேரால், மனிதாபிமானத்தின் பேரால் ஒன்றுபட்டிருக்கின்றன. இதுபோல இலங்கையிலுள்ள முஸ்லிம் தலைமைகள், நிறுவனங்கள், அமைப்புக்கள், ஜமாஅத்துக்கள், தரீக்காக்கள் அனைத்தும் பலஸ்தீன் விவகாரத்தில் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்த முடியும். ஜே.வி.பி., ஐ.தே.க., சு.கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பவற்றை விட இலங்கை முஸ்லிம்களுக்கு பலஸ்தீன் விவகாரம் அவர்களது ஈமானுடன் தொடர்புபட்டது.

முதல் கிப்லா என்ற வகையில் முஸ்லிம்கள் அனைவருக்கும் இந்த விவகாரம் பொதுவானது. அதிலும் நீதியையும் நியாயத்தையும் விரும் பாதவர்கள் முஸ்லிம்களாக இருக்க முடியாது என்ற வகையிலும் முஸ்லிம்களுக்கு பலஸ்தீனின் நீதிக்கான போராட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது.

நாட்டின் அனைத்துத் தரப்பினரும் பலஸ்தீனின் நீதிக்காக ஒன்றுபட்டிருந்த வேளையில் கூறுகளாகப் பிரிந்துள்ள முஸ்லிம் சமூகம் இது தமது முகாமுடன் சம்பந்தமில்லாதது என்ற தோரணையில் நடந்து கொண்டதாகவே தோன்றுகிறது. நடைபெற்ற இந்தப் பேரணிக்கு நாடு முழுவதிலும் இருந்து மக்களைத் திரட்டுவதற்காக முஸ்லிமல்லாத பலரும் பல்வேறு விதமான பிரச்சாரங்களை மேற்கொண்டு மக்களுக்கு (பக்.14)

Real Access Program
இப்பாடநெறியின் மூலம் 5 தகைமைகளைப் பெறலாம்
- Diploma in Computer studies
- Diploma in Graphic designing
- Diploma in Web designing
- Diploma in Hardware
- Diploma in English

3 Month Full Time
Weekly 05 Days 8:30 to 4:30
ஆங்கிலம் மற்றும் கணனிக் கல்வியை அடிப்படையில் இருந்து கற்கும் விதமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறியாகும்
பாடநெறி ஆரம்பம் Batch - 26 January - 15
02 சர்வதேச UK+ ISO தரச் சான்றிதழ்கள் உட்பட 06 DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும்
TOEIC City & Guilds EDFOCUS

Diploma in ENGLISH+IT with Skills Training
குறகிய காலத்தில் ஆங்கிலத்தில் கதைக்க வைக்கும் ஒரே பாடநெறி
கணனி பயிற்சியுடன் கூடிய ஆங்கிலப் பாடநெறி
02 Months
முழுநேர வதிவிட / வதிவிடமற்ற
தினமும் 03 மணித்தியாலத்துக்கு அதிகமான பேச்சுப் பயிற்சி
IT · MS-OFFICE HARDWARE COMP-ACCOUNTING
- WITH GRAMMAR -
I Reading I Writing I
I Listening I Speaking I
பாடநெறி ஆரம்பம்
69th Batch Jan - 11
70th Batch Jan - 18
Weekly 06 Days 9:00 to 4:00
பாடநெறி முடிவில் சர்வதேச ISO தரச் சான்றிதழ் உட்பட 03 Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்

DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
Contents
- Petty cash& Day book
- General ledger, journal
- Bank reconciliation statement
- Debtors and creditors ledger
- Sales and purchase registers
- Fixed asset registers
- Inventory
- Profit and loss accounts
- Balance sheets
- Payroll

LEARN 08 PACKAGES
- MS Excel
- MS Access
- MYOB
- Quick Books
- ACCPAC
- SAGE-50
- Peachtree
- Tally

Duration: 1-3 Months
Full Time/Part Time
(Weekdays/Weekends)
Free Study Pack with Software CD
Individual Classes

Diploma In HOTEL MANAGEMENT & Hospitality
- Front Office
- Food & Beverages
- International Cookery
- Language - French & English
- IT (Information Technology
- House Keeping
- Pastry & Bakery

Duration 4 Months
பாடநெறி ஆரம்பம் Batch 14 January - 11
உயர்தரமான நட்சத்திர ஹோட்டல்களில் கொடுப்பனவுகளுடன் கூடிய ஆறுமாத தொழில் பயிற்சி வழங்கப்படும்

Teacher Training Program in Kandy
Well qualified panel of Lecturers with American Qualification
- DIPLOMA IN MONTESSORI TEACHER TRAINING -(AMI)
- DIPLOMA IN CHILD PSYCHOLOGY
- DIPLOMA IN PRE SCHOOL TEACHER TRAINING
- PROFESIONAL ENGLISH

6 மாதம் Weekends
பாடநெறி முடிவில் 2 சர்வதேச சான்றிதழ்கள் உட்பட 5 சான்றிதழ்கள் வழங்கப்படும்.
With UK & Indian Accreditation
பாடநெறி ஆரம்பம் Batch 14 January - 14
TOEIC City & Guilds EDFOCUS

DIPLOMA IN AIR CONDITIONING & REFRIGERATION
- A/C Repairing
- Refrigeration repairing
- House wiring

100% செயல்முறைகளுடன்
Start Jan - 08
01 Month (Full Time) - Weekly 05 Days

AUTO CAD Full Time / Part Time | G.C.E. O/L, A/L | Diploma in AUTO CAD | Diploma in 3D AUTO CAD | Advanced Diploma in AUTO CAD
★ ★ ★ INDUSTRIAL TRAINING CAN BE PROVIDED ★ ★ ★

ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான தங்குமிட வசதிகள் உண்டு
GOLDEN COLLEGE
548, Peradeniya Road,Kandy.
No:126, Kandy Road, Thihariya
Kandy 0777 222 529
THIHARIYA 0777 222 528

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## ஊழலை உள்ளூர் மட்டங்களுக்கு நகர்த்தாமல் பாதுகாக்க வேண்டும்

ஊழல் நிறைந்து போய் நாட்டைக் குட்டிச்சுவராக்குகிறது மஹிந்தவின் குடும்ப அரசாங்கம் என்று மக்களுக்கு எடுத்துச் சொல்லியே தற்போதைய கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. இந்த ஜனவரி 08 ஆம் திகதியுடன் மூன்று வருடங்கள் நிறைவடையும் நிலையிலும் இதுவரை மஹிந்த குடும்ப அரசாங்கத்தின் ஊழல்களை கூட்டரசாங்கம் வெளியிடவில்லை. மஹிந்த குடும்பத்தினா் செய்த மாபெரும் ஊழல்களையும் நிதி மோசடிகளையும் இந்த அரசாங்கம் மறைத்து வருகிறது. ஊழல் மோசடி வழக்குகள், ஊழல் குற்ற விசாரணைப் பிரிவுகள் என மக்களை ஏமாற்றி வழிநடத்தி, ஊழல் பேர்வழிகளை நாயகர்களாக்கி விட்டது கூட்டரசாங்கம். இந்த நிலையில் கூட்டரசாங்கத்தின் பிணைமுறி மோசடி விவகாரமும் தற்பொழுது சந்திக்கு வந்திருக்கிறது.

மொத்தத்தில் ஊழல் என்பது இலங்கை அரசாட்சியின் துணைக் கலாச்சாரமாகவே மாறியிருக்கிறது. யார் வந்தாலும் ஊழலின்றி அரசியல் செய்ய முடியாது என்ற கருத்தையே மக்கள் மனதில் இது பதிய வைத்திருக்கிறது. இந்தப் பதிவுதான் மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்குக் கொண்டு வருவதற்கும், அவரை அரியணையில் ஏற்றிப் பார்ப்பதற்கும் மக்களைத் தள்ளி இருக்கிறது. தலைமைகள் மாறினாலும் இந்த ஊழல் கலாச்சாரம் மட்டும் இனி மாறுவதற்கில்லை என்ற நிலைக்கு இது இலங்கையின் தலைமைத்துவப் பண்பாக மாறியிருக்கிறது.

முன்னால் வழிநடத்துச் செல்லும் நண்டு பின்னால் உள்ள நண்டுகளைப் பார்த்து நேராகப் போ என்று சொல்வது போல்தான் இலங்கையின் இன்றைய அரசியல் கலாச்சாரம் மாறியிருக்கிறது. நாட்டை முன்னின்று வழிநடத்துச் செல்லும் தலைமைகள் பிழை செய்துவிட்டு தமக்குக் கீழ் உள்ளவர்கள் நேர்வழியில் செல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பது நடைமுறைக்குப் பொருந்தாதது.

தற்பொழுது நாடு முழுவதும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விட்டார்கள். இவர்களில் ஊழல் பேர்வழிகள், பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டவர்கள், போதைவஸ்து வியாபாரங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள், நிதி மோசடிகளில் ஈடுபட்டவர்கள் என பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கும் ஆளானவர்கள் உள்ளூராட்சி சபைகளில் அங்கத்தவராவதற்காக தேர்தலில் நின்றிருக்கிறார்கள். இவர்களுக்கு இருக்கின்ற அதிகாரப் பலத்தினால் இவர்கள் வாக்குகளைப் பெற்று உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவாகவும் இடமிருக்கிறது. இம்முறைய தேர்தல் விதிகளில் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களையும் தேர்தலில் நிற்பதற்கு சட்டம் இடமளித்திருக்கிறது என்பது இலங்கை பேணி வருகின்ற பண்பாட்டைச் சிதைப்பதற்கான சிறந்த எடுத்துக் காட்டாகும்.

நிலைமை இவ்வாறு அமையும் என்றிருந்தால் நாட்டில் நீதி, நியாயத்துக்கு இடமின்றி அராஜகமே ஆதிக்கம் செலுத்தும் நிலைமை வந்து விட முடியும். தமக்கு முன்னாலுள்ளவர்கள் மோசடியிலும் துஷ்பிரயோகங்களிலும், ஊழலிலும் ஈடுபடுவதைப் பார்த்து, அதற்கெதிராக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையை அவதானிக்கின்ற எவரும் தாமும் அதே செயற்பாட்டில் இறங்காமல் இருக்க மாட்டார்கள் என்பதற்கு எந்தவித உத்தரவாதமுமில்லை. இந்த வகையில் ஊழலும் மோசடியும் இலங்கையின் துணைக் கலாச்சாரமாக மாறுவதற்கான வாய்ப்புக்களே அதிகரித்துச் செல்லும் நிலையில், இந்த இழி நிலையிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கான பொறுப்பை மக்கள் தமது கைகளில் எடுக்க வேண்டியுள்ளது.

மேலேயுள்ள, ஊழலை அங்கீகரிக்கின்ற தலைமைகளுக்குப் பாடம் புகட்டும் சந்தர்ப்பமாக மக்கள் இந்த உள்ளூராட்சித் தேர்தலை பயன்படுத்திக் கொள்ள முடியும். கீழ் மட்டத்திலிருந்து இந்த சுத்திகரிக்கும் வேலையை மக்கள் துவங்குகின்ற பொழுதுதான் நாட்டின் தலைமைகளையும் சுத்தம் செய்ய முடியும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல.: 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி: 011-5353635
பெக்ஸ்: 011-5335500
மின்னஞ்சல்: srockwood@pccsl.lk
இணையத்தளம்: www.pccsl.lk

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் அடிப்படை நோக்கங்கள் மறைந்து செல்லுமா?

• கலாநிதி ஜயந்த லால் ரத்னசேகர

2018 பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தற்பொழுது சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் என 341 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 8356 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இம்முறை தெரிவு செய்யப்படவுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை முன்பை விட இரு மடங்கால் அதிகரித்துள்ளது. தொகுதி அடிப்படையில் தெரிவுசெய்யப்படுகின்ற 60 வீதத்திற்கு (5091) மேலதிகமாக, இன்னும் 40 வீதமானவர்கள் விகிதாசார முறையில் தெரிவுசெய்யப்பட உள்ளதால் உறுப்பினர்களின் எண்ணிக்கை இம்முறை அதிகரித்துள்ளது.

விகிதாசார முறையிலும் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவதால் அது சிறுபான்மைக் கட்சிப் பிரதிநிதித்துவங்களுக்கு வழி கோலுகின்றது. அத்துடன் இது ஜனநாயக பூர்வமான முறையாகவும் உள்ளது. இன்னுமொரு பக்கத்தில் பார்த்தால், ஜனநாயகத்தின் பெயரால் கூடுதலான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களைப் பராமரிப்பது எம்மைப் போன்ற சிறியதொரு நாட்டிற்கு எவ்வளவு தூரம் பொருந்துகின்றது என்கின்ற கேள்வி எழுகின்றது. அதிகூடிய செலவில் பராமரிக்கப்படுகின்ற உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களால் எதிர்பார்க்கப்படும் அடிப்படை நோக்கங்கள் நிறைவேறுகின்றதா? என்கின்ற கேள்வி எழுகின்றது.

2018 பெப்ரவரியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பல வழிகளில் சிறப்பம்சம் பெறுகின்றது. கடந்த இரண்டரை வருட காலப்பகுதியில் உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதித்துவம் இருக்கவில்லை என்பதுடன், அம்மன்றங்கள் ஆணையாளர்களின் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தன. உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தொகுதி நிர்ணயம் தொடர்பில் மேலெழுந்த பிரச்சினைகளின் காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அடிக்கடி பிற்படுத்தப்பட்டு வந்தது.

ஐ.தே.க. - சு.க. கூட்டரசாங்கம் மக்கள் விருப்பை பரீட்சித்துப் பார்ப்பதில் அச்சம் கொள்வதால் தேர்தலை பிற்படுத்தி வருவதாக எதிரணிகள் குற்றஞ் சுமத்தின. இவ்வகையில் பார்க்கும் போது இரண்டு வருடங்கள் கழிந்தேனும் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் புதிய முறையின் கீழ் ஒரே தினத்தில் தேர்தலை நடாத்தத் தீர்மானித்திருப்பதை பாராட்ட வேண்டும்.

அத்துடன், பொதுவாக பெரும்பாலான மக்கள் ஊழல்வாதிகள் எனக் கருதுகின்ற அரசியல்வாதிகளின் ஆளுகையை விட அரசாங்க அதிகாரிகளிடமிருந்து (ஆணையாளர்கள்) சிறந்ததொரு ஆட்சி கிடைக்கும் என்கின்ற எதிர்பார்ப்பில் இருந்தனர். எனினும் கூடுதலான உள்ளூராட்சி மன்றங்களில் ஆணையாளர்களின் ஆளுகை திருப்திகரமானதாக அமையவில்லை. சில ஆணையாளர்கள் எப்.சி.ஐ.டீ, நிதி ரீதியிலான விசாரணைகளுக்கு அஞ்சி முடிவுகள் எடுப்பதை வேண்டுமென்றே இழுத்தடித்து வந்துள்ளனர்.

அதனால் தமது உள்ளூராட்சி சபைக்கு, நகர சபைக்கு தங்களுடைய பிரதிநிதியொருவரை தெரிவுசெய்துகொள்வதற்கு காலங்கடந்தேனும் சந்தர்ப்பம் கிட்டியிருப்பதானது பலரது சந்தோசத்திற்கு உட்பட்டுள்ளது. அதன்படி பார்க்கும் போது தேர்தல் சிறியதாயினும், அது தொடர்பிலான ஆர்வம் இன்னும் சில நாட்களில் அதிகரிக்கும்.

இம்முறை தேர்தல் கலப்பு முறையில் நடப்பதால் அது 15.7 மில்லியன் வாக்காளர்களுக்கும் புதிய அனுபவமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. விருப்பு வாக்கு மற்றும் பல நிறங்களிலான போஸ்டர்களுக்கும் அடிமைப்பட்டுள்ள ஒரு சில அரசியல்வாதிகளுக்கு புதிய தேர்தல் முறையில் நுழைவது கடினமாக இருக்கும். இம்முறை தேர்தல் அவர்களுக்கு கலகலப்பாக இருக்காது. சிரித்த முகத்துடன் கூடிய வேட்பாளர்களது போஸ்டர்கள் எத்தனை அடித்தாலும் இம்முறை குறிப்பிட்ட தொகுதிக்குள் கட்சிகளுக்கு இடையிலான போட்டியேயன்றி விருப்பு வாக்கு போட்டியொன்று அங்கு காணப்படாது.

தொகுதிக்குள் (கட்சி பேதங்களின்றி) தான் விரும்பிய வேட்பாளருக்கும் பொதுவாக தான் விரும்பிய கட்சி என்ற அடிப்படையில் இரண்டு வாக்குகளை பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு வழங்கப்படுவதன் ... சிலர் தர்க்கித்து வருகின்றனர். இது பரந்ததொரு கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட வேண்டிய விடயம். மறுபுறத்தில் வாக்குச்சீட்டு உள்ளிட்ட வாக்களிக்கும் முறையையும் இன்னும் மேம்படுத்த வேண்டியுள்ளது.

இம்முறை தேர்தல் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் கீழேயே நடைபெறுகின்றது என்பது மற்றுமொரு சிறப்பம்சமாக உள்ளது. புதிய சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் தேர்தல் ஆணையாளரே செயற்படுகின்றார். அவர் பக்கச்சார்பற்றவர் என்கின்ற பொதுவானதொரு கருத்துள்ளது. இதனால் பெப்ரவரியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நீதியானதும் சுயாதீனமானதுமான தேர்தலொன்றாக அமையும் என்பதை எதிர்பார்க்க முடியும்.

இம்முறை தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களிலேயே வாக்குகள் எண்ணப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்படவுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளரின் பெயர் வாக்குச் சாவடிகளிலேயே அறிவிக்கப்படும்




முறை பழைய கம்சபா முறையில் காணப்பட்டது. இன்று அதற்கு ஒரு சிலர் அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர். இம்முறையின் மூலம் வாக்கெண்ணும் நடவடிக்கையின் நம்பகத் தன்மை மென்மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது என்பதே எமது கருத்து. கடந்த காலப்பகுதியில் வாக்குச் சாவடிகளிலிருந்து வாக்கெண்ணும் நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்லும் போது ஏற்பட்ட முறைகேடுகள் ஏராளம் பதிவாகியுள்ளன.

எவ்வாறிருப்பினும், உள்ளூராட்சி மன்றங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் மற்றும் அவற்றுக்கு மக்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்துகொள்வதன் அடிப்படை நோக்கங்கள் இன்று ஒரு சிலருக்கு மறந்து போயிருப்பது விளங்குகிறது. எமது நாட்டில் தற்பொழுது அரச அதிகாரம் 3 வழிகளில் அமலாகிறது. மத்திய அரசு, மாகாண அரசு, உள்ளூராட்சி மன்றங்கள் என்பவையே அவை.

இவற்றுள் உள்ளூராட்சி சபைகளே மக்களுக்கு மிக நெருங்கிய நிறுவனமாக உள்ளது. மக்கள் தமது அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கூடாகவே தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். மக்கள் சுகாதாரத்தை பாதுகாத்தல், பிரதேசத்தின் கழிவு முகாமைத்துவம் உள்ளிட்ட சூழல் பாதுகாப்பு, புதிய கட்டிட நிர்மாணங்களை நிர்வகித்தல், வீதி விளக்குகள் உள்ளிட்ட பிரதேசத்தில் உள்ள வீதிகளை பராமரித்தல் என்பதாக உள்ளூராட்சி மன்றங்களால் எதிர்பார்க்கப்படும் சேவைகள் பல உள்ளன.

இப்பணிகளை நிறைவேற்றுவதற்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு பல்வேறு வருமான வழிகள் உள்ளன. பிரதேச மக்கள் செலுத்துகின்ற குத்தகை வரி, வியாபாரங்களின் மூலம் அறவிடப்படும் வரி, கட்டிடங்களை வாடகைக்கு வழங்குவதின் மூலம் பெறப்படும் வரி, மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளுக்கூடாக கிடைக்கும் நிதி என உள்ளூராட்சி மன்றங்களுக்கு பல்வேறு வருமான வழிகள் உள்ளன.

எனினும் மக்கள் பிரதிநிதிகள் அந்நிதியை பயன்படுத்தும் முறை தொடர்பில் அதிருப்திகளே அதிகம் காணப்படுகின்றன. அந்நிதியை பொதுநலன் கருதி பயன்படுத்துகிறார்களா என்பதில் திருப்திகரமான பதிலேதும் இல்லை. உள்ளூராட்சி மன்றங்களின் கூடுதலான பிரதிநிதிகள் ஊழலுக்கு அடிமைப்பட்டுள்ளனர் என்பதை கடந்த காலப்பகுதியில் பல்வேறு சம்பவங்களுக்கூடாக அறிந்து கொள்ள முடிகின்றது.

போதைத் தூள் வியாபாரத்தில் ஈடுபடும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் குறித்தும், பிரதேச வியாபாரிகளிடம் முகமன் பெறும் பிரதேச சபைத் தலைவர்கள் குறித்தும் கடந்த காலத்தில் நிறையவே அறியக் கிடைத்தது. வெளிநாட்டுப் பெண்கள் உட்பட பல பெண்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்து கொண்டாடிய பிரதேச சபைத் தலைவர்கள் தொடர்பிலும் செய்திகள் வெளிவந்தன. அவ்வாறான நபர்களை உள்ளூராட்சி சபைகளிலிருந்து துரத்தியடிக்கும் காலம் தற்பொழுது எழுந்துள்ளது.

பெப்ரவரி 10ஆம் திகதி வாக்குச் சாவடிகளுக்கு செல்லும் மக்கள் இவ்விடயங்களை நன்றாக மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். உள்ளூராட்சி சபைகளின் மூலம் நிறைவேற வேண்டிய சேவைகளை சரியான முறையில் நிறைவேற்றுவதற்கு இயலுமையும், அர்ப்பணிப்பும் உள்ளவர்களை தெரிவு செய்துகொள்ள பெப்ரவரி 10 ஆம் திகதி வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லும் மக்கள் சிந்தனையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இல்லாது போனால் சிறிய தேர்தலின் அடிப்படை இலக்குகள் நிறைவேறாமல் போகும்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் விஷேட அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது.

2015 ஆகஸ்ட் பாராளுமன்ற தேர்தலின் பின்னர் நாடு முழுவதிலும் நடைபெறுகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல், மைத்திரி-ரணில் கூட்டரசாங்கத்தின் செல்வாக்கை உரசிப் பார்க்கும் மக்கள் கருத்துக் கணிப்பொன்றாக மாறியுள்ளது. ஜனாதிபதி மற்றும் பிரதமரினது செல்வாக்கை ஒரே தடவையில் மதிப்பிடும் தேர்தலொன்றாக மாறியுள்ளது. அத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் தனது தலைமைத்துவத்தை எவ்வளவு தூரம் உறுதிப்படுத்திக்கொண்டுள்ளார் என்பதையும் அதன் மூலம் மக்கள் விருப்பை எவ்வளவு வென்றுள்ளார் என்பதையும் பரீட்சித்துப் பார்க்கும் தேர்தலொன்றாகவும் இது அமைந்துள்ளது.

அது மாத்திரமல்லாமல் பொதுஜன முன்னணியில் தேர்தல் போராட்டத்தை வழிநடத்தும் மஹிந்த ராபக்ஷவுக்கும் இத்தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. கடந்த காலப்பகுதியில் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் கூட்டங்களில் கலந்துகொண்ட மக்கள் தங்களது வாக்குகளை கட்சிக்கு அளிப்பார்களா என்பதை இத்தேர்தலில் கண்டு கொள்ள முடியும். மஹிந்த அணியினர் தெரிவிப்பது போன்று கிராமிய மக்களின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவா என்பதையும் இத்தேர்தல் பெறுபேறுகள் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

உட்கட்சிப் பூசல்களுக்கு முகம்கொடுத்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இத்தேர்தல் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. கிராமத்தின் அதிகாரத்தை எங்களுக்கு வழங்குங்கள் என அறைகூவல் விடுக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் பலத்தை உரசிப்பார்க்கும் தேர்லாகவும், ஏனைய சிறுபான்மை கட்சிகளின் அடிமட்ட வாக்கு வங்கிகளின் நிலைகுறித்து பரீட்சித்துப் பார்க்கும் தேர்தலொன்றாகவும் இது அமையவுள்ளது.

இத்தகைய பின்னணியில் சகல கட்சிகளும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தங்களாலான பிரயத்தனங்களை மேற்கொள்ளும் என்பது திண்ணம். எனினும் இவ்வாறு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பொதுத் தேர்தல் என்கின்ற நிலைமைக்கு மாற்றியிருப்பதன் மூலம் சிறிய தேர்தலின் அடிப்படை நோக்கங்கள் சிதைந்து போகுமோ என்கின்ற அச்சம் எமக்குள் வலுக்கின்றன.

மறுபுறத்தில் அரசியல் தலைவர்கள் எதைக் கூறினாலும் எமக்கு தேவையான பொருத்தமான உறுப்பினர்களை தெரிவுசெய்து கொள்ளும் உரிமை எம்மிடமே உள்ளது. —


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




றவூப் ஸெய்ன்

# தேவை: விழுமிய அரசியல்














2018 ஐ ஒரு தேர்தலுடன் எதிர்கொண்டுள்ளோம். உள்ளூராட்சித் தேர்தலை நாடு எதிர்நோக்கியுள்ள இத்தருணத்தில் மக்களின் மனோநிலையிலும் செயற்பாடுகளிலும் புரட்சிகரமான மாற்றம் அவசியமாகியுள்ளது.

வழமை போன்று தேர்தல் காலங்களில் பிரச்சார மேடைகளில் முன்வைக்கப்படும் எதிரும் புதிருமான விவாதங்கள், வெற்று வாக்குறுதிகள் மக்களுக்கு பூளித்துப் போய்விட்டன. எதை மறக்க வேண்டும் என்று அறிந்து வைப்பதே அரசியல்வாதியின் ஞாபகம் என்பார்கள். அது போல் இறந்த கால வாக்குறுதிகள் காற்றில் கரைந்த நிலையில் மீண்டும் தேர்தல் களத்திற்கு வந்துள்ளார்கள். பிரச்சாரம் சூடு பறக்கத் தொடங்கியுள்ள உள்ளூராட்சித் தேர்தல், சுமாராக ஒரு பாராளுமன்றத் தேர்தலின் முக்கியத்துவத்தைப் பெற்று வருகின்றது.

தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம் மஹிந்தவை பிரதமராக்கும் பயணத்தை ஆரம்பிக்கிறோம் என்று முன்னாள் பொருளியல் டியூஷன் மாஸ்டர் பந்துல குணவர்தனவும், முன்னாள் மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் கூறியிருப்பது 2018 இன் முதல் அரசியல் நகைச்சுவையாகக் கொள்ளப்படலாம்.

"50 ஆண்டுகளாக சுதந்திரக் கட்சி யின் அங்கத்தவராக இருக்கும் என்னை முடியுமானால் கட்சியிலிருந்து நீக்கட் டும் பார்க்கலாம்" என மஹிந்த சவால் விடுத்துள்ளார். மஹிந்த அணியினர் தனித்துப் போட்டியிட்டால் தராதரம் பார்க்காமல் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பேன் என்ற மைத்ரியின் கூற்றுக்கு மஹிந்த இப்படி எதிர்வினையாற்றுகிறார்.

தேர்தல் என்று வந்துவிட்டால் பிரச்சார மேடைகள் வதந்திகளாலும் பரஸ்பர குற்றச்சாட்டுக்களாலும் போலியான வாக்குறுதிகளாலும் நிரம்பி வழிவதுண்டு. எதிர்த் தரப்பினரை ஊழல் மோசடிக்காரர்கள் எனவும் அபிவிருத்தியில் ஒரு துளியையும் செய்யாதவர்கள் என்றும் ஒவ்வொருவரும் அடுத்தவரை குறை கூறுவது வழக்கம். ஆனாலும், உணர்ச்சிக் கொந்தளிப்பின்போது வேட்பாளர்களில் சிலர் சில உண்மைகளைக் கசிய விடுவதும் உண்டு.

வவுனியா நகர சபை மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உள்ளூராட்சி வேட்பாளர்களுக்கு மத்தியில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், தமிழ்க் காங்கிரஸை நோக்கிக் கூறிய உணர்ச்சிகரமான வார்த்தைகள் தேர்தல் தருணத்தில் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியவை.

"112 பக்கங்களைக் கொண்ட இடைக்கால அறிக்கையில் 110 பக்கங்களை விட்டு விடுங்கள். முதல் இரண்டு பக்கங்களைப் பாருங்கள். சமஷ்டி, ஒற்றையாட்சி என்பன என்ன வென்று வர்ணித்து உடனடியாக ஒரு கூற்று முன்வைக்கப்படுகின்றது. ஒற்றையாட்சி இலங்கைக்கு உகந்ததல்ல எனக் கூறப்படுகின்றது. இது மூன்று மொழிகளிலும் இருக்கின்றது. இது எமது பின்னிணைப்பில் இல்லை. அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து எழுதிய இடைக்கால அறிக்கையில் ஒற்றையாட்சி நாட்டுக்குப் பொருத்தமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது" என்கிறார் சுமந்திரன்.

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திர குமாருக்கு சுமந்திரன் ஆற்றும் இந்த எதிர்வினையில் முஸ்லிம்களைத் திடுக்கிடச் செய்யும் இரண்டு உண்மைகள் உள்ளன. இடைக்கால அறிக்கை சமஷ்டியை ஆதரிக்கின்றது என்பது மிகத் தெட்டத் தெளிவான உண்மை. இரண்டாவது, அனைத்துக் கட்சிகளும் சேர்ந்தே இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளன என்பது இன்னொரு ஆபத்தான விடயம்.

தற்போது யானைச் சின்னத்தில் இணைந்து கேட்கும் முஸ்லிம் காங்கிரஸ் தானைத் தளபதிகளும் சேர்ந்துதான் இந்த அறிக்கையை எழுதியுள்ளனர். அதாவது அவர்களின் சம்மதமும் இங்கு பெறப்பட்டுள்ளது. ஒற்றையாட்சியை முடித்து சமஷ்டியை தமிழர்களிடம் கையளிப்பதற்கு ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளது முஸ்லிம் காங்கிரஸ். அதன் மூலம் வடக்கு கிழக்கு முஸ்லிம் சமூகத்தை நடுத்தெருவில் நிறுத்தப் போகின்றது. இந்த இலட்சணத்தில்தான் அது இன்று உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குப் பிச்சைக்காக கதவைத் தட்டுகின்றது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் தேர்தல் என்பது ஒரு தெருக்கூத்து. துரோகத்தின் தருணம். சந்தர்ப்பவாத கூட்டுகளின் சதிகாரத் திருவிழா. எதிரிகளை நண்பர்களாகவும் நண்பர்களை எதிரிகளாகவும் தற்காலிகமாக மாற்றிக் கொள்ளும் நாடகம். இந்த அரசியல் சூதாட்டத்திற்கு இறுதியில் பலியாக்கப்படுபவர்கள் அப்பாவி மக்கள்தான்.

முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமன்றி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துப் பாரம்பரிய முஸ்லிம் கட்சிகளும் வெறும் கொள்கையற்ற கூடாரங்களாகவே இருந்து வருகின்றன. எந்த முற்போக்கான கொள்கையும் செயல்திட்டமும் அவர்களிடம் இல்லை. சமூகத்தைப் பலியாக்கி, அதிகாரக் கதிரையை பத்திரமாய் பாதுகாப்பதே அவற்றின் ஒரே அக்கறை. பெரும்பாலும் அவை அறிக்கை வீரர்களையும் வாய் வீரர்களையுமே உருவாக்கியுள்ளன. சுயநலமே அவர்களின் மூலதனமாகியுள்ளது.

அன்று கட்சியுடன் ஒட்டிக் கொண்டு தேசியப் பட்டியல் மூலம் அமைச்சர் பதவியை அனுபவித்து வந்த பஷீர் சேகு தாவூத் இன்று மறைந்த தலைவரின் விமான விபத்து குறித்து அறிக்கை கோருகிறார். அன்று முஸ்லிம் காங்கிரஸின் செயலாளராக இருந்த ஹஸன் அலி இன்று முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பை உருவாக்கிக் கொண்டு, ஹக்கீம் தலைமைக்குப் பொருத்தமற்றவர் என்கிறார். வேதாந்தி என்று அறியப்படும் சேகு இஸ்ஸதீன் எந்த முஸ்லிம் கட்சியிடமும் கொள்கை இல்லை என்று குறை கூறுகிறார்.

இவர்கள் எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். மிகப் பெரும் சந்தர்ப்பவாதிகள். ஆளுக்கொரு கட்சி, வேளைக்கொரு கொள்கை என்று 'இழிச்சவாய் அரசியல்' செய்தவர்கள். அறம் சார் நிலைப்பாடுகளோ விழுமியம் சார் கோரிக்கைகளோ இல்லாத அரசியல் வியாபாரிகளையே பாரம்பரிய முஸ்லிம் கட்சிகள் உற்பத்தி செய்தன. இன்று அவர்கள் 'அதிரடி அபிவிருத்தி'யைக் காட்டி (100 மீற்றர் வீதி செப்பனிடல், பாடசாலைக்கு மல சல கூடம் கட்டுதல், மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பி வழங்குதல்) மக்களின் வாக்குகளுக்காக நாக்கை வெளியே நீட்டிக் கொண்டு அலைந்து திரிகின்றனர்.

வழமைபோன்று தேர்தல் காலங்களில் அபிவிருந்தி அரசியல் எனும் பூச்சாண்டியைக் காட்டி வாக்குகளைக் கொள்ளையடிக்கும் கட்சி ஐ.தே.க. என்பது யாரும் அறிந்ததே. நுவரெலியா தேர்தல் மேடையொன்றில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க, "அபிவிருத்தியை அதிகப்படுத்துவதானால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளியுங்கள்" என்று கூறியுள்ளார்.

சந்திரிக்கா பதவி ஏற்கும்வரை 17 ஆண்டு காலம் தொடர்ச்சியாக அதிகாரத்திலிருந்த ஐ.தே.க. அபிவிருத்திக்கு பெயர் பெற்ற கட்சியல்ல. மாறாக, 'பட்டலந்த' வதை முகாமுக்கு பெயர் போனது கட்சி. குறைந்தபட்சம் இலங்கையின் நான்கு நெடுஞ்சாலைகள் கூட அவர்களது ஆட்சியில் செப்பனிடப் படவில்லை. வெளிநாடுகளில் கடன் பட்டு உள்ளூரில் பாதை போடுவதை அபிவிருத்தி என்று அவர்கள் அர்த்தப்படுத்துகிறார்கள்.

முதலீட்டு சூதாட்டக்காரர்களுக்கு நாட்டின் வளங்களைத் தாரைவார்த்து விட்டு உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பது அபிவிருத்தியாகுமா? நாட்டின் அருஞ் சொத்துக்களை 100 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குக் கொடுத்து விட்டு, வெளிநாட்டுக் காசோலைகளால் நாட்டைக் கட்டியெழுப்பலாம் என்பது அவர்களின் நம்பிக்கை. வெறும் முழக்கங்களால் மக்களை பகடைக்காய்களாய் பலிகொள்கின்றனர்.

இரு பெரும் கட்சிகளுள் ஒன்றான சிறி லங்கா சுதந்திரக் கட்சியோ மக்கள் ஐக்கிய முன்னணியோ கூட யோக்கியதையான அரசியல் கலாசாரமொன்றை இந்நாட்டுக்கு அறிமுகம் செய்யவில்லை. சமீபத்தில் பிரச்சார மேடையொன்றில் பேசிய ஜனாதிபதி மைத்ரி, எனது வாளுக்கு மிக விரைவில் பலர் இரையாகுவர். அவர்கள் எனது குடும்பத்தவராக இருந்தாலும் சரியே என்று கர்ச்சித்துள்ளார். இந்த வாய் வீரம் அவருக்கு ஒன்றும் புதிதல்ல. ஊழல் மோசடிக்காரர்களை தண்டிக்கப் போகிறேன் என்பதுதான் இதன் அர்த்தம்.

2009 இற்குப் பின்னர் நிகழ்ந்த ஒவ்வொரு தேர்தலிலும் 'புலிகளை நான் வெற்றி கொண்டேன்' என்று கூறிக் கூறியே மஹிந்த சிங்கள வாக்குகளை தக்கவைத்துக் கொண்டார். மைத்ரி 2014 டிசம்பர் முதல் வாக்கு வங்கிகளைக் கொள்ளையடிப்பதற்குப் பயன்படுத்தி வரும் ஒரு மந்திரமே 'ஊழல் மோசடிக்காரர்களை சட்டத்தின் முன் நிறுத்துவேன்' என்பது.

மஹிந்தவின் கூட்டு எதிரணி தேர்தலில் தனித்துக் கேட்பதைத் தடுப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்து இறுதியில் மூக்குடைந்து போன மைத்ரி, யாராக இருந்தாலும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வேன் என்று கூறிவந்தார். திடீரென்று வாள் வீச்சு வீரர் போன்று அவர் களத்திற்குக் குதித்துள்ளமை மைத்ரியும் விழுமிய அரசியலுக்கு அப்பால்தான் சுற்றிச் சுழல்கிறார் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

இதே வெற்றுக் கோஷங்களை இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் நாம் அவரது வாயிலிருந்து செவிமடுத்தோம். எல்லை மீறிய ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களைத் தண்டிப்பேன் என்று கூறி இரண்டரை ஆண்டுகளாக அவர்களைக் காப்பாற்றி வந்தவரும் அவரே. இன்று வாள் வெட்டுக் குறித்துப் பேசுகிறார். கோத்தாவை கைதுசெய்ய வேண்டாம் என்று நேரடியாகத் தலையிட்டுத் தடுத்தவரும் அவரே. ஊழல் மோசடிக்காரர்கள் எவரையும் அவர் தண்டிக்கவில்லை.

புறம்பாக, சில் துணிகளை விநியோகிப்பதற்கு காரணமாயிருந்தார் என்று மஹிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்க கைதுசெய்யப்பட்டார். தற்போது மைத்ரி தன்னை ஒரு விழுமியம் சார் அரசியல்வாதி என்று காட்டிக் கொள்வதற்குக் கையில் எடுத்துள்ள ஒரே ஆயுதம் மத்திய வங்கி பிணை முறி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையாகும்.

மூன்று உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனை உடனடியாக வெளியிடுமாறும், சம்பந்தப்பட்டவர்களுக்கு கடும் தண்டனை வழங்குமாறும் கூட்டு எதிரணியினரும் அரசாங்கத்தில் அங்கத்துவம் பெறும் சுதந்திரக் கட்சி அமைச்சர்களும் வலியுறுத்தி வருகின்றனர்.

பெப்ரவரி 10 இல் உள்ளூராட்சித் தேர்தல் திகதி குறிக்கப்பட்டமையால் இக்காலத்தில் இவ் அறிக்கையை வெளியிடுவது ஐ.தே.க.வுக்கு பாதகமானது என்று அதன் மூத்த உறுப்பினர்கள் வலுவாக உணர்கின்றனர். ஜனாதிபதி ஊழல் குற்றச்சாட்டில் ஈடுபட்டோரை சட்டத்தின் மூன் கொண்டு வருவேன் என்று 2014 டிசம்பரில் கர்ச்சித்தது ஆட்சிக்குப் பின்னர் நியமிக்கப்பட்ட அர்ஜுன் மஹேந்திரனையோ அவரோடு சம்பந்தப்பட்ட ஐ.தே.க. அமைச்சர்களையோ குறித்து நிற்கவில்ல. அவர் கருதியது முன்னாள் ஊழல் மோசடி மிக்க ஆட்சியாளர்களையே. குறிப்பாக, மஹிந்தவின் குடும்பத்தினரையே.

இன்று மத்திய வங்கி பிணைமுறி ஊழல் குற்றச்சாட்டுடன் சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்கப் போவதாக அவர் கூறி வருவது அவரது கட்சிச் சார்பையும் ஒரு பக்க சாய்வையுமே எடுத்துக் காட்டுகின்றது. கூட்டு எதிரணியினரோ இத்தேர்தல் தருணத்தில் பிணைமுறி அறிக்கையை முன்னிட்டு குதூகலிக்கின்றனர். ஏதோ தமது கரங்கள் சுத்தமானவை என்று அவர்களுக்கு ஒரு நினைப்பு.

ஒப்படைக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ள விடயங்கள் பொது மக்களின் பார்வைக்கு மங்கலாகவே உள்ளது. இதுவரை கசிந்துள்ள தகவல்களின் படி ஐ.தே.க. வைச் சேர்ந்த 9 முக்கிய அரசியல்வாதிகள் இந்த அறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர். இதனால் அறிக்கையை தாமதப்படுத்தி வெளியிடுமாறு ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சியில் ஏற்கனவே ஐ.தே.க. ஈடுபட்டுள்ளது. நாட்டு நலன்களை விட தனது கட்சியே முதன்மையானது என்றும் முக்கியமானது என்றும் கருதி வரும் ஜனாதிபதி, சுஜீவி சேனசிங்க கேட்பது போன்று, தேர்தல் வாக்குறுதிக்கு ஏற்ப முன்னாள் ஆட்சியாளர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்குத் தயங்குவது ஏன்?

இலங்கை அரசியலில் பிரதேசம், கட்சி, இனம் என்பவற்றைக் கடந்து தேச நலனை முதன்மைப்படுத்தி விழுமிய அரசியல் செய்தவர்களை விரல் விட்டும் எண்ண முடியாது. இதுதான் எமது நாட்டின் அபிவிருத்திக்குக் குறுக்காகவுள்ள பெரும் சவாலாகும். அரசியலில் நம்பிக்கை, நாணயம், மக்கள் நலன், ஊழல் மோசடிகளற்ற வெளிப்படைத் தன்மை போன்ற விழுமியங்களைப் பின்பற்றும் அரசியல்வாதிகள் நமது நாட்டில் மொத்தமாகவே இல்லை என்று கூறலாம்.

அரசியலை பணம் பண்ணும் நிறுவனமாகவும் வியாபாரமாகவும் கருதும் எவரும் விழுமிய அரசியல்வாதியாக இருக்க முடியாது. இலங்கைக்கு இன்று தேவை விழுமிய அரசியல் கலாசாரமாகும். தேசிய அரசியலை விழுமியமயமாக்குவதற்கான ஒரு ஆரம்ப அடித்தளம் நமக்குக் கிடைத்துள்ளது. அதுதான் உள்ளூராட்சித் தேர்தல். மக்களின் குரலாக, மக்களின் தேவைக்காக, மக்களின் மனச்சாட்சியாக இயங்கும் அங்கத்தவர்களையே மக்கள் தமது பிரதிநிதியாகத் தெரிவுசெய்ய வேண்டும்.

பாரம்பரியமாக யானைக்கும் கைக்கும் புள்ளடிபோடும் நாம், இதற்கு மேலும் அவர்களுக்குப் புள்ளடி போட வேண்டுமா என்று சற்று நிதானித்துப் பார்க்க வேண்டும். அரசியல் களம் மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. இன்றைய உடனடித் தேவை ஒரு மாற்று அரசியல் கலாசாரம். அங்கு அரசியல்வாதிகள் மக்களின் எஜமானர்களாக அன்றி பணியாளர்களாக இருக்க வேண்டும்.

அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் ஒவ்வொரு ரூபாய்க்கும் மக்களுக்கு வகை கூறக் கூடியவர்களாக அரசியல்வாதிகள் இருக்க வேண்டும். நம்மிடம் வாக்குக் கேட்டு வரும் கட்சிகளையும் நபர்களையும் நாம் பரிசீலித்துப் பார்ப்போம். வாக்களித்தல் என்பது உண்மைக்கு சான்று பகரும் ஒரு செயற்பாடு. திருடர்களுக்கும் கொள்ளையர்களுக்கும் நாம் நமது தனிப்பட்ட நலன்களுக்காக வாக்களிப்போமானால் அது அற ரீதியான கண்ணோட்டத்தில் பெரிய பாவமாகும். இன்னொரு புறம் சமூகத்திற்குச் செய்யும் ஒரு துரோக்கமாகும். யார் சரியானவர்கள் என்பதை மட்டுமன்றி, யார் நேர்மையானவர்கள் என்பதையும் நாம் இனங்காண வேண்டும். அவர்கள்தான் நமது உண்மையான பிரதிநிதிகளாய் இருக்க வெண்டும். வெற்று அரசியல் கோஷங்களுக்கு இடையில் நிதானித்துப் பார்க்க வேண்டிய ஒரே விடயம் இதுதான். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

## அஹத் தமீமியின் போராட்டம் குறித்து அவதானம் செலுத்தப்பட வேண்டும்

கடந்த வாரம் இந்நாட்டில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வொன்று இடம்பெற்றது. இந்நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் தங்களது அரசியல் பேதங்களை மறந்து ஒரே மேடையில் ஒன்று கூடின. பலஸ்தீன் விடுதலைப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவே இக்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டிருந்தன. பலஸ்தீன் பூமியை அந்நாட்டு மக்களுக்கு இல்லாமல் செய்த பெல்பர் பிரகடனத்திற்கு 100 வருடங்கள் கழியும் இச்சந்தர்ப்பத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஜெரூஸலத்தை இஸ்ரேலின் தலைநகராக அறிவித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இச்சகல கட்சிகளும் ஒன்றுபட்டிருந்தன.

இதற்கு முன்னர் தென் ஆபிரிக்க விவகாரம் தொடர்பிலேயே சகல கட்சிகளும் இதுபோல் ஒன்றுகூடியிருந்தது எனக்கு நினைவிருக்கிறது. தென்ஆபிரிக்க விடுதலைப் போராட்டத்தில் அந்நாட்டு கறுப்பின மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பதில் அன்றைய பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒரே நிலைப்பாட்டில் இருந்தன. இது முக்கியமானதொரு நிகழ்வு. அன்று போல் இன்றும் பலஸ்தீன விடுதலை போராட்டத்திற்காக வேண்டி சகல கட்சிகளும் ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஒன்றுகூடியிருப்பதை வரவேற்க வேண்டியுள்ளது.

நாடென்ற வகையில் இலங்கை ஐ.நா. சபையில் பலம்பொருந்திய பிரித்தானியா, பிரான்ஸ், சீனா, ரஷ்யா, ஜேர்மன் போன்ற நாடுகளுடன் இணைந்து சவால்கள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தனது ஜனநாயகப் பொறுப்பை நிறைவேற்றியிருந்தது. ஒரு நாடு என்ற அடிப்படையில் நாம் சுறுங்கிவிடவில்லை. வருமான உதவிகள் துண்டிக்கப்பட்டாலும், சலுகைகள் கிடைக்காமல் போனாலும் தமது பண்பாட்டை எமது நாடு விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என்பதற்கு இந்நிகழ்வு சிறந்த எடுத்துக் காட்டாக உள்ளது.

எம்மைப் போன்றதொரு நாட்டிற்கு இதுபோன்ற அநீதி இடம்பெறுமாயின் நாமும் சர்வதேசத்தின் உதவிகளை எதிர்பார்க்கின்றோம். அதுபோன்றுதான் இன்று பலஸ்தீன் தனக்கான நீதியை சர்வதேச சமூகத்திடம் வேண்டுகிறது. அன்று தென்ஆபிரிக்கா சர்வதேசத்தின் உதவியை நாடியிருந்தது. உலகின் பலம் பொருந்திய சக்திகளும், ஊடகங்களும் தென்ஆபிரிக்க விடுதலை போராட்டத்திற்கு ஆதரவில்லாமல் இருந்த சமயத்தில், மண்டேலா போன்றவர்களை பயங்கரவாதிகள் என சித்தரித்த காலப்பகுதியில் கடுமையானதொரு போராட்டத்தை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

இறுதியில் இன்று மண்டேலாவை பயங்கரவாதிகள் என வர்ணித்த நாடுகள் கூட அவரை வீரராகக் கொண்டாடி வருகின்றன. நிலைமை மாறியுள்ளது. உலகின் பலம் பொருந்திய சக்திகள் மக்களின் சிந்தனைகளை மாற்றுவதில் ஊடகங்களை கேடயமாகப் பயன்படுத்தி வருகின்றது. அன்றைய சுதந்திர போராட்ட வீரர்களை பயங்கரவாதிகள் என முத்திரை குத்திய ஊடகங்கள் உள்ளன.

இச்சந்தர்ப்பத்தில் நாம் எமது பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றாவிட்டால் எமக்கு இது போன்றதொரு பிரச்சினை ஏற்படும்போது அதற்கான உதவிகளை சர்வதேசத்திடமிருந்து எதிர்பார்க்க முடியாமல் போகும். அதனால் நாட்டின் பிரச்சினைகளில் எவ்வளவு கரிசணை செலுத்துகின்றோமோ அதேயளவு சர்வதேச நாடுகளின் பிரச்சினைகளிலும் கவனம் செலுத்த வேண்டும். எமது சுய இலாபங்களை மாத்திரம் கருத்திற் கொண்டு செயற்படக்கூடாது.

பலஸ்தீனைச் சேர்ந்த அஹத் தமீமி அநீதிக்கு எதிராக போராடி வருகிறார். இஸ்ரேலிய படைவீரர்களின் செயற்பாடுகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ளார். இவரது துணிச்சலான செயற்பாடுகள் குறித்து சர்வதேச ஊடகங்கள் எதுவும் பேசியிருக்கவில்லை. மலாலாவின் துணிச்சலை பாராட்டி விருது வழங்கிய சர்வதேச சக்திகள் அஹதின் போராட்டத்தைக் கண்டும், காணாமலுமுள்ளது. இது தொடர்பில் உலகம் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. இலங்கையிலும் பெண்ணியல் அமைப்புக்கள் அஹத் தமீமியின் போராட்டத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுக்க வேண்டும். அதுவே நாம் அவர்களுக்கு செய்யும் பேருதவியாக இருக்கும்.

நாம் பண்பாடு ரீதியாக சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். கறுப்பு வெள்ளையென பாகுபாடில்லை. அவற்றுக்கிடையில் வித்தியாசங்கள் இல்லை. பலஸ்தீனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அநீதிகள் தொடர்பில் இலங்கை சரியான நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இது குறித்து நாம் பெருமைப்பட வேண்டும். அன்று நாம் பாடசாலைப் பருவத்தில் இருந்த போது, வியட்நாம் விடுதலைக்காக வேண்டி அன்று இலங்கையில் ஊர்வலங்கள் நடாத்தப்பட்டது.

பல்கலைக்கழ மாணவர்கள் வியட்நாம் விடுதலைக்காக வேண்டி குரல் எழுப்பினார்கள். இதுபோன்ற முன்னுதாரணங்கள் இலங்கை வரலாற்றில் ஏராளம் உள்ளன. இதுபோன்ற பிரச்சினைகளின் போது நாம் குறுகிய சிந்தனை கொண்டவர்களாக ஒரு வரையரைக்குட்பட்ட வகையில் சிந்திக்க முடியாது. மனிதாபிமான முறையில் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

# மறுமலர்ச்சியின் இரண்டாவது கட்டம்

கடந்த நவம்பர் மாதத்துடன் மறுமலர்ச்சி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடமாகிறது. மறுமலர்ச்சிக்கான கொள்கையை நானே வகுத்தேன். இதனுடைய தேவை பற்றிய புத்தகமொன்றையும் வெளியிட்டேன். இலங்கை எதிர்நோக்கும் நெருக்கடிகளில் எமது சிந்தனை ஏற்படுத்தியுள்ள தாக்கம் தொடர்பாகவும் சிறுநூல் ஒன்றை வெளியிட்டிருக்கிறேன்.

பத்திரிகை ஆசிரியன் என்ற வகையிலும், நிகழ்வுகளை அவதானிப்பவன் என்ற வகையிலும் நாடு எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் நான் புரிந்து வைத்திருக்கிறேன். சுதந்திரத்துக்குப் பின்னர் தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாமற் போனதனை நான் பிரதான பிரச்சினையாகக் காண்கின்றேன். இனமும் மதமும் பிரச்சினைகளுக்கான மூலகாரணமாகப் பேசப்பட்டாலும் அதற்கப்பால் சாதி வேறுபாடும் இந்தப் பிரச்சினைகளுக்கான மற்றுமொரு அடிப்படைக் காரணம் என்று நான் கருதுகிறேன்.

நாட்டின் பிரச்சினைக்கு ஜாதி பேதமும் ஓர் அடிப்படைக் காரணம் என்ற மறைந்திருக்கும் உண்மையை பலர் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும் நான் செல்லுமிடங்களில் ஒன்றுகூடுகின்ற மக்களே இந்த மறுப்புக்களுக்குப் பதிலுறுப்பதை நான் கண்டிருக்கிறேன். இது தொடர்பாக நான் வெளியிட்ட புத்தகத்துக்கு இருக்கின்ற கேள்வியும் எனது இந்தக் கருத்தை உறுதிப்படுத்துவதாகவே இருக்கிறது.

சிங்கள பௌத்தர்கள் மத்தியில் மதபேதத்தையும் வர்க்க பேதத்தையும் அநகாரிக தர்மபாலவே விதைத்தார். தர்மபால விதைத்த இந்தக் கருத்துக்களை எதிர்கொள்வது மறுமலர்ச்சியின் முக்கியமான நிபந்தனையாக அமைந்தது. சிங்கள இனமே உலகில் சிறந்த இனம் என்றும், அனுராதபுர, பொலன்னறுவ நாகரிகங்களே உலகில் சிறந்த நாகரிகங்கள் எனவும் அவர் சிங்கள மக்களின் மனங்களில் விதைத்திருந்த பொய்யான கற்பிதங்களை நாங்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்தியபோது அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள். யாரும் அதனை எதிர்க்க வரவில்லை.

விவசாயிகள் மத்தியில் நிலவும் வறுமைக்கும் நெல் விவசாயத்துக்கு கொடுத்திருக்கின்ற முக்கியத்துவத்துக்கும் இடையில் உள்ள தொடர்பு பற்றியும், மூவேளையும் சோறுண்ணும் கொள்கையினால் மக்களின் ஆரோக்கியத்துக்கு ஏற்படுகின்ற கெடுதல்களையும் நாங்கள் அவர்களுக்கு விளக்கினோம். பாவ புண்ணியம் பார்ப்பதனால் விலங்குகளின் எண்ணிக்கை பெருகி அதனால் விவசாயத்துக்கு உண்டாகும் நஷ்டம் பற்றி நாம் தெளிவுபடுத்தினோம்.

விவசாயத்துக்கு ஊறு விளைவிக்கும் விலங்குகளை வேட்டையாடுவதற்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமை பற்றியும், வேட்டையாடிய மாமிசத்தை வைத்திருக்கவும் விற்கவும் அவர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் நாங்கள் அவர்களுக்கு எடுத்துரைத்தோம்.

மறுமலர்ச்சி முன்வைத்த இந்தக் கருத்துக்கள் பாரம்பரியத்துக்கு முரணானதாக இருந்தாலும், மக்கள் இதனை ஆர்வத்துடன் செவிமடுத்ததில் இருந்து, மக்களுக்கு புரிய வைத்தால் அவர்கள் பாரம்பரியங்களைக் கைவிடுவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பது தெளிவாக விளங்கியது.

### முதலாவது கட்டத்தின் கலந்துரையாடல்கள்

மறுமலர்ச்சியின் முதல் கட்டமாக 200 கலந்துரையாடல் அமர்வுகளை நடத்துவது என்பது இலக்காகவிருந்தது. நவம்பர் வரையில் 160 கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. அதிகமான கலந்துரையாடல்கள் சிங்கள மக்கள் மத்தியிலும், இன்னும் சில தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியிலும், பெரும்பாலானவை கிராமிய மட்டத்திலும், சில கூட்டங்கள் நகர்ப்புறங்களிலும், இளைஞர்கள், பெண்கள், தொழில்வாண்மையாளர்கள் மத்தியிலும் என பலவாறாக இந்தக் கலந்துரையாடல் அமர்வுகள் நடந்திருக்கின்றன.

இந்தக் கலந்துரையாடல்கள் 20 முதல் 50 பேரைக் கொண்டதாக அமைய வேண்டும் என்பது எமது வரையறையாகவிருந்தது. இந்த அமர்வுகளில் நாங்கள் பேசுவதற்கு அப்பால் கூடியிருக்கின்றவர்களுக்கும் பேசுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குகிறோம். இந்தக் கருத்துக்களை நாங்கள் மறுமலர்ச்சியைப் பலப்படுத்துவதற்காக எடுத்துக் கொள்கிறோம்.




மறுமலர்ச்சி இயக்கம்

இந்தக் கலந்துரையாடல்களுக்கூடாக மறுமலர்ச்சிக்கு மக்களுக்குள்ளால் நுழைவதற்கு உள்ள ஆற்றலை நாம் இனம் கண்டு கொண்டோம். இதற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது. ஒரு மணித்தியால நேரம் கலந்துரையாடல் நடந்து முடிந்தாலும் கூட்டம் கலைந்து செல்லாது ஆர்வத்துடன் காத்திருந்தது. கூட்டத்துக்கு வருகின்றவர்களில் சில முத்துக்களைத் தெரிந்தெடுத்து மறுமலர்ச்சியின் அத்திவாரத்தைப் பலப்படுத்துவதற்கு நாங்கள் இந்தக் கலந்துரையாடல் அமர்வுகளைப் பயன்படுத்திக் கொண்டோம்.

வெளிநாட்டு நிதி உதவி இன்றி மறுமலர்ச்சி இயக்கத்தை கொண்டு செல்ல முடியாது என்று சிலர் சொன்னார்கள். வெளிநாட்டு நிதியைப் பெற்றால் எமது சுயாதீனம் அற்றுப் போவதோடு தூய்மையும் கெட்டுவிடும் என்பதனாலும், மறுமலர்ச்சியும் மற்றுமொரு என்ஜீஓ வாக மாறும் என்பதாலும் நாங்கள் சுயநிதியீட்டலிலேயே நம்பிக்கை வைத்தோம். இந்தக் கருத்தை உரசிப் பார்ப்பதற்கும் இந்தக் கலந்துரையாடல்களை நாங்கள் பயன்படுத்தினோம்.



நாங்கள் மேற்கொண்ட உபாயம் சரியானது என்பதை நாங்கள் இப்போது விளங்குகிறோம். முதலில் எங்களது பொக்கட்டிலிருந்து தான் செலவழிக்கப்பட்டது. பின்னர் ஆதரவாளர்கள் அந்தச் செலவுகளைச் சுமந்தார்கள். கலந்துரையாடல்களுக்கான செலவை ஒழுங்கமைப்பாளர்களே ஏற்றுக் கொண்டார்கள். சில இடங்களில் எமது உணவு, தங்குமிடம், போக்குவரத்து போன்றவற்றையும் அவர்களே பொறுப்பேற்றார்கள்.

இதுவரையான எமது பயணம் போஸ்டர்கள் அற்றது. கட்அவுட்களோ விளம்பரங்களோ கிடையாது. ஊடக மாநாடுகள் கிடையாது. ஒரு சிலருடன் ஆரம்பித்த இந்தப் பயணம் இன்று நாடு முழுவதும் கிளைவிட்டு வியாபித்திருக்கிறது. தமிழர்களுக்கு பாரிய இழப்பைத் தந்த நீண்ட யுத்தத்தின் பின்னர், நிறுவனமயப்பட்ட அமைப்பில் முஸ்லிம்கள் மீது வெறுப்பும் குரோதமும் விதைக்கப்பட்ட ஒரு தருணத்திலேயே அவற்றுக்கெதிராக எதிர்நீச்சல் போடும் இந்தப் பயணத்தை நாங்கள் ஆரம்பித்தோம். எமது இந்த நிலைப்பாடு சிங்கள மக்கள் மத்தியிலும் வரவேற்பைப் பெற்றதேயன்றி எதிர்ப்புக்களை ஈட்டித் தரவில்லை.

### இரண்டாவது கட்டம்

இப்பொழுது நாங்கள் மறுமலர்ச்சி வேலைத் திட்டத்தின் முதலாவது கட்டத்தின் நிறைவில் இருக்கிறோம். இப்பொழுது மறுமலர்ச்சியின் கருத்துக்களைப் பரப்புவதற்கு எம்மிடம் இணையத்தளமும் முகநூல் பக்கமும் ட்விட்டர் சேவையும் இருக்கிறது. மறுமலர்ச்சியின் ஆதரவாளர்களும் மறுமலர்ச்சியின் ஆர்வலர்களும் இவற்றினூடாக இணைந்து கொள்ள முடியும். 200 கிளைகள் என்ற இலக்கை டிசம்பர் (2017) இறுதிக்குள் அடைந்து விடலாம் என்று எண்ணுகிறோம். அதனையடுத்து ஜனநாயக அமைப்பொன்றுக்கான சிறந்த முன்மாதிரியாக மறுமலர்ச்சி இயக்கத்தை பரிணமிக்கச் செய்யும் நோக்கில் யாப்பொன்றை வரைந்து அமைப்பை ஒழுங்கு படுத்துவதற்கு எதிர்பார்த்திருக்கிறோம்.

இரண்டாவது கட்டத்தில் எமது பத்து இலட்சம் அங்கத்தவர் இலக்கை அடைவதற்கு நாடுகிறோம். முதலாவது கட்டத்தில் மறுமலர்ச்சியின் அத்திவாரத்தைப் பலப்படுத்தும் பணியை நாம் செய்தோம். இரண்டாவது கட்டத்தில் அந்த அத்திவாரத்தின் மேல் கட்டடம் கட்டி பூரணப்படுத்த நினைக்கின்றோம். இரண்டாவது கட்டம் நிறைவடையும் பொழுது நீதியாகவும், தர்க்க ரீதியாகவும், நவீனமாகவும் சிந்தித்துச் செயலாற்றக் கூடிய தரமான பத்து இலட்சம் பேரைத் திரட்டுவதே எமது இலக்கு.

இவ்வாறான பாரிய இலக்கொன்றை ஒரு வருட காலத்தில் அடைவதற்கு நாங்கள் எதிர்பார்க்கிறோம். இந்த இலக்கை எம்மால் அடைய முடியும். 2018 ஆரம்பத்தில் மறுமலர்ச்சியுடன் இணைந்திருப்பவர்களின் எண்ணிக்கை பத்தாயிரம் என்று வைத்துக் கொண்டாலும், இந்த அங்கத்தவர்களில் 25 வீதமானவர்கள் மாதத்துக்கு இரண்டு அங்கத்தவர்களை கொண்டு வந்து இணைத்தாலும், தொடர்ச்சியான 12 மாதங்களில் மறுமலர்ச்சி இயக்கத்தில் 12,97,500 பேர் இணைந் திருப்பார்கள். 2018 நவம்பரில் இந்த இலக்கை நம்மால் அடைய முடியாது. ஏனென்னில் 11 மாத உழைப்பில் 865,000 பேரைத் தான் நம்மால் திரட்ட முடியும். இது எமது இலக்கை விடக் குறைவானது.

மூன்றாவது கட்டத்தில்தான் மறுமலர்ச்சி இயக்கம் மக்களின் பலத்தை பரவலாகப் பயன்படுத்தப் போகிறது. இதன்போது செய்ய முடியுமான அனைத்துச் செயற்பாடுகளையும் ஒரேயடியாகச் செய்வதற்கு நாங்கள் எதிர்பார்க்கவில்லை. படிப்படியாகத் தான் இந்தச் செயற்பாடுகள் நடைமுறைக்கு வரும். இந்த நிலையில் முதலாவது நிலை வெற்றியளிக்குமானால் அதுவே மறுமலர்ச்சி இயக்கத்துக்கு இருக்கும் மக்கள் சக்தியை இரண்டு மூன்று மடங்கு அதிகரிக்கப் போதுமானது.

இறுதியில் இவ்வாறு உருவாக்கப்படுகின்ற நவீன சமுதாயம், அதனூடாகக் கட்டியெழுப்பப் படுகின்ற நவீன தேசத்தினதும் நவீன உலகினதும் தேவைக்கேற்ற வகையில் இன, மத, ஜாதி பேதங்களற்று, பல்லினங்கள் அமைதியாக வாழும் இலங்கைச் சமூகமொன்றினால் ஊழலின்றிய, செயற்திறன் வாய்ந்த, சுறுசுறுப்பான இலங்கை அரசைக் கட்டியெழுப்ப முடியும். மக்களிடம் இருக்கின்ற மக்கள் சக்தியை அகிம்சாவாதத்தினூடாக ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதனூடாகவே இது சாத்தியமாகும்.

தேவையான எல்லா மாற்றங்களையும் ஆட்சியாளர்களன்றி மக்களே கொண்டு வர முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸீராவின் ஒளியில் சிறுபான்மை முஸ்லிம்களின் வாக்குரிமை



• முஹம்மத் பகீஹுத்தீன்

2018 ஆம் ஆண்டின் ஆரம்பம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சூட்டோடு மலர்ந்துள்ளது. வாழையடி வாழையாக பச்சைக்கும் நீலத்திற்கும் புள்ளடியிடும் அடிமை அரசியலிலிருந்து விடுதலை பெறும் அடையாளமாக விழுமிய அரசியல் சக்தி களத்தில் அலைபாய்ந்து வருவதை காண முடிகிறது. இத்தருணத்தில் வாக்காளர்களாகிய நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் புரிந்து எமது வாக்கைப் பயன்படுத்துவது ஒரு தார்மீகக் கடமையாகும்.

எனவே நாட்டைக் கட்டியெழுப்பம் மகத்தான பணிக்கு வாக்குரிமை மூலம் எமது பங்களிப்பை வழங்குவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். அந்த வாக்குரிமை பற்றிய ஷரீஆவின் நிலைப்பாட்டை இந்த ஆக்கம் விளக்குகிறது.

### ஷரீஆவின் பார்வையில் வாக்குரிமை

பொதுவாக தேர்தலில் வாக்களிப்பது என்பதன் பொருள் குறித்த ஒரு நபரை மக்கள் பிரதிநிதியாக உள்ளூராட்சி மன்றம் அல்லது மாகாண சபை அல்லது பாராளுமன்றம் செல்வதற்குப் பொருத்தமானவர் என்றும் தகுதியுள்ளவர் என்றும் சாட்சி சொல்வதாகும். நாட்டில் நடைபெறும் அனைத்து வகையான தேர்தல்களிலும் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதென்பது, குறித்த அபேட்சகரின் தகைமை, நேர்மை, நம்பகத் தன்மையில் அவர் மிகவும் பொருத்தமானவர் என்றும் சமூகத்தின் பிரதிநிதியாக அல்லது நாட்டின் தலைவராக வருவதற்கு தகுதியானவர் என்றும் வாக்காளர் வழங்கும் சாட்சியாகும்.

தேசத்தினதும் பொது மக்களினதும் நலன்கள் தேர்தல்களில் தங்கியிருப்பதால் வாக்குரிமையுள்ள சகலரும் தகுதியான வேட்பாளருக்கு சாட்சி பகர்வது அல்லாஹ்விற்கு செய்ய வேண்டிய கடமை என்றே இஸ்லாமிய சட்ட வல்லுனர்கள் குறிப்பிடுவர்.

தேசத்தின் பொது நலனைக் கருத்தில் கொண்டு சிறுபான்மையாக வாழும் முஸ்லிம் குடிமகன் மிகப் பொருத்தமான தகுதிவாய்ந்த ஒருவருக்கு வாக்களிப்பது அடியார்கள் அல்லாஹ்வுக்கு செய்யும் கடமையாகும் என்ற தரத்தில்தான் நோக்கப்படும். காரணம் அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் இடம்பெற்றுள்ள சாட்சி பகர்தல் என்ற வார்த்தையானது வாக்களித்தல் என்பதற்கு சமனானதே என இஸ்லாமிய சட்டத்துறை மற்றும் அரசியல் துறை அறிஞர்களிடம் கருத்தொற்றுமை நிலவுகிறது.

தேர்தல் காலங்களில் மக்களுக்கு வழங்கப்படும் வாக்காளர் அட்டை என்பது சாட்சி பகர்வதற்கான உத்தியோகபூர்வ அழைப்பாகும். 'சாட்சி சொல்ல வேண்டியவர்கள் அழைப்பு விடுக்கப்பட்டால் மறுக்கக்கூடாது'' (பகரா: 282) என அல்குர்ஆன் பணிக்கிறது. அவ்வாறே வாக்குரிமையை பகிஷ்கரிப்பதும் மறைப்பதும் குற்றம் என்ற கருத்தை அல்குர்ஆன் மேலும் வலியுறுத்துகிறது.

''சாட்சியத்தை நீங்கள் மறைக்கவும் வேண்டாம். எவரேனும் அதனை மறைத்தல் நிச்சயமாக அவருடைய உள்ளம் பாவத்திற்குள்ளாகி விடுகின்றது'' என அல்லாஹ் கூறுகிறான். (பகரா: 283) பாவத்திற்கு உள்ளாகும் இடமாக உள்ளம் குறிப்பிடப்பட்டுள்ளதானது இந்தப் பாவத்தின் பாரதூரத்தை எடுத்துக் காட்டப் போதுமானதாகும்.

தேர்தலில் வாக்களித்தல் என்பதற்கு பிரதிநிதியாக குரல் கொடுப்பவரை நியமித்தல் என்றும் சிலர் விளங்கப்படுத்துவதுண்டு. அதாவது வாக்காளர் தன் சார்பாக குரல் கொடுப்பதற்கும், உரிமைகளை பாதுகாப்பதற்கும் தேச நலன்களையும், மக்கள் நலன்களையும் அவதானிப்பதற்கும் ஒரு முகவரை அல்லது பிரதிநிதியைத் தெரிவு செய்கிறார் என்பது இதன் பொருள். இதுவும் வாக்குரிமை குறித்த சட்டபூர்வமான ஒரு பார்வைதான் என அறிஞர் பத்ஹி அபுல்வர்த் குறிப்பிடுகிறார்.


இந்தப் பின்புலத்தில் தேர்தல்களின் போது தகுதியான, மிதவாத சிந்தனைப் போக்குக் கொண்ட அல்லது தீமைகளை குறைப்பதற்கு உதவுவார் என்று கருதப்படும் ஒருவருக்கு ஆதரவாக வாக்குரிமையைப் பயன்படுத்துவது கட்டாயக் கடமை எனவும் நியாயமான காரணமின்றி வாக்களிக்காமல் ஒதுங்குவது குற்றம் எனவும் பேரறிஞர் முஹம்மத் அஹ்மத் ராஷித் அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். இலங்கை போன்ற பௌத்த நாடுகளில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்களுக்கும் இந்த பத்வா செல்லுபடியாகும் என அவர் மேலும் உறுதிப்படுத்திக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதே கருத்தை இஸ்லாமிய அறிஞர்களான அப்துல் கரீம் ஸைதான், அப்துல் ரஹ்மான் அல்பர், அறிஞர் ஸலாஹ் ஸுல்தான், கலாநிதி யூஸுப் கர்ளாவி போன்ற பல அறிஞர்களும் தெரிவித்துள்ளனர். அவ்வாறே பல நாடுகளில் உள்ள உலமா சபை தீர்மானங்களும் வாக்குரிமையை பயன்படுத்துவது சிறுபான்மை முஸ்லிம்களுக்குக் கடமை என்று தெரிவித்துள்ளன.

எனவே சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்கள், அங்கு வாழும் முஸ்லிம்களதும் தேசத்தினதும் நலன்களை முன்னுரிமைப்படுத்தி தேர்தல் காலங்களில் தமது வாக்குப் பலத்தைப் பயன்படுத்துவது ஷரீஆவின் பார்வையில் வாஜிப் என்பதே இஸ்லாமிய சட்டத்துறை அறிஞர்கள் பலர் வெளியிட்டுள்ள தீர்ப்பாகும்.

### தேர்தலில் பங்கு கொள்வதற்கான ஷரீஆ ஆதாரங்கள்

சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்கள் தாம் வாழும் தேசத்தின் நலன்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும், தீமைகளைத் தவிர்ப்பதற்கும் தங்களது வாக்குரிமையைப் பயன்படுத்துவது கடமை என அறிஞர் அப்துல் கரீம் ஸைதான் அவர்கள் குறிப்பிடுகிறார். காபிரான அரசிடமிருந்து நலன் தரும் பகுதிவாரியான பயனைப் பெறுவது ஆகும் என்ற அடிப்படையில் அதற்கு அவர் ஆதரராரம் காட்டுகிறார்.




இவ்வாதாரத்தை அவர் விளக்கும்போது, நபி (ஸல்) அவர்களும் நபித்தோழர்களும் எதிரிகளிடமிருந்து தங்களது உயிரைப் பாதுகாக்கும் வகையில் குறைஷிக் காபிர்களின் தலைவர்களிடமிருந்து பாதுகாப்பு உத்தரவாதத்தைப் பெற்ற பல சம்பவங்கள் ஸீராவில் உள்ளன. அதன் பொருள் செல்வாக்குள்ள, உயர் அந்துஸ்துள்ள குறைஷிக் காபிர் ஒருவர், இன்னாருக்கு நான் பாதுகாப்பு கொடுக்கிறேன் என்று அறிவித்தால் அவருடை சமூகம் அந்தப் பாதுகாப்பு வழங்கப்பட்டவருக்கு முழுமையான உயிர் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அந்த பாதுகாப்பு அறிவிப்பு ஒரு உடன்படிக்கையாகவே அன்று கருதப்பட்டது.

அப்படி பாதுகாப்பு கொடுக்கப்பட்டவருக்கு யாரும் எத்தகைய தீங்கும் செய்ய முடியாது. யாராவது அதனை மீறி பாதுகாப்பு வழங்கப்பட்டவருக்கு தீங்கு செய்தால் அது உடன்படிக்கையை முறித்ததாகவே கருதப்பட்டது. அதற்காக அந்த கோத்திமே போர் செய்ய களம் இறங்கிவிடுவர்.

அன்று ஜாஹிலிய்யா கால மரபில் இருந்த இந்த பாதுகாப்பு முறைமையை இறை தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களும் அவரது தோழர்களும் தேவையான போது தமது பாதுகாப்பிற்காக பயன்படுத்தினர். அது ஈமானைப் பாதிக்கும் ஒரு விடயமாக நோக்கப்படவில்லை. மாறாக உலக விவகாரத்தில் பரஸ்பர ஒத்துழைப்பைப் பயன்படுத்தியதாகவே கருதப்பட்டது. இம்மையின் நலன்களை அடைவதில் ஒரு வழிமுறையாகவே அதனை நாம் காண்கின்றோம்.

நபிகளார் (ஸல்) அவர்கள் தாயிப் நகரத்திலிருந்து மக்காவிற்கு திரும்பியபோது அபூபக்கர் (ரழி) அவர்கள் போன்ற பல தோழர்கள் மக்காவில் இருக்கும்போது கூட, முஷ்ரிக்கான முத்இம் பின் அதியின் பாதுகாப்புடனேயே தாயகம் திரும்பினார்கள். காரணம் நபிகளார் சுதந்திரமாக மக்கா திரும்ப முடியாத அளவிற்கு எதிர்ப்பும் கொலை அச்சுறுத்தலும் அவர்களுக்கு இருந்தது. எனவே உயிர் பாதுகாப்புப் பெ... வது அழிவை தன் கையால் தேடிக் கொண்டதாவே அமையும் என்று கருதியே அன்றிருந்த பாதுகாப்பு மரபை நபிகளார் தனக்குச் சார்பாக பயன்படுத்த முனைந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் தனக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கேட்டு முஷ்ரிகான முத்இம் பின் அதியிடம் தூதனுப்பினார்கள். அதற்கு முத்இம் சம்மதமும் தெரிவித்தார்.

பின்னர் நபி (ஸல்) அவர்கள் முத்இமின் இல்லத்தில் அன்றைய இரவை கழித்து விட்டு அடுத்த நாள் காலையில் அவரும் இன்னும் அவரது ஏழு பிள்ளைகளுமாக உருவப்பட்ட வால்களுடன் மக்காவில் நுழைந்தார்கள். அப்போது குறைஷித் தலைவன் அபூ ஸுப்யான் (அந்த சமயம் இஸ்லாத்தின் பரம எதிரியாக இருந்தவர்) எதிரிலே வந்து நீர் முஹம்மதின் பின்னால் அவரைத் தொடர்ந்து வருவது ஏன்? அவர் நீ பாதுகாப்பு கொடுத்து வருகின்ற ஒருவரா எனக் கேட்டான். நான் சும்மா வரவில்லை. முஹம்மதுக்கு பாதுகாப்பு கொடுத்துள்ளேன் என முத்இம் பதில் கொடுத்தார். அப்படியாயின் உனது பொறுப்பில் உள்ள உடன்படிக்கையை நீர் முறிக்கத் தேவையில்லை எனக் கூறி அந்தப் பாதுகாப்பை தலைவர் அபூ ஸுப்யானும் அங்கீகரித்தார். இது போன்ற ஏராளமான நம்பகமான நிகழ்வுகள் ஸீராவில் அதிகமாகவே காணமுடியும்.

இவை சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான வழிகாட்டல்களாகும். அநீதி நிலவும் அரசாங்கத்தில் தேர்தல் என்பது தீமையை குறைப்பதற்கான அல்லது நாட்டு நலனில் பங்களிப்பதற்கான அல்லது சத்தியத்தை உரைப்பதற்கான ஒரு திறந்த வழிமுறையாகும். சர்வாதாரிகளின் கொடுமையை எதிர்ப்பதற்கான சாத்வீகமான போராட்ட சாதனமும் இதுதான். எனவே இறைதூதர் (ஸல்) அவர்கள் அரசியல் நலன்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு காபிரின் பாதுகாப்பை வேண்டினார்கள்.

இதனைத்தான் அறிஞர் ஸைதான் அவர்கள் ''காபிரான அரசிடமிருந்து நலன் தரும் பகுதிவாரியான பயனைப் பெறுவது ஆகும்'' என்ற சட்ட விதியின் அடிப்படையில் தெளிவுபடுத்தியுள்ளார். ஒப்பிட்டு நோக்கும்போது இது தேர்தலில் பங்கு பற்றுவதற்கான தெளிவான ஆதாரமாகும். அந்நிய அரசாங்கத்தில் சில நலன்களைப் பெறுவதற்காக ஆதரித்து வாக்களிப்பது ஷரீஆ அங்கீகாரமுடையதே என்பது இதனால் தெளிவாகின்றது. அதனை பகிஷ்கரிப்பது சீர்கேடும், தீமைகளும் பரவுவதற்கு உடந்தையாக இருந்ததாகவே அர்த்தம். அதனால்தான் வாக்குரிமையை பயன்படுத்துவது கடமை என்ற கருத்தை நவீன கால இஸ்லாமிய அறிஞர்கள் கொண்டுள்ளனர்.

இதனை சிலர் குப்ருக்கான விசுவாசம் என மறுதலிப்பதற்கு இடமுண்டு. ஆனால் வாக்குரிமை என்பது நிராகரிப்புக்கு விசுவாசம் தெரிவிப்பதன்று. முஸ்லிம்களின் நலனுக்கான விருப்ப வாக்கை கொடுப்பதாகும். இதற்கு பல சம்பவங்கள் சான்றாக உள்ளன. உதாரணமாக மக்கா காலப் பிரிவில் பாரசீகத்துக்கு எதிராக ரோம் வெற்றி பெற்றபோது முஸ்லிம்கள் மகிழ்ந்தார்கள். காரணம் ரோமர்கள் வேதம் கொடுக்கப்பட்டவர்கள். பாரசீக நெருப்பு வணங்கியை விட அல்லாஹ்வின் வேதம் அருளப்பட்டவர்கள் மேல் என்பதே அந்த மகிழ்ச்சிக்கு காரணம். மாறாக அது கிறிஸ்தவர்கள் மீதான விசுவாசமாக நோக்கப்படவில்லை. இது குறித்து ஸூரா ரூமின் ஆரம்ப வசனங்கள் பேசுகின்றன.

அவ்வாறே ஹபஷாவில் நஜ்ஜாஷியின் வெற்றிக்காக நபித் தோழர்கள் சந்தோசமடைந்தார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் ஜாஹிலிய்யா காலத்தில் அப்துல்லா பின் ஜுத்ஆனின் வீட்டில் தீமைக்கெதிரான கூட்டணியில்

(பக்.14)




## பூக்கடைகளை சாக்கடையில் மூழ்கவிடாதிருக்க...

எதுவுமே கட்டுக்கடங்காமல் செல்லுகின்ற, யாரையுமே கட்டுக்கோப்புக்குள் அடக்க முடியாத மாவலிமை பெற்றதொரு பிரளயமாகத் தான் தேர்தல் நோக்கப்படுகிறது. எத்தனை சட்டங்கள் போட்டாலும் அந்தச் சட்டத்திலுள்ள ஓட்டைகளால் நுழைந்து காரியம் சாதிப்பதில் தான் தேர்தலின் வெற்றியே தங்கியிருக்கிறது என்பது போலத் தான் வேட்பாளர்களின் தேர்தல் கால நடவடிக்கைகள் அமைகின்றன.

இலங்கையில் தேர்தல் இப்படித்தான் நாறிப் போயிருக்கிறது. குர்ஆன் ஹதீஸை யாப்பாகக் கொண்ட கட்சிகளே இன்று அவற்றிற்கு எந்தச் சம்பந்தமுமில்லாத அரசியல் நடத்துகின்றன. இன்னும் சில இயக்கங்கள் குர்ஆனும் ஹதீஸும் பேசி அரசியலுக்கு வரத் துடிக்கின்றன. இன்னும் சில இடங்களில் குர்ஆனையும் ஹதீஸையும் போதிக்க வேண்டிய இறையில்லங்களே சாக்கடை அரசியல் நடத்தி வருகின்றன.

பொதுவிலேயே முஸ்லிம் சமூகத்தை வழிநடத்தக் கூடிய தலைமை ஒன்று இல்லாமல் தடி எடுத்தவன் எல்லாம் மேய்க்கின்ற நிலைதான் நாட்டில் நிலவுகிறது. இந்த நிலையில் முஸ்லிம் சமூகத்திலிருந்து அரசியலில் ஈடுபடுகின்றவர்களை ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்கின்ற பொறிமுறையொன்றுக்கான தேவையும், அதனை முன்னின்று வழிநடத்தக் கூடிய தலைமையொன்றுக்கான தேவையும் இன்று அத்தியாவசியமாகி இருக்கின்றன.

இந்த முறைய தேர்தல் முறை வழமையைவிட மாற்றமானது. வட்டாரப் பிரிப்பில் பல இடங்களில் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. முஸ்லிம் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கென்றே இந்தத் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதாகவே பொதுவான கருத்து சமூகத்தில் நிலவுகிறது. இதனால் உள்ளூராட்சி சபைகளில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயக் கடமையொன்று இந்தத் தேர்தலின் போது முஸ்லிம்களின் முன்னால் விரிந்து கிடக்கிறது.

இதை எதனையும் கவனத்தில் கொள்ளாமல் சமூகம் வழமை போன்ற அடாவடித்தனங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. பல்வேறு பிரிவுகளாகவும் கட்சிகளில் பிளவுபட்டு முஸ்லிம் சமூகம் தேர்தலில் நின்றிருக்கிறது. இந்தப் பிளவுகளினால் பல இடங்களில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தில் பின்னடைவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன.

இந்த ஆபத்திலிருந்து சமூகத்தைக் காப்பாற்றுவது யார்? தேர்தலில் நிற்கின்ற அபேட்சகர்களுக்கும் வாக்களிக்கின்ற பொதுமக்களுக்கும் வழிகாட்டி வழிப்படுத்துவது யார் பொறுப்பு? அரசியல் கட்சிகளே தீர்மானித்து முடிவெடுத்துக் கொள்ளட்டும், இதில் நாங்கள் தலைபோடக் கூடாது என்று முஸ்லிம் தலைமைகள் வாளாவிருக்க முடியுமா? ஒழுக்கக் கோவை என்றொரு பிரகடனத்தை பள்ளிவாசல்களில் தொங்கவிடச் செய்து இந்தப் பணியிலிருந்து தலைமைகள் ஒதுங்கிக் கொள்ள முடியுமா? அல்லது தேர்தல் வழிகாட்டல்கள் சிலதை பத்திரிகைகளில் பிரசுரித்து விட்டு ஓய்வெடுக்க முடியுமா? இவை அனைத்தையும் தாண்டி மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு சமூகத் தலைமைகளான அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவுக்கும் தேசிய சூறா சபைக்கும் இருக்கிறது.

இம்முறைய தேர்தலில் நேரடியாக பள்ளிவாசல்கள் பங்கு கொண்டிருக்கின்றன. சில இடங்களில் பள்ளிவாசல் தலைவர்களே தேர்தலில் குதித்திருக்கிறார்கள். பல ட்ரஸ்டிகள் தேர்தல் அபேட்சகர்களாக இருக்கிறார்கள். இவர்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டிய பொறுப்பு அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவுக்கு இருக்கிறது. பள்ளிவாசல்களும், பள்ளிவாசல் தலைவர்களும், பள்ளிவாசல் நிர்வாகிகளும் நேரடித் தேர்தலில் பங்கெடுக்க முடியுமா, அதற்கான வரையறைகள், ஒழுங்குகள் பற்றியெல்லாம் ஜம்மியதுல் உலமா தீர்மானிக்க வேண்டும்.

தேர்தலில் ப்ள்ளிவாசல்கள் தொடர்புபடுவதனூடாக எதிர்த்தரப்பினரால் பள்ளிவாசல்கள் இலக்கு வைக்கப்படவும், நிர்வாகிகள் அசிங்கப்படுத்தப்படவும் இந்த அரசியலில் நிறையவே வாய்ப்புக்கள் இருக்கின்றன. மதச் சண்டைகளால் ஏற்கனவே சிதைந்து போயிருக்கின்ற பள்ளிவாசல் கட்டமைப்பை இன்னுமொரு சாக்கடையில் குளிப்பாட்டி அசிங்கப்படுத்தும் வேலையை முஸ்லிம் சமூகம் செய்து விடாமல் பாதுகாப்பது பள்ளிவாசல்களை கட்டிப் போட்டு வைத்திருக்கின்ற ஜம்இய்யதுல் உலமாவின் பணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரதிவாதிகளில் ஷெய்க் கர்ளாவியும் ஒருவர்



2017-12-31 அன்று எகிப்தின் இராணுவ நீதிமன்றம் எட்டுப் பேருக்கு மரண தண்டனை தீர்ப்பளித்தது. அவர்களுள் சர்வதேச உலமாக்கள் ஒன்றியத்தின் தலைவர் ஷெய்க் கர்ளாவியும் ஒருவர். 2015 இல் கெய்ரோவில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரை படுகொலை செய்யும் திட்டத்தில் கர்ளாவியும் பங்கு கொண்டுள்ளதாக நீதிமன்றம் குற்றம் சாட்டியுள்ளது.

எகிப்தின் தலைமை நீதிபதி வாதியாகவும், 8 பேர் பிரதிவாதிகளாகவும் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குத் தொடர்பில் இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளனது.

கெய்ரோவிலுள்ள மதாரிய்யா பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது வாயில் தஹஊன் எனப்படும் பொலிஸ் அதிகாரியே கொல்லப்பட்டார். அப்போது கர்ளாவி கெய்ரோவிலோ எகிப்திலோ இருக்கவில்லை. இப்பொலிஸ் நிலையத்தை அங்கு தடுத்து வைக்கப்பட்டவர்கள் கசாப்புக் கடை என்றே அழைத்து வந்தனர். ஏனெனில், ஈவிரக்கமற்ற மிக மோசமான சித்திரவதைகள் அங்கு திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டன.

பொலிஸ் கண்காணிப்பின் கீழிலிருந்த பலர் சித்திரவதையினால் கொல்லப்பட்டனர். இதனால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டோரே சித்திரவதைகளுக்கு தலைமை தாங்கிய வாயிலை கொலை செய்துள்ளனர் என அறியப்படுகிறது.

# பலஸ்தீன சிறுமி மீது இஸ்ரேல் 12 குற்றச்சாட்டு

இஸ்ரேல் இராணுவத்தோடு வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டார் என்று டிசம்பர் 19 இல் கைதுசெய்யப்பட்ட அஹத் தமீமி எனும் மேற்குக்கரையைச் சேர்ந்த பலஸ்தீன சிறுமி மீது இஸ்ரேல் 12 குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளது. மேற்குக்கரையில் பலஸ்தீனர்களின் உரிமைக்காகவும் பொதுவாக மனித உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தவர் தமீமி என அறியப்படுகின்றார்.

அவர் தனது வீட்டுக்கு முன்னால் இஸ்ரேலிய இராணுவத்துடன் தர்க்கிக்கும் காட்சிகள் கைதுசெய்யப்பட்டு 4 நாட்களில் வெளிவந்தது. ஏற்கனவே அவரது உறவினர் ஒருவரை இஸ்ரேலிய இராணுவம் சுட்டதை அடுத்து அஹதின் செயல் வேகம் அதிகரித்தது.

பாகிஸ்தானின் மலாலா யூசுப் போன்று பலஸ்தீனில் இஸ்ரேலின் அடாவடித்தனங்களைக் கண்டித்துப் போராடும் சிறுமியாகவே அஹத் தமீமி ஊடகங்களால் வர்ணிக்கப்படுகின்றார். 16 வயதான அஹத், இஸ்ரேலின் இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டபோது இஸ்ரேலிய சிப்பந்தி ஒருவரை அவர் தாக்கினார் என்று குற்றம் சுமத்தப்பட்டது. இஸ்ரேலிய சிப்பாய்கள் மீது கல் வீசினார் என்பது அவர் மீதான பிரதான குற்றச்சாட்டாகும். சமீபகாலமாக மேற்குக்கரையில் பலஸ்தீனர்களுக்காக குரல் கொடுத்து வந்தவர் அஹத் தமீமி என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேசப் பார்வை

# பலஸ்தீனர்கள் சவூதி அறேபியாவை நெருக்கமாக அவதானித்து வருகின்றனர்

## - அறபுலகப் பத்திரிகையாளர்



இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் குறித்து சவூதி அறேபியா மேற்கொண்டு வரும் தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து பலஸ்தீனர்கள் மிக நுணுக்கமாக அவதானித்து வருகின்றனர் என அறபுப் பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜெரூசலத்தை இஸ்ரேலின் தலைநகராக சவூதி அறேபியா அங்கீகரிப்பதும் அபூ திஷ்ஷை மாற்றுத் தலைநகராக ஏற்குமாறு வற்புறுத்துவதும் பலஸ்தீனர்களிடையே சவூதி அறேபியா குறித்த பெரும் வெறுப்பையும் கோபத்தையும் உருவாக்கியுள்ளது.

மத்திய கிழக்கில் சவூதி ஒரு முக்கிய அறபு நாடு என்ற வகையில் அதனது அரசியல் மற்றும் ராஜதந்திர நடவடிக்கைகள் முக்கியமானவை என பலஸ்தீனர்கள் கருதுகின்றனர். இஸ்ரேலுடனான உறவை சுமுகமாக்குவதற்கு சவூதி எடுத்து வரும் நடவடிக்கைகள் பலஸ்தீனர்களைப் பலியெடுக்கும் ஆபத்தை உருவாக்கியுள்ளது என்று அறபு ஊடகவியலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

2017 ஜூன் மாதம் சவூதியின் முன்னாள் ஜெனரலும் மற்றும் மூலோபாய, சட்ட கற்கைகளுக்கான மத்திய கிழக்கு நிறுவனத்தின் தற்போதைய தலைவருமான அன்வர் எஷ்கி, "இஸ்ரேல் அறபுகளின் அமைதித் திட்டத்தை ஏற்றுக்கொண்டால் அதனுடனான உறவை சுமுகமாக்குவதற்கு ரியாத் தயாராகவுள்ளது என்று தெரிவித்திருந்தார். அதே மாதம் இஸ்ரேலின் தொலைத் தொடர்பாடல் அமைச்சர் அயூப்காரா சவூதியின் தலைமை முப்தி அப்துல் அஸீஸ் அஷ்ஷெய்க் அவர்களுக்கு டெல்அவிவுக்கு விஜயம் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

செப்டம்பர் 07 இல் முஹம்மத் பின் சல்மான் இஸ்ரேலிய தலைநகர் டெல் அவிவுக்கு விஜயம் செய்திருந்தார். நம்பவரில் இஸ்ரேலிய தூதுக் குழுவொன்று ரியாதுக்கு விஜயம் மேற்கொண்டு நகர அபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு செய்வதாக ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதே மாதம் ரியாதுக்கு அழைக்கப்பட்ட அப்பாஸிடம், அமெரிக்காவின் சமாதானத் திட்டத்தை பலஸ்தீனர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் பலஸ்தீன் அதிகார சபையை விட்டு அப்பாஸ் விலக வேண்டும் என முஹம்மத் பின் சல்மான் வற்புறுத்தினார்.

டிசம்பரில் ட்ரம்பின் அறிவித்தல் வெளிவந்ததைத் தொடர்ந்து ஸ்தன்பூலில் அவசரமாகக் கூடிய இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் கலந்துகொள்ளாது சவூதியும் அதன் நேச நாடுகளும் தவிர்ந்து கொண்டன. இத்தகை நகர்வுகள் ரியாத், பலஸ்தீனர்களுக்கு வெளிப்படையாக இழைத்து வரும் துரோகத்தையே எடுத்துக் காட்டுவதாக அரசியல்அவதானிகள்கருத்துவெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக, ஜெரூசலம் விவகாரத்தில் ரியாத் இஸ்ரேலின் பக்கம் நிற்பது ஆச்சரியமானது என்று அறபுலகின் பிரபல பத்திரிகையாளர் அத்னான் அபூ ஆமிர் தெரிவித்துள்ளர்.

# ஈரானில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம்




ஈரான் அரசுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம் ஒரு வாரத்திற்கு மேலாக நீடித்து வருவதனால் நாட்டில் பெரும் அரசியல் பதட்டம் ஏற்பட்டுள்ளதாக ஈரான் உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. ஆறு நாள் முடிவில் ஒரு பொலிஸார் உள்ளிட்டு 14 பேர் ஆர்ப்பாட்டத்தில் கொல்லப்பட்டுள்ளனர். 400 இற்கும் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதிலுமுள்ள முக்கிய நகரங்களில் தெஹ்ரான் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணிகள் வன்முறை வடிவம் எடுத்துள்ளன. "நாம் அமைதியாக இருப்பதை விட அரசை இவ்வாறு எதிர்ப்பது சிறந்தது" என்கிறார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஓர் இளைஞன்.

அதேவேளை, "ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோர் மகிழ்ச்சியாக இல்லை என்பதை வெளிக்காட்டுகின்றார்கள். அரசாங்கம் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்" என்கிறார் 52 வயதான அஸ்லான் என்பவர்.

உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவீனம் மற்றும் பொருளாதாரப் பின்னடைவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே டிசம்பர் 28 இல் தெ[illegible] தொடங்கிய ஆர்ப்பாட்டம் இரண்டாவது மிகப் பெரிய நகரான மஷ்ஹதுக்கு மாறியது. ஈரானின் புரட்சிகர இராணுவம் ஆர்ப்பாட்டம் குறித்து எச்சரித்துள்ளபோதும், ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்தும் எதிர்ப்புப் பேரணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈரான் ஜனாதிபதி ரூஹானி பாரிய விமர்சனத்திற்கு உட்பட்டுள்ளார். உள்ளூரில் நடைபெறும் இவ்வார்ப்பாட்டங்கள் வெளிச் சக்திகளால் நடத்தப்படுகின்றது என ஈரான் அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

# ஜோசப் கபிலா பதவி விலக வேண்டும் - ஐ.நா. வலியுறுத்து



கொங்கோ ஜனாதிபதி ஜோசப் கபிலா உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று ஐ.நா. செயலாளரும் அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரும் வற்புறுத்தி வருகின்றனர். 2001 இல் பதவிக்கு வந்த அவர், வெளியேறிச் செல்ல வேண்டிய தருணம் வந்து விட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர்களுள் ஒருவரான மார்டின் பைலூ ஊடகங்களிடம் தெரிவித்தார்.

"உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் நாம் தெரிவிக்கின்றோம், ஜோசப் பதவி விலக வேண்டும் என்று. இவர் கொங்கோ மீது பற்றுக் கொண்டவரல்ல. அவரது காலத்தில் கொங்கோவிற்கு எந்த அபிவிருத்தியும் நடக்கவில்லை. இதனால் கொங்கோ குடியரசில் ஜனாதிபதிக்கு எதிரான மக்கள் பேரணிகள் வீதிக்கு இறங்கியுள்ளன. அதில் பலர் கொல்லப்பட்டுள்ளதோடு, மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

பேரணியில் கலந்துகொண்டோர் கைதுசெய்யப்படுகின்றனர். ஜனநாயக பூர்வமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்கள் மீது அரசாங்கம் கட்டவிழ்க்கும் அடக்குமுறைகள் மனித உரிமை கண்காணிப்புக் குழுக்களால் கண்டனத்திற்கு உள்ளாகியிருக்கின்றது.

# சவூதியிலும் அமீரகத்திலும் வரலாறு காணாத வரிச் சுமை

2018 இன் தொடக்கத்தோடு, சவூதி அறேபியா மற்றும் ஐக்கிய அமீரகம் பொருட்கள் சேவைகள் மீதான பெறுமானம் சேர்க்கப்பட்ட புதிய வரியை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. பெற்றோலியப் பொருளாதாரத்தைத் தக்க வைப்பதும் வருமானத்தை அதிகரிப்பதுமே இதன் நோக்கம் என்று கூறப்படுகின்றது. VAT எனப்படும் இவ்வரி அறபு நாடுகளில் அறிமுகப்படுத்தப்படுவது இதுவே முதன்முறையாகும். பல்வேறு வகையான வணிகச் சரக்குகள், உணவு வகைகள், ஆடைகள், எரிபொருள், மின் உபகரணங்கள் என்பவற்றோடு, உல்லாசம், தொலைபேசி, குடிநீர் மற்றும் மின்சார பாவனை பட்டியல்கள் மீது 5% இவ்வரி சுமத்தப்பட்டுள்ளது. பாடசாலைக் கட்டணம், விமானச் சீட்டு, ரியல் எஸ்டேட் விற்பனை, வாடகை என்பவற்றுக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

சவூதி அறேபியாவுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் டின் கோலன், இந்த வரி பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமானது எனத் தெரிவித்துள்ளார். அறபு நாடுகளை பொருளியல் ரீதியில் வழிநடாத்தும் பொறுப்பை நாணய நிதியம் ஏற்றுக் கொண்டதன் குறியீடே இது என பொருளியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெரூசலம்:

## வரலாறும் தூக்கியெறிய முடியாத கேள்வியும்

• றவூப் ஸெய்ன்

''உலக வரலாற்றை இன்றிலிருந்து சுமார் 13,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து பார்ப்பது தான் நமது ஐயங்களுக்கு தெளிவைத் தேடித் தரும். அதற்கு முன்பும் மனித இனத்திற்கு ஒரு வரலாறு உண்டு. சுமார் 50 இலட்சம் ஆண்டுகளிலிருந்து துவங்கி, மனித இனம் பரிணமித்த வரலாற்றுக் காலகட்டத்திலிருந்து நாம் பல உண்மைகளைத் தேட வேண்டியுள்ளது.

உலகில் சுமார் 15,000 ஆண்டுகளுக்கு முன்பு பனியுகம் முடிவுக்கு வந்த காலகட்டத்தில், உலகின் பெரும்பாலான பகுதிகளில் மனித இனம் குடியேறி விட்டது. சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்பு வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும் ஒரு சில இடங்களில் தோன்றிவிட்டன. உலகில் முதன் முதலாக வேளான்மை தோன்றிய இடம் தென்மேற்கு ஆசியாவாகும். சிரியா, ஜோர்தான், துருக்கி, ஈரான் என்பன அதில் உள்ளடங்குகின்றன.



மலைகள் நிறைந்த வளைவான நிலப் பகுதி என்றும் வளமான பிறை நிலாப் பகுதி என்றும் அழைக்கப்படும் இப்பகுதியிலேயே ஜெரிகோ என்ற பண்டைய நகரமும் அமைந்துள்ளது. சுமார் 10,500 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் காட்டுப் பயிர்களாக விளங்கிய ஒரு வகைக் கோதுமையும் பட்டானியும் வேளாண்மை உணவுப் பயிர்களாக மாறின. இதற்கு 1000 வருடங்களுக்குப் பின்னரே சீனாவில் அரிசியும் திணையும் உணவுப் பயிர்களாக மாற்றப்பட்டன.''

(Jared Diamond - Guns, Germs and Steel)

வரலாறு காலனித்துவ சியோனிஸ சக்திகளின் வசதிகளுக்கு ஏற்ப எவ்வாறு புரட்டப்பட்டது என்பதை ஜெராடின் இந்தக் கூற்றிலிருந்து ஊகித்துக் கொள்ளலாம். உலகில் முதன் முறையாக தானியங்களும் கோதுமையும் பயிரிடப்பட்ட நிலம் பலஸ்தீன் என்பதை அவரது துப்பாக்கிகள், கிருமிகள் மற்றும் உருக்கு எனும் ஆய்வு நூல் உறுதி செய்கின்றது.

ஆனால், 1970 களில் இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் கோல்டா மேயர், அமெரிக்காவிலிருந்து வெளிவரும் டைம்ஸ் சஞ்சிகையில் எழுதிய கட்டுரையொன்றில், ''அவர்கள் (யூதர்கள்) பலஸ்தீனில் வந்திறங்கிய போது அந்த நிலம் வெற்றுப் பாலைவனமாகக் காட்சியளித்தது. ஆளரவமற்ற அப்பாலை நிலம் யூதர்களின் வருகையின் பின்பு தான் செழிப்புற்றது'' என்று எழுதுகிறார்.

வரலாற்றைப் பொய்களாலும் புனைவுகளாலும் போர்த்தியுள்ள யூதர்கள் எப்படிக் கதை பரப்புகின்றனர் என்பதை மேயரின் கூற்றிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

பலஸ்தீனர்கள் என்று சொல்லப்படுகின்ற எதுவுமே அங்கிருக்கவில்லை என்றும் வெப்பக் காற்று எகிறி வீசும் வெற்றுப் பாலைவனமே அது என்றும் யூதர்கள் காலடி எடுத்து வைத்த பின்னரே அந்நிலம் வளமானது என்றும் வரலாற்றை எப்படிப் புரட்டுகிறார் அவர். வரலாற்றைத் திருடுவது ஒன்றும் யூதர்களுக்குப் புதிதல்ல.

இன்றைய பலஸ்தீன் ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் வசித்து வந்த நிலம். வரலாற்றுப் பதிவுகளின்படி 6000 ஆண்டுகளாக மக்கள் வாழ்கின்றனர். வரலாற்று உண்மை இப்படியிருக்க, 20 ஆம் நூற்றாண்டின் இறுதிக் கூறுகளிலிருந்து வரலாற்றைத் தொடங்குகின்றார் கோல்டா மேயர். இங்குதான் ஜெரட் கூறுவது போல், பல்லாயிரம் ஆண்டுகளை நாம் பின்நோக்கிப் பார்க்க வேண்டியுள்ளது.

5000 ஆண்டுகளுக்கு முன்னர் கன்ஆனியூன்கள் வந்து குடியேறிய இடமே இன்றைய பலஸ்தீன். அவர்களில் ஒருவர் உருவாக்கிய நகரமே ஜெரூசலம். யேர்ஷலீம், ஓர்ஷலீம் என்று பண்டைய காலத்தில் அழைக்கப்பட்ட ஜெரூசலமே பின்பொரு காலத்தில் ஈலிய்யா, குத்ஸ் போன்ற பெயர்களால் வழங்கப்பட்டது. ஆதாரபூர்வமான தகவல்களின்படி, கன்ஆன் சமூகத்தைச் சேர்ந்த நேர்மையான ஓர் அரசன் ஜெரூசலம் நகரை உருவாக்கினான். முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் Flavius Josephus (37-100) ரோம-யூத யுத்தங்கள் எனும் நூலில் ''மெல்கி செடக்ஸ் எனுப்படும் கன்ஆனிய மன்னனே ஜெரூசலத்தைக் கட்டியெழுப்பியவன். அவன் நிஜமாகவே நேர்மையும் பலமும் கொண்டவன்'' என்று எழுதுகிறார்.

கி.மு. 1800 ஆம் ஆண்டளவில் வாழ்ந்த செடக்ஸ் நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் காலத்தவர் என பைபிள் குறிப்பிடுகிறது. அவர் ஜெரூசலம் நகரை கட்டியெழுப்புவதற்கு 3800 ஆண்டுகளுக்கு முன்பாகவே கன்ஆனியர்கள் பலஸ்தீனில் வாழ்ந்து வந்தனர். ஆங்கிலம், பிரான்ஸ், ஜேர்மன், லத்தீன், கிரேக்கம் போன்ற மொழிகளில் கூட ஜெரூசலம் எனும் பெயர் அறிமுகமாகியுள்ளது. அதன் வேர்ச் சொல் ஓர்ஷலீம் என்பதாகும்.

கி.மு. 1600 தொடக்கம் 1300 வரையான காலப்பகுதியில் அந்நகரம் எகிப்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. ஆட்சியதிகாரமோ கன்ஆனிய அரசர்களிடம் இருந்தது. அவர்கள் பிர்அவ்ன் மன்னர்களுக்கு திறை செலுத்தி வந்தனர். கி.பி. 1897 இல் எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்ட பண்டைய பட்டயத் தகடுகள் பிர்அவ்னிய மன்னர்களுக்கு ஜெரூசலத்தின் ஆட்சியாளர்களான கன்ஆனிய மன்னர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கடிதப் பரிமாற்றங்கள் குறித்துப் பேசுகின்றன.

இக்காலகட்டத்திலேயே எகிப்தில் பனூ இஸ்ரவேலர்கள் பிர்அவ்ன்களால் அடிமை கொள்ளப்பட்டிருந்தனர். பனூ இஸ்ரவேலர்கள் மீது பிர்அவ்ன்கள் கடும் அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். எனவே, பனூ இஸ்ரவேலர்களைப் பாதுகாத்து இறைத் தூதை அவர்களுக்கு எத்திவைக்கும் பொறுப்பு மூஸா நபியிடம் ஒப்படைக்கப்பட்டது. மூஸா அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட ஒரு தூதுவராக பனூ இஸ்ரவேலர்களிடம் வந்தார். அவர்களை எகிப்திலிருந்து வெளியேற்றி, பலஸ்தீனின் வடக்குப் புறத்தில் குடியமர்த்தினார். முதன் முதன்றையாக பனூ இஸ்ரவேல் அகதிகளுக்கு அடைக்கலம் கொடுத்த நாடே பலஸ்தீன்.

மூஸாவைத் தொடர்ந்து தாவூத் (அலை) அவர்களும் சுலைமான் (அலை) அவர்களும் இறைத் தூதர்களாக வந்தனர். கி.மு. 10 ஆம் நூற்றாண்டில் தாவூத் அலை அவர்கள் ஓர்ஷலீம் நகரில் ஆட்சியை நிறுவினார். பின்னர் சுலைமான் நபி அவர்கள் ஜெரூசலத்தின் ஆட்சியாளராக மாறினார். எனினும், சுலைமான் அலை அவர்களின் மரணத்தின் பின்னர் பனூ இஸ்ரவேலர்கள் பலயீனப்பட்டனர். ஒழுக்கச் சீர்கேடுகளும் குற்றச் செயல்களும் அவர்களின் சமூகத்தின் மலிந்தன.

பலஸ்தீனின் வடக்குப் புறமாக இடைவிட்டு இடைவிட்டு நான்கு நூற்றாண்டுகள் அவர்களின் ஆட்சி இருந்தது என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், 6000 ஆண்டுகளாக கன்ஆனியர்கள் (இன்றைய பலஸ்தீனர்கள்) வாழ்ந்து வந்த நாட்டில் இடையில் புகுந்தவர்களே அவர்கள். கன்ஆனியர்கள் ஜெசலத்தையும் பலஸ்தீனையும் 1200 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளனர். பிற்காலத்தில் இந்நகரை பபிலோனியர்கள் கைப்பற்றினர். இது கி.மு. 587, 585 என இரு வரலாற்றுத் தகவல்கள் உள்ளன. அவர்கள் அங்கிருந்த யூதர்களை நாடு கடத்தியதோடு, பலரை சிறைப் பிடித்தனர்.

நபிமார்களின் போதனைகளை மறுத்து, நபிமார்களைக் கொலை செய்து, நேர்வழியிலிருந்து மனமுரண்டாகப் பிறழ்ந்த யூதர்களுக்கு அல்லாஹ் வழங்கிய தண்டனையே இது. இந்த உண்மையை அல்குர்ஆன் பின்வருமாறு பகர்கின்றது.

''இஸ்ராயீலின் சந்ததிகளாகிய உங்களைப் பற்றி நிச்சயமாக நீங்கள் இரண்டு முறை பூமியில் விசமம் செய்வீர்கள் என்றும் நீங்கள் மேன்மையடைந்து அக்கிரமம் செய்வீர்கள் என்று உங்களுக்கு நாம் வேதத்தில் விதித்துள்ளோம். அவ்விரண்டில் முதல் தவணை வந்த சமயத்தில் நம் அடியார்களில் இரக்கமற்ற பெரும் பலசாலிகளான மனிதர்களை உங்கள் மீது ஏவி விட்டோம். அவர்கள் வீடுகளுக்குள் புகுந்து தங்கள் கைக்கெட்டியதையெல்லாம் அழித்து நாசமாக்கினர். அதனால், பைதுல் மக்திஸிலிருந்த ஆலயமும் அவ்வூரும் அழிந்து நாசமாகின. இவ்வாறே நமது முந்திய வாக்குறுதி நிறைவேறியது.'' (17:4-5)

இச்சம்பவம் இடம்பெற்று 50 ஆண்டுகளுக்குப் பின்னர் பாரசீக மன்னர் பபிலோனியர்களைத் தோற்கடித்து பலஸ்தீனையும் ஜெரூசலத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். யூதர்களை அங்கு மீண்டும் குடியேற அனுமதித்தார்.

கி.மு. 332 இல் ஜெரூசலம் பாரசீகர்களிடமிருந்து மகா அலெக்சாந்தரின் கைக்கு மாறியது. பின்னர் கிரேக்கர்களின் கட்டுப்பாட்டில் வந்தது. கிரேக்கர்களிடமிருந்து யூதர்கள் அதனை மீண்டும் கைப்பற்றினர். எனினும் அவர்களது ஆட்சி நீடிக்கவில்லை. அந்நகரை ரோமர்கள் கைப்பற்றி உமர் (ரழி) அவர்கள் வெற்றி கொள்ளும்வரை ஆட்சி செய்தனர்.

உமர் (ரழி) அவர்கள் இந்நகரை வெற்றி கொண்டு பொறுப்பேற்கச் சென்ற வேளை, யூதர்கள் எவரையும் அங்கு குடியேற்றுவதில்லை என்று உத்தரவாதமளிக்குமாறு ரோமர்கள் வேண்டிக் கொண்டனர். இதுவே, ஜெரூசலத்தின் வரலாற்றுப் பின்னணியாகும். அகதிகளாகவும் ஆக்கிரமிப்பாளர்களாகவும் இடையில் வந்து புகுந்த பனூ இஸ்ரவேலர்களை விட பல்லாண்டு கால பழைமை வாய்ந்த பூர்வீகம் இன்றைய பலஸ்தீன அறபுகளுக்கு உள்ளது.

இன்று ஜெரூசலத்தை இஸ்ரேலிய யூதர்களின் தலைநகராக ட்ரம்ப் பிரகடனம் செய்துள்ளார். மத ரீதியிலோ வரலாற்று ரீதியிலோ இனத் தொடர்ச்சி என்ற அடிப்படையிலோ இன்றைய சியோனிஸ யூதர்களுக்கு ஜெரூசலம் மீது உரிமை கோர எந்த அருகதையும் இல்லை. ஏனெனில், வரலாற்றில் அவர்கள் கன்ஆனியர்களுக்குப் பின்னர் வந்தவர்கள். மூஸா, தாவூத், சுலைமான் ஆகிய நபிமார்களின் நேர்வழியை தூக்கி வீசியவர்கள். மட்டுமன்றி, அப்போது வாழ்ந்த பனூ இஸ்ரவேலர்களுக்கும் இன்றைய சியோனிஸ யூதர்களுக்கும் இடையில் எந்த கலாச்சார, வரலாற்று, இனத் தொடர்ச்சியும் இல்லை.

Arthur Kostler என்ற யூத வரலாற்றாசிரியர், The Thirteen Tribe: The Khazar Empire and its haritage எனும் நூலில் பின்வருமாறு எழுதுகிறார். ''இன்றைய யூதர்கள் பழைய பனூ இஸ்ரவேலர்களின் சந்ததியினர் அல்லர். இன்றைய யூதர்கள் பழைய தாத்தாரிய இனத்தைச் சேர்ந்தவர்கள். கவ்காஸ் பிராந்தியத்தில் வாழ்ந்தவர்கள். கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் கஸ்பியன் கடலுக்கு வட மேற்காக தமக்கான ஒரு ராஜ்யத்தை உரு வாக்கியவர்கள். 8 ஆம் நூற்றாண்டில் அப் பகுதியை ஆட்சி செய்தவர்கள். 10 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அவ்வாட்சி வீழ்ச்சி யடைந்தது. ரஷ்யாவும் பைசாந்தியமும் இவ் வீழ்ச்சிக்குக் காரணமாகின. இதனால், யூதர்கள் ரஷ்யா உள்ளிட்டு, கிழக்கு மற்றும் மேற்கு ஐரோப்பாவுக்குப் பரவிச் சென்றனர். (பக்.14)

# பொஸ்பரஸ் கரையினிலே...

## துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 24



### 2016 ஜூலை 15 அன்று நடந்தது என்ன?

இராணுவத்திற்குள் பின்னிப் பிணைந்திருந்த பத்ஹுல்லா குலான் பயங்கரவாத இயக்க உறுப்பினர்கள் ஒரு புதுவிதமான சதி முயற்சியை மேற்கொண்டனர். கனரக யுத்த உபகரணங்களான யுத்த விமானம், யுத்த தாங்கிகள் மற்றும் ஹெலிகொப்டர்களைக் கொண்டு தாக்குதல் தொடுத்தனர்.

குலான்வாதிகளின் சதியை முறியடிக்கத் துணிந்து நின்ற பொதுமக்களை கொலை செய்தனர். ஜனாதிபதி வாசஸ்தலம் மற்றும் பாராளுமன்றக் கட்டடத்தின் மீதும் யுத்த விமானங்கள் தாக்குதல் நடத்தின. ஸ்தன்பூல், அங்காரா முதலான நகரங்களில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தினர். ஜனாதிபதி ரஜப் தையிப் அர்தூகானை கொலை செய்ய எடுத்த முயற்சியும் தோல்வியடைந்தது. அதன்போது 173 பொதுமக்களும் 62 பொலிஸாரும் 5 இராணுவத்தினரும் உயிரிழந்தனர். சுமார் 1491 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சதிமுயற்சி வெற்றியடைந்திருந்தால் பல்லாயிரக் கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் பலியாகியிருப்பார்கள். சுதந்திரமும் ஜனநாயகமும் கட்டுப்படுத்தப்பட்டு, பத்ஹுல்லா குலானின் வழிபிறழ்ந்த மத சிந்தனைகளின் அடிப்படையில் ஒரு சர்வதிகார அமைப்பு கட்டியெழுப்பப் பட்டிருக்கும்.

இந்த நாசகார முயற்சியை சமூகத்திலுள்ள அனைத்து மக்களும் கட்சி, மதம், இனம், இயக்கம், சிந்தனைப் போக்கு என்பவற்றுக்கு அப்பால் நின்று முறியடித்தனர். தொழிலாளர்கள், வர்த்தக அமைப்புக்கள், சமூக நிறுவனங்கள், ஊடகத் துறையினர் என அனைவரும் ஓரணி திரண்டு, சதிக்கு எதிராகப் போராடினர்.

### குலான்வாதிகள் துருக்கிக்கு மாத்திரமா அச்சுறுத்தல்?


அரங்கேறிய சதி முயற்சியிலிருந்து வெளிச்சத்திற்கு வரும் விடயம் யாதெனில், வழிபிறழ்ந்த ஒரு மத நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு இராணுவச் சர்வதிகாரத்தை ஸ்தாபிக்க முயற்சிக்கப்பட்டது என்பதுதான். அதற்காக அவர்கள் எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடுவார்கள். 15 ஆம் திகதியன்று அரங்கேறிய சதி முயற்சியின்போதும் பொது மக்களைக் கொன்றொழித்தாவது தமது இலக்கை அடைவதற்கே முழு முயற்சியையும் மேற்கொண்டனர். இவர்களை சமாதானத்தைப் பரப்பும் ஒரு இயக்கமாகக் கருதுவது பொருத்தமற்றதாகும்.

ஆள்மாறாட்டம் செய்தல், சூழ்ச்சி செய்தல், ரகசியமாக இயங்குதல், முதலானவற்றில் நுணுக்கமான பயிற்சிகளைப் பெற்றுள்ளதால் இவர்களை இலகுவில் அடையாளம் காண முடியாதுள்ளது. தமது வழிகெட்ட மத நம்பிக்கையின் அடிப்படையில் உருவான அதிகாரத்தைக் கைப்பற்றும் ரகசியத் திட்டத்தை இவர்கள் முன்நகர்த்தி வருகின்றனர். எனவே, இவ்வியக்கம் எந்தெந்த நாடுகளில் செயல்படுகின்றதோ அந்தந்த நாடுகளுக்கும் மனித குலத்திற்கும் அச்சுறுத்தலாகவே அமைவார்கள்.

குலான் இயக்கப் பயங்கரவாதிகள், போக்கோ ஹராம், ஐசிஸ் போன்ற அமைப்புகளுக்கு எதிராக முழு உலகும் ஒன்று திரண்டு போராட வேண்டும். இவை அனைத்தும் வழிதவறிய சிந்தனைகளின் அடிப்படையிலேயே மார்க்கத்திற்கு வியாக்கியானம் வழங்குகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் வெளிநாடுகளில் வசிக்கும் எமது பிரஜைகள், எமது சொந்த பந்தங்கள், எமது உறவுகள், வெளிநாடுகளிலுள்ள அமைப்புகள் மற்றும் ஜனநாகத்தை மதிக்கும் மக்கள் நாட்டின் இறைமையையும் மனித உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்க எமக்கு வழங்கிய அனைத்து உதவிகளையும் நாம் ஒருபோதும் மறக்க மாட்டோம். மேலும் நடந்தேறிய சதி முயற்சியை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இதில் உயிர்நீத்த எமது வீரர்களான பொதுமக்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு அல்லாஹ் அருள்பாலிக்க வேண்டும் எனவும், காயமடைந்தோர் பூரண சுகம் பெற வேண்டும் எனவும் பிரார்த்திக்கிறோம்.

- துருக்கிய அரசாங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸும் ஊன்றுகோலும்

• முஹம்மத் தம்பி மரைக்கார்

'திருவிழா என்று' உவமிக்குமளவுக்கு தேர்தல் காலம் இன்னும் களைகட்டவில்லை. அதற்கு இன்னும் கொஞ்சம் நாளெடுக்கும். தேர்தல் தினம் அறிவிக்கப்பட்ட தினத்துக்கும், தேர்தல் நாளுக்குமிடையில் 50 நாட்கள் இடைவெளி இருந்தமைதான் இதற்குக் காரணமாகும்.

இன்னும் இரண்டு வாரங்கள் கழியும் போதுதான், தேர்தல் காலம் களைகட்டத் தொடங்கும். ஆனாலும், திருவிழா அளவுக்கு தேர்தல் காலம் களைகட்டும் என்பதற்கு, நடக்கும் நிகழ்வுகள் கட்டியம் கூறுகின்றன.

வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து நடந்தவற்றை எல்லாம் வைத்தும் பார்க்கும்போது, தேர்தல் காலம் களைகட்டுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகவே தெரிகின்றன.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் அரசியல் களம், களைகட்டுவதற்கான அறிகுறிகள் இப்போதே தெரியத் தொடங்கி விட்டன.

93 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் இறுதித் தினமன்று, முஸ்லிம் காங்கிரஸின் தளம் என்று அறியப்படும் அம்பாறை மாவட்டத்தில், முஸ்லிம் காங்கிரஸின் அக்கரைப்பற்று அமைப்பாளரும், அந்தக் கட்சியின் உயர்பீட உறுப்பினருமான ஹனீபா மௌலவியும் முஸ்லிம் காங்கிரஸின் அக்கரைப்பற்று பிரதேச மத்திய குழு உறுப்பினர்கள் சிலரும், அந்தக் கட்சியிலிருந்து விலகி, அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்து கொண்டார்கள்.

அந்த நிகழ்வு நடந்து நான்கு நாட்களுக்குள், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளரும், உயர்பீட உறுப்பினருமான கல்முனையைச் சேர்ந்த கே.எம். ஜவாத், அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்து கொண்டதாக அறிவித்தார்.

எப்படிப் பார்த்தாலும், தேர்தல் காலமொன்றில் மேற்படி நபர்கள் மு.காவிலிருந்து விலகியமையானது, அந்தக் கட்சிக்கு இழப்புத்தான் என்பதை மறுக்க முடியாது. அதிலும், கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ஜவாத்தின் விலகலானது மு.காவுக்கு ஜீரணிக்க முடியாததாகவே இருக்கும்.

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் ஊரான கல்முனைதான், ஜவாத்துக்கும் சொந்த ஊராகும். முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில், தனது இளவயதிலிருந்தே அஷ்ரப்புடன் நெருக்கமாக இருந்து, கட்சி வளர்ச்சிக்காக ஜவாத் உழைத்தார். முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் அஷ்ரப்பின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்களில் ஒருவராக ஜவாத்தும் இருந்தார்.

நேராகவும், வெளிப்படையாகவும் விமர்சனங்களை முன்வைக்கும் ஒருவராக ஜவாத் அறியப்படுகின்றார். முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீமையும் பல தடவை நேருக்கு நேராக ஜவாத் விமர்சித்திருந்தார். அதனால், மு.கா தலைவருக்கும் ஜவாத்துக்கும் இடையில் எப்போதும் நெருக்கமானதோர் உறவு இருந்ததில்லை.

ஆனாலும், முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர்களில் ஒருவரும், கல்முனையைச் சேர்ந்தவருமான பிரதியமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ், அவரின் பிரதேசத்தில் தனிக்காட்டு ராஜாவாக மாறிவிடக் கூடாது என்பதற்காக, மு.கா. தலைவருக்கு, ஜவாத் தேவையாகவும் இருந்தார் என்கிற பேச்சும் உள்ளது.

கல்முனையைச் சேர்ந்த ஜவாத்தும் ஹரீஸும் முஸ்லிம் காங்கிரஸுக்குள் முக்கியஸ்தர்களாக இருந்தபோதும், அரசியலில் அவர்கள் இருவரும் கீரியும் பாம்புமாகவே இருந்து வருகின்றனர். ''கல்முனையில் பிரதியமைச்சர் ஹரீஸை, மு.கா தலைவர் முன்னிலைப்படுத்துவதோடு, என்னை திட்டமிட்டு ஓரம் கட்டுகிறார்'' என்று, மிக நீண்ட காலமாகவே ஜவாத் குற்றம் சாட்டி வந்தார்.

இந்நிலையில், முஸ்லிம் காங்கிரஸிலிருந்து அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமாக இருந்த எம்.ரி. ஹசன் அலி வெளியேறியபோது, ஜவாத்தும் இணைந்து வெளியேறுவார் என்கிற எதிர்பார்ப்பு கட்சிக்குள்ளும் வெளியிலும் இருந்தது.

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளராக ஹசன் அலிதான் இருக்க வேண்டும் என்பதில் ஜவாத் உறுதியாக இருந்தார். ஹசன் அலி வெளியேறிய பிறகும் முஸ்லிம் காங்கிரஸுக்குள் ஜவாத் தொடர்ந்து இருந்தமையைப் பலரும் ஆச்சரியமாகவே பார்த்தனர்.

எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டு முஸ்லிம் காங்கிரஸின் யாப்பில் பாரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், கட்சிக்குள் ஜவாத் பிடிப்பற்ற ஒருவராகவே இருந்து வந்தார். முஸ்லிம் காங்கிரஸிலிருந்து எந்தக் கணத்திலும் ஜவாத் விலகலாம் என்கிற சந்தேகம் பலருக்கும் இருந்தது. அது இப்போது நடந்திருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்து கொண்ட ஜவாத், கல்முனை மாநகர சபைக்கான தேர்தலில் தனது ஆட்கள் பலரை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வேட்பாளராகவும் நிறுத்தியிருக்கின்றார். மேலும், அந்தத் தேர்தலுக்குரிய விகிதாசார வேட்பாளர் பட்டியலில் தனது பெயரையும் இணைத்துக் கொண்டு, தேர்தல் வேலைகளில் ஜவாத் களமிறங்கியிருக்கின்றார்.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து ஜவாத் விலகியதோடு மட்டும் நின்று விடாமல், கல்முனை மாநகர சபைக்கான தேர்தல் களத்தில், அதுவும் முஸ்லிம் காங்கிரஸின் எதிராளிக் கட்சியின் சார்பில் ஒரு வேட்பாளராகக் களமிறங்கியிருப்பது மு.காவுக்கு அதிர்ச்சியாகவே இருக்கும்.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும், கரையோரப் பிரதேசங்களின் உத்தியோகபூர்வமற்ற தலைநகராக கல்முனை உள்ளது. மேலும், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அஷ்ரபின் சொந்த ஊர் கல்முனை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதனால், கல்முனை மாநகர சபைத் தேர்தலில் வெற்றி பெறுவதென்பதை, தனக்கான பெருமையாக முஸ்லிம் காங்கிரஸ் கருதுகிறது. கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையை முஸ்லிம் காங்கிரஸ்தான் கைப்பற்றியும் வந்துள்ளது. ஆனால், இம்முறை கல்முனை மாநகர சபைக்கான தேர்தல், முஸ்லிம் காங்கிரஸுக்கு சவாலையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

கல்முனை மாநகர சபைக்கான தேர்தலில், முஸ்லிம் காங்கிரஸுக்குப் பாரிய வெற்றியையும், பெருமளவான உறுப்பினர்களையும் பெற்றுக் கொடுப்பதில் சாய்ந்தமருது பாரிய பங்களிப்பைச் செய்து வந்தது. ஆனால், இப்போது அவ்வாறானதொரு நிலைவரம் அங்கு இல்லை. தங்களுக்கு உள்ளூராட்சி சபையொன்று கிடைக்கும் வரை, எந்தவோர் அரசியல் கட்சிக்கும் ஆதரவளிப்பதில்லை எனச் சாய்ந்தமருது மக்கள் சார்பாக, அந்த ஊர்ப் பெரிய பள்ளிவாசல் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

இதையடுத்து கல்முனை மாநகர சபைக்கான தேர்தலில், சுயேட்சைக் குழுவொன்றை சாய்ந்தமருது பள்ளிவாசல் நிருவாகத்தினர் களமிறக்கியுள்ளனர். இந்த நிலைவரமானது, முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கு பேரிடியாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறானதொரு நிலையில், கல்முனையில் மக்கள் செல்வாக்குள்ள ஜவாத், முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி, அந்தக் கட்சியின் மிகப்பெரும் பகைமைக் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில், கல்முனை மாநகர சபைக்கான தேர்தலில் களமிறங்கியிருப்பது, முஸ்லிம் காங்கிரஸுக்கு அடியாக அமைந்து விட்டதாகவே, அரசியலரங்கில் பேசப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, அரசியலரங்கில் ஏற்பட்டுள்ள இவ்வாறான மாற்றங்கள், முஸ்லிம் காங்கிரஸுக்கு சாதகமற்ற காரணிகளாகவே அமைந்துள்ளன. இதன் காரணமாக, முஸ்லிம் காங்கிரஸின் கோட்டை என அறியப்படுகின்ற அம்பாறை மாவட்டத்துக்குள், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை அந்தக் கட்சி பாரிய சவால்களுடனேயே எதிர்கொள்ள வேண்டி வரும்.

அம்பாறை மாவட்டத் தேர்தல் களத்தில் புறச் சவால்களையே முஸ்லிம் காங்கிரஸ் அதிகம் சந்திக்க வேண்டியுள்ளது. ஆனால், கிழக்கின் மற்றொரு மாவட்டமான மட்டக்களப்பில் புறத்திலும், அகத்திலும் சவால்களைச் சந்திக்க வேண்டியதோர் இக்கட்டான நிலைக்குள் முஸ்லிம் காங்கிரஸ் தள்ளப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூரைச் சேர்ந்தவர். அதே ஊரில்தான் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர்களில் ஒருவருமான ஹாபிஸ் நசீர் அஹமட்டும் இருக்கின்றார்.

இருவரும் ஒரே கட்சிக்காரர்கள் என்றாலும், அரசியலில் பகையாளிகள். இதனால், அலிசாஹிர் மௌலானாவும் ஹாபிஸ் நசீரும் இணைந்து, அங்குள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்த முடியாத நிலைவரம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, உள்ளூராட்சி சபையொன்றுக்கான தேர்தலில், முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர்களை இரண்டு கட்சிகள் சார்பில் நிறுத்த வேண்டிய இக்கட்டான நிலைக்குள் மு.கா தலைவர் சிக்கியுள்ளார்.

உதாரணமாக, ஏறாவூர் நகரசபைக்கான தேர்தலில், ஹாபிஸ் நசீர் அஹமட், தனது அணியைச் சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ்காரர்களை ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், அதே சபைக்கான தேர்தலில் அலிசாஹிர் மௌலானா, தனது அணியைச் சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ்காரர்களை முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் தராசு சின்னத்தில் வேட்பாளர்களாகக் களமிறக்கியுள்ளார்.

அதாவது, இரண்டு நபர்களுக்குள்ள பிரச்சினை காரணமாக, ஓர் உள்ளூராட்சி சபைக்கான தேர்தலில், தனது கட்சிக்காரர்களை இரு வேறு சின்னங்களில் களமிறக்க வேண்டிய நிலைவரம் முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏற்படுள்ளது. கலப்புத் தேர்தல் முறையில், மு.காவுக்கு இது நட்டமாகவே அமையும்.

அலிசாஹிர் மௌலானா தனது அணியினரை வேட்பாளர்களாகக் களமிறக்கியுள்ள முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு எனும் கட்சியானது, முஸ்லிம் காங்கிரஸின் 'மாற்றுக் குழந்தை' என்று சொல்லப்படுகிறது.

இந்தக் கட்சியின் தலைவர், செயலாளராக முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளின் உறவினர்களே உள்ளனர். ஹாபிஸ் நசீருடன் அரசியலில் ஒத்துப் போக முடியாது என்று கூறி, அலிசாஹிர் மௌலானா தனது அணியினரை வேட்பாளர்களாகக் களமிறக்கியுள்ள முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு என்கிற கட்சியின் தலைவரே ஹாபிஸ் நசீருடைய சகோதரர் என்பது, இங்கு முரண் நகையான செய்தியாகும்.

இன்னொருபுறம், முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளரும், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தற்போதைய தவிசாளருமான பஷீர் சேகுதாவூத்தும் மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளார்.

ஹாபிஸ் நசீர், அலிசாஹிர் மௌலானா ஆகியோரைப் போலவே, பஷீர் சேகுதாவூத்தும் ஏறாவூரைச் சேர்ந்தவர். இவரும் தனது கட்சியின் வண்ணத்துப் பூச்சிச் சின்னத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தின் சில சபைகளுக்கான தேர்தல்களில் வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பஷீர் சேகுதாவூத், தவிர்க்க முடியாத ஓர் அரசியல் ஆளுமையாவார். முஸ்லிம் காங்கிரஸில் அவர் இருந்தபோது, அந்தக் கட்சியின் மூளையாகச் செயற்பட்டவர். அவ்வாறான ஒருவர் தனது கட்சியில் வேட்பாளர்களைக் களமிறக்கி, மு.கா.வோடு நேரடியாகப் போட்டியிடத் தயாராக நிற்பது, முஸ்லிம் காங்கிரஸுக்கு அச்சுறுத்தலாகவே அமையும் எனக் கூறப்படுகிறது.


தேர்தலொன்று வரும் போது, கட்சியொன்றின் உள்முரண்பாடுகள் அநேகமாகத் தீர்த்து வைக்கப்படுவதுண்டு. ஒரே கட்சிக்குள்ளிருக்கும் முக்கியஸ்தர்களிடையே உள்ள மனக் கசப்புகள் முடிவுக்குக் கொண்வரப்படுவதை நாம் கண்டிருக்கின்றோம். தேர்தலை வெற்றி கொள்வதற்கு, ஒரு கட்சி எடுக்கும் முதல் முயற்சி அதுவாகவே இருக்கும்.

ஆனால், மட்டக்களப்பு மாவட்டத் தேர்தலில், முஸ்லிம் காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டுக் களமிறங்கியுள்ளமையானது, அந்தக் கட்சியின் பலவீனத்தையே அம்பலப்படுத்தியுள்ளது. அலிசாஹிர் மௌலானாவுக்கும் ஹாபிஸ் நசீருக்கும் இடையிலான பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியாத நிலையில் மு.கா தலைமைத்துவம் இருக்கின்றது என்கிற செய்தியும் இங்கு வெளிப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண முஸ்லிம் அரசியலில், முஸ்லிம் காங்கிரஸுக்குப் பிரதான பாத்திரமுள்ளது. ஆனால், அந்தக் கட்சியின் அகத்திலும் புறத்திலும் ஏற்பட்டுள்ள பிளவுகள் காரணமாக, எதிர்வரும் தேர்தலை மு.காங்கிரஸ் மகிழ்ச்சியுடன் எதிர்கொள்ள முடியாததொரு நிலைவரம் உருவாகியுள்ளதை மறைக்க முடியாது.

இந்த பலவீனங்களிலிருந்து எழுந்து நின்று, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலைச் சந்திப்பதற்கு, மு.காவுக்கு ஓர் ஊன்றுகோல் அவசரத் தேவையாக உள்ளது. அதை எங்கிருந்து, எப்படிப் பெறுவதென்பதை அந்தக் கட்சியின் தலைவர்தான் கண்டறிய வேண்டும்.

ஊன்றுகோலைத் தேடியெடுப்பதென்பது, கனிந்து தொங்கும் ஒரு பழத்தை, மரத்திலிருந்து பறித்தெடுப்பது போல், அத்தனை எளிதான காரியமாக அது இருக்கப் போவதில்லை.



## இந்திய முஸ்லிம்களுக்கு எதிராக இந்து அமைப்புகள் வெறுப்புப் பேச்சு

இந்திய முஸ்லிம்களுக்கு எதிராக அந்நாட்டிலுள்ள இந்து அமைப்புகளின் தலைவர்கள் பேசியதாகக் கருதப்படும் வெறுப்புப் பேச்சுகளைக் கொண்ட ஒரு காணொளியை 'இந்திய துணைக் கண்டத்தின் அல்-கய்தா' என்னும் அமைப்பு வெளியிட்டுள்ளது.

'காவி தீவிரவாதம்' என்ற தலைப்பில் வெளியிடப்படும் நான்காவது காணொளி இது. முன்பு வெளியிடப்பட்ட காணொளிகளைப் போலவே இதுவும் 'இந்து தீவிரவாதிகள்' என்ற கருத்தைக் கொண்டுள்ளது. ஹிந்தி மற்றும் உருது மொழிகளில் தயாரிக்கப்பட்ட இந்தக் காணொளி, அல்-கய்தாவின் அதிகாரபூர்வ ஊடகப் பிரிவான 'அல்-சாஹபால் டெலிகிராம்' செயலியில் வெளியிடப்பட்டது.

இந்து மதத்தில் 'காவி' என்ற வார்த்தை புனித நிறமாகக் கருதப்படுகிறது. ஆனால், இந்திய அரசியலில் வலதுசாரி இந்துக் குழுக்களை குறிப்பதாகவும் காவி என்ற சொல் உள்ளது. 'அவர்களது பேச்சுகள் மூலம் பகைமை வெளிப்படுகிறது' என்ற வார்த்தைகளுடன் இந்த 6:42 நிமிட வீடியோ தொடங்குகிறது.

'காவி தீவிரவாத காணொளி' தொடரின் மற்ற காணொளிகளை போல இல்லாமல், இந்த அண்மைய காணொளியில் அன்-நாஸ்ர் ஊடகத்தின் சின்னம் உள்ளது.

தெற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் அல் கொய்தாவின் ஊடகப் பணியின் வளர்ச்சிக்கு அன்-நாஸ்ர் முக்கிய பங்காற்றி வருவதாக தெரிகிறது. இதன் தயாரிப்புகள், அல்-கொய்தாவின் அதிகாரப்பூர்வ ஊடக அலைவரிசைகளால் ஒளிபரப்பப்படுகின்றன.

இந்திய துணைக் கண்டத்தின் அல் கொய்தா' அமைப்பு 2014-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆசியாவில் ஜிகாதிஸ்ட் நடவடிக்கைகளை புதுப்பிப்பதுதான் இந்த துணை அமைப்பின் நோக்கம் என அல் கொய்தாவின் தலைவர் ஆயமான் அல் ஜவாஹிரி கூறியிருந்தார். பாகிஸ்தான், காஷ்மீர், பங்களாதேஷ், இந்தியா மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளின் முஸ்லிம்களை அடக்குமுறையில் இருந்து காப்பதில் கவனம் செலுத்துவதாக இக்குழு அதன்பிறகு கூறியிருந்தது. (நன்றி: பிபிசி தமிழ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தன்னிகரில்லாத 10 இளைஞர்களில் ஒருவராக ரஸ்னி ராஸிக்

அனஸ் அப்பாஸ்



சிறுவர் வழிநடாத்தல் மற்றும் ஆலோசனை வழங்குனர், சமூக செயற்பாட்டாளர், ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பு (UNHCR) இன் இலங்கையிலுள்ள Muslim Aid உடன் இணைந்த அகதிகளுக்கான அமைப்பின் ஆலோசகருமான இளம் பெண்மணி ரஸ்னி ராஸிக், Junior Chamber International (JCI) வழங்கிய ''சிறுவர்களுக்கான பங்களிப்பு, உலக சமாதானம், மற்றும் மனித உரிமைகள்'' தேசிய விருதை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் பேராசிரியர் சுஜீவ அமரசேனவின் கரங்களால் வென்றுள்ளார்.

தான் கற்ற கல்வி மூலமும், பரம்பரை பரம்பரையாக சமூக தொண்டாற்றுவதில் தனது குடும்பம் காட்டி வரும் உத்வேகம் மூலமும், இயல்பிலேயே சிறுவர்களின் கல்வி விவகாரங்களிலும், வாழ்வாதார மேம்பாட்டிலும் கவனம் செலுத்தும் தனது மனப்பாங்குமே இவ் விருதை வெல்ல துணை செய்ததாக அவர் குறிப்பிடுகின்றார்.

கம்பளை ஸாஹிராவில் ஆரம்பித்து கண்டி Ecole சர்வதேசக் கல்லூரியில் அடிப்படை கல்வியை முடித்து, இளம் வயதிலேயே சிறுவர் உளவியல், முன் பள்ளிக் கல்வி கற்கை, சர்வதேச கற்கைகள் என்பவற்றை பூர்த்தி செய்த ரஸ்னி ராஸிக், கண்டி வைத்திய கற்கைகள் நிலையத்திலுள்ள வைத்தியர்களின் நலன் புரி சமூகத்தினது அங்கவீன விஷேட தேவையுடையோருக்கான கல்வி புகட்டலில் சேவையாற்றினார்.

ரஸ்னியின் சேவைகளில் முக்கியமான ஒன்றை சொல்கிறேன் கேளுங்கள். பாதையில் கைவிட்ட நிலையிலுள்ள சிறுவர்களுக்கான நிலையம் (Centre for Street Children) ஒன்றிற்கு இவர் மேற்கொண்ட விஜயம் அவரது வாழ்க்கையின் முக்கியமான திருப்புமுனை. அந் நிலையத்தில் உள ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் அச்சிறுவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை உணர்ந்த ரஸ்னி ராஸிக், துருக்கி அமைப்பொன்றின் நிதி பங்களிப்புடன் சிறந்த பராமரிப்பு நிலையம் ஒன்றை (Pearls of Paradise) இலங்கையில் நிறுவ உதவினார். இன்றும் அது 65 அநாதரவான சிறுமிகளுடன் சிறப்பாக இயங்குகின்றது.

மற்றும் அவரது "If not us who? if not now when?" எனும் கேள்வியுடனான www.carestation.lk இணையதள உருவாக்கம் மூலமாக வறுமை ஒழிப்புக்கான முன்னெடுப்புக்கள், நிதித் திரட்டல் மற்றும் தன்னார்வத் தொண்டர் உருவாக்கம் என்பன மேற்கொள்ளப்படுகின்றது.

JCI அமைப்பு 115 நாடுகளில், 5000 இற்கும் மேற்பட்ட உள்ளூர் அமைப்புக்களின் மூலம் 200,000 துடிப்பான பிரசைகளைக் கொண்ட சர்வதேச வலையமைப்பாக இயங்குகின்றது. உலகளாவிய ரீதியில் ஆக்கபூர்வமான மாற்றங்களை ஏற்படுத்த தம்மை ஒன்றிணைந்த செயற்பாட்டின் மூலம் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையுடைய, இளமையும், துடிதுடிப்பும் மிக்க பிரஜைகளுக்காக வருடாந்தம் இவ்விருதை வழங்கி கௌரவிக்கின்றது JCI.

1981 இல் இவ் அமைப்பு TOYP - Ten Outstanding Young Persons எனும் திட்டத்தை அறிமுகம் செய்தது. இதற்கிணங்க 18 முதல் 40 வயதிற்கு இடையில் 10 இளம் மனிதர்களை இனங்கண்டு கௌரவிக்கும் திட்டத்தைத் தொடக்கி வைத்தது. இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்கள் 115 நாடுகளிலும் பரந்துள்ள JCI இன் வலையமைப்பினால் அங்கீகரிக்கப்படுவார்கள்.

பின்வரும் குறிப்பிடப்பட்ட நிரல்படுத்தலின் அடிப்படையிலேயே தெரிவுகள் தீர்மானிக்கப்படுகின்றது.

1. வியாபாரம், பொருளாதாரம், முயற்சியாண்மை அடைவுகள்
2. அரசியல், சட்டம் மற்றும் பொது நிர்வாகம்
3. கல்விசார் தலைமைத்துவம் மற்றும் அடைவுகள்
4. கலை, கலாசாரம், இலக்கியம், ஊடகவியல் பங்களிப்பு
5. தார்மீக மற்றும் சூழல்சார் தலைமைத்துவம்
6. சிறுவர்களுக்கான பங்களிப்பு, உலக சமாதானம் மற்றும் மனித உரிமைகள்
7. மனிதாபிமான மற்றும் தன்னார்வ சேவை
8. விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அபிவிருத்தி
9. சுய முன்னேற்ற அடைவுகள்
10. மருத்துவ புத்தாக்கம் அல்லது ஆய்வு

பத்து அதிசிறந்த இளம் ஆளுமைகளை தேர்ந்தெடுக்கும் இத்திட்டம் 1980 இல் இலங்கையில் ஒரு தேசியத் திட்டமாக அங்குரார்ப்பணம் செய்ததை அடுத்து, தேசிய மட்டத்தில் முன்மாதிரியான நுண்ணிய திறமைகளை வெளிப்படுத்தும் 300 பேர் இதுவரை விருது வென்றுள்ளனர். அதில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதமரின் பேச்சாளர் ரோசி சேனாநாயக்க, சூழலியலாளர் ஒட்டாரா குணவர்தன, Dr. சுனில் ஆரியரத்ன, முத்தையா முரளிதரன் ஆகியோரும் அடங்குவர். கொலை செய்யப்பட்ட பிலிப்பைன்ஸின் தலைவர் Benigno Aquino, மறைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோன் F. கென்னடி, ஐக்கிய அமெரிக்க முன்னாள் இராஜாங்க செயலாளர் Dr. Henry Kissinger என்போர் உலக மட்ட தெரிவில் விருது வென்றோர்களில் சிலராவர்.

TOYP - 2017 தேசிய விருதுக்காக ரஸ்னி ராஸிக் மேற்கொண்ட குறிப்பிடத்தக்க 1000 சேவைகளுக்கான அத்தாட்சிப் படங்கள் ஒரு கோவையாக JCI இலங்கைக் கிளைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதை விட மகள் ரஸ்னி மேற்கொண்ட சேவைகள் அதிகம் என்றும், அதில் ஒன்றாக லண்டன் பயணம் சென்று மீண்டும் இலங்கை வரும்போது தனக்கு செலவு செய்ய கொண்டு சென்ற பணத்தில் 50 பாதணிகளை அவர் சிறுவர்களுக்கு வழங்க வாங்கி வந்து தன்னை ஆச்சர்யப்படுத்திய அனுபவத்தையும், வருடா வருடம் லொரி ஒன்றின் கொள்ளளவிற்கு தனது நண்பர்களுடன் கூட்டிணைந்து பல்லின பாடசாலைகளுக்கு கற்கை உபகரணங்கள், பைகள் வழங்கும் திட்டத்தையும் மேற்கொள்வதை பகிர்ந்து கொண்டார் அவரது தந்தை அல்-ஹாஜ் I.L.M. ராஸிக்.

''எவரொருவர் ஒரு அநாதை பிள்ளையின் தலையை இரக்கமாகத் தடாவி விடுவாரோ, அவருக்கு மறுமையில் மிகப் பெரிய தரஜா (அந்தஸ்து) கிடைக்கும்'' என்று மொழிந்தது அவரது நாவு.

வரலாற்றை சற்று பின்னோக்கி நீட்டினால் ''கண்டியின் இறுதி மன்னனான ஸ்ரீ விக்ரம ராஜசிங்க மன்னனின் நம்பிக்கைக்குரிய 10 முஸ்லிம்களில் முதன்மையானவராக போற்றப்பட்டவர் ''பொல்லதே முகந்திரம்லாகே கெதர இஸ்மாயீல் லெப்ப வெதமஹத்தயா'' எனும் வைத்தியர். தியவட நிலமே நிரஞ்சன் விஜேரத்ன அவர்கள் 15 வருடங்களுக்கு முன் பத்திரிகை பேட்டியொன்றில் இவர் குறித்து விரிவாகப் பேசியிருந்தார். இவரது பேரனின் பேரனின் பேரன் தான் நான். அவரைத் தொடர்ந்து எனது மூத்த அப்பப்பாவும் பிரதிபலனை எதிர்பார்க்காது வைத்தியமே மேற்கொண்டார்.

மலேரியா நோய் இலங்கையில் பரவிய காலத்தில் ஊர் ஊராகச் சென்று குணப்படுத்தியமைக்கு இவருக்கு பிரிட்டிஷ் அரசு விருது வழங்கியது.எனது தந்தை பௌத்த விகாரைகளிலும் நாட்டு வைத்தியத்தை செய்தவர். கலுகமுவ பழைய பள்ளிவாயலுக்கும், மையவாடிக்கும் காணி கொடுத்து உதவியவர்.இன்றும் எமது குடும்பம் கம்பளை, இலாவத்துறையில் ''பொல்லதே'' என்று கௌரவமாக மதிக்கப்படுகின்றது'' என்கிறார் ARENCO ஸ்தாபனத்தின் பணிப்பாளரும், கடன் இணக்க சபையின் உறுப்பினரும், ஐ.தே. கட்சியின் உயர் மட்டக் குழு உறுப்பினரும், அகில இலங்கை சமாதான நீதவானும், பல பள்ளிவாயல்களின் வடிவமைப்பாளருமான பொறியியலாளர், ரஸ்னியின் தந்தை அல்-ஹாஜ் I.L.M. ராஸிக்.

தந்தையின் சேவை குணத்தின் அடையாளமாக கேகாலை மற்றும் ராஜகிரிய பள்ளிவாயல்களை குறித்துக் காட்டுகின்றார் மகள் ரஸ்னி.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பல அமைச்சர்களுடன் சட்டக் கல்லூரியில் படிப்பை பூர்த்தி செய்த சேவை உணர்வுள்ள சட்டத்தரணியான தனது தாய்க்கும், பொறியியலாளரான தனது தந்தைக்கும் ரமழான் மாதங்களிலும், இதர நாட்களிலும் தாய்மார், சகோதர சகோதரிகள், நண்பர்கள் உள்ளிட்ட பலர் இவர்கள் மூலம் கிடைத்த உதவிகளுக்காக துஆக்களை வாயார மேற்கொண்டதை கண்டும், கேட்டும் மனத் திருப்தியும் உவகையும் ரஸ்னிக்கு ஏற்பட்டது.

தந்தை வடிவமைத்துக் கட்டிய பள்ளிவாயல்கள், மத்ரஸாக்களின் திறப்பு விழாக்களின் சிறப்பு மலரில் புன்னகையுடன் கூடிய அவரது விபரங்கள் பார்த்தும், வாசித்தும் தன்னிலிருந்து ஆரம்பித்த ஒரு சேவைப் புரட்சியின் விளைவே ரஸ்னிக்கு இந்த விருது. இது வெறும் விதை மட்டுமே. தேசிய மட்டத்தில் வென்ற அங்கீகாரத்தை அடுத்து சர்வதேச மட்ட அங்கீகார விருதை பெரும் முயற்சியில் ரஸ்னி களமிறங்கியுள்ளார். சர்வதேச மட்ட விருது இங்கிலாந்து எலிசபத் மகாராணியின் பொற்கரங்களால் வழங்கி வைக்கப்படுகின்றமை விஷேட அம்சமாகும்.


ரஸ்னியின் இப்பயணத்தில் பெற்றோரை அடுத்து ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து முன் நகர்த்தியவர்களில் அன்புக் கணவர், இங்கிலாந்தில் சட்டத்தரணியாக இருக்கும் ரஸ்னியின் சகோதரர் எம்.ஆர்.எம். ஸயான், டாக்டராக பணிபுரியும் மைத்துனி Dr. ஸும்ரா மற்றும் குடும்ப உறவுகள், நண்பர்கள் ஆகியோர் போற்றுதலுகுரியவர்கள். இவ் விருது இவர்களுக்கும் அநாதை இல்லங்களிலும், வீதிகளிலும் வாழும் பிள்ளைகளுக்கும் உரியது என்கின்றார் கம்பளையைச் சேர்ந்த 27 வயதுடைய ரஸ்னி.

தேசிய ரீதியாக தெரிவு செய்யப்படுபவர்கள் உலக மட்டத்தில் நடைபெறும் TOYP திட்டத்திற்கு முன்மொழியப்படுவார்கள். உலக மட்ட போட்டிக்கு முன்மொழியப்பட்டு விருது வென்ற ஒரே இலங்கையர் என்ற பெருமை புகழ் பெற்ற சித்திரக் கலைஞர் திரு. சேனக சேனாநாயக்கவை சாரும். தான் இந்தப் பாதையில் எதிர்கொண்ட சிரமமாக சேவை செயற்திட்ட அனுமதி பெறலுக்காக கொழும்புக்கும், கண்டிக்கும் பயணித்த கனதியான நாட்களை நினைவு கூர்ந்த ரஸ்னி "If there is a will, there is a way." விருது பெறுவது எனக்கு நோக்கமாக இருக்கவில்லை, இப்பொழுது அதை அங்கீகாரமாகப் பெற்றிருக்கின்றேன்'' என்று நாளைய தலைவர்களான இளையோர்க்கு ஒரு உற்சாக அறிவுரையையும் உதிர்க்கிறார்.

செலவுகள் பல செய்துதான் கற்ற கல்வியால் அவுஸ்திரேலியாவில் கிடைத்த குடியுரிமையையும் உதறித்தள்ளி விட்டு, நாட்டின் மறுமலர்ச்சிக்கு சர்வதேச ரீதியான தனது அறிவுப் பெருகையைப் பயன்படுத்திய தயாள மனம் கொண்ட ரஸ்னி, இலங்கை திருநாட்டிற்கோர் அறிவுப் பொக்கிஷம்.

# இயக்க, கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றுபடக் கூடிய தளத்தின் தேவை

இப்னு மரைக்கார்



இலங்கை பல்லின மக்கள் வாழும் ஒரு நாடாகும். இந்நாட்டில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய மூன்று இனங்களையும் சேர்ந்த பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய நான்கு மதங்களைப் பின்பற்றும் மக்கள் வாழ்கின்றனர். இங்கு சிங்கள பௌத்த மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற போதிலும், தமிழ் மக்கள் முதலாவது சிறுபான்மையினராகவும் அவர்களுக்கு அடுத்த சிறுபான்மையினராக அதாவது இரண்டாவது சிறுபான்மையினராக முஸ்லிம்களும் காணப்படுகின்றனர்.

இரண்டு கோடி மக்கள் வாழ்கின்ற இந்நாட்டில் 9.7 வீதத்தினர் அதாவது 20 இலட்சம் பேர் தான் முஸ்லிம்கள். இவர்கள் நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் வாழ்கின்றனர். இருந்தும் சில பிரதேசங்களில் செறிவாகவும் பல பிரதேசங்களில் ஐதாகவும் உள்ளனர்.

இருப்பினும் பல தசாப்த காலமாக ஜனநாயக விழுமியங்களைப் பின்பற்றி வரும் இந்நாட்டில் வாழும் முஸ்லிம்கள் மத்தியில் ஒரு முக்கிய பண்பை அவதானிக்க முடிகின்றது. அது தான் சமய இயக்க அடிப்படையிலான பிரிவினைகளும், அரசியல் கட்சி ரீதியிலான பிளவுகளும் ஆகும். இவற்றைத் தவிர வேறுபல பிரிவினைகளும் இச்சமூகத்தினர் மத்தியில் காணப்படவே செய்கின்றன. என்றாலும் இவை இரண்டும்தான் ஒவ்வொரு ஊரிலும் அதிக செல்வாக்கு செலுத்தக் கூடியதாகவும், ஆழ வேரூன்றிய ஒன்றாகவும் காணப்படுகின்றது. அதேநேரம் சில பிரதேசங்களில் பிரதேசவாதமும், இன்னும் சில பிரதேசங்களில் ஊர்வாதமும், இன்னும் சில பிரதேசங்களில் சில தொழில்களை அடிப்படையாகக் கொண்ட புறக்கணிப்புக்களும் இருக்கவே செய்கின்றன. ஆயினும் சமய இயக்க மற்றும் அரசி யல் கட்சி ரீதியான பிரிவினைகள்தான் பிரதான இடத்தைப் பிடித்திருப்பது மறைக்க முடியாத உண்மையாகும்.

இன்று இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு முஸ்லிம் ஊரை எடுத்துப் பார்த்தால் அங்கு தப்லீக், தௌஹீத், ஜமாஅத்தே இஸ்லாமி, ஜமாஅத்துஸ் ஸலாமா, தரீக்கா, ஜமாத்துல் முஸ்லிமீன் ஆகிய எல்லா இயக்கங்களும் பெரும்பாலும் காணப்படுவதை அவதானிக்கலாம். ஒவ்வொரு இயக்கமும் தனித்தனி பள்ளிவாசல்களைப் பெரும்பாலும் கொண்டிருக்கின்றன. என்றாலும் அவர்கள் தனித்தனிக் குழுக்களாகத் தான் இருக்கின்றனர். செயற்படுகின்றனர். குறிப்பாக ஒரு இயக்கத்தினரின் பள்ளிவாசலுக்கு அடுத்த ... கூடச் செல்வதில்லை. குறிப்பாக தௌஹீத் இயக்கத்தினர் இப்போக்கைக் கடைபிடிக்கின்றனர்.

அத்தோடு ஒரு அமைப்பைச் சேர்ந்த ஒருவர் மற்றொரு அமைப்பை சேர்ந்தவருக்கு சில சமயம் ஸலாம் கூடக் கூறுவதில்லை. இதற்கு ஜமாஅத்துல் முஸ்லிமீன் அமைப்பினர் நல்ல உதாரணமாகும்.

இவ்வாறு இயக்க ரீதியிலான பிரிவினைகள் காணப்படுவதன் விளைவாக முஸ்லிம்களுக்குள்ளேயே சில வருடங்களுக்கு முன்னர் சிலர் படுகொலை செய்யப்பட்டுமுள்ளனர். இன்னும் சிலர் இரத்தம் சிந்தி காயப்படுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறு கறைபடிந்த வரலாறு இந்நாட்டு முஸ்லிம்கள் மத்தியில் காணப்படுகின்றது.

இவ்வாறு ஊர் மட்டத்தில் சமய இயக்க ரீதியிலான பிரிவினைகள் ஆழமாக வேரூன்றிக் காணப்படுகின்ற அதே நேரம் அரசியல் கட்சிகள் ரீதியிலான பிரிவுகளும் இதே போன்று தான் உள்ளது. இந்நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், பொது ஜன முன்னணி, தேசியக் காங்கிரஸ், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஆகிய அரசியல் கட்சிகள் பிரதான கட்சிகளாக விளங்குகின்றன.

இக்கட்சிகளுக்கு ஒவ்வொரு முஸ்லிம் ஊரிலும் அமைப்பாளர்களும், ஆதரவாளர்களும், உறுப்பினர்களும் உள்ளனர். அவர்களும் இயக்க வேறுபாட்டைப் போன்று அடுத்த கட்சியினருடன் கதைத்துக் கொள்வதுமில்லை. தொடர்புகளை வைத்துக் கொள்வதுமில்லை. இங்கும் முஸ்லிம்கள் தனித்தனிக் குழுக்களாகவே செயற்படுகின்றனர்.

இவ்வாறு ஒவ்வொரு ஊரும் இயக்க ரீதியாகவும், அரசியல் கட்சிகள் ரீதியாகவும் பிரிந்து பிளவுபட்டு காணப்படுகின்றது. இந்த பிரிவினைகளுக்குள் ஒவ்வொரு குடும்பமுமே சிக்குண்டுள்ளன. ஒரு குடும்பத்தை எடுத்துப் பார்த்தால் தந்தை ஒரு இயக்க முகாமில் இருக்க, தனயன் மற்றொரு இயக்க முகாமில் இருக்கின்றார். இதே நிலை தான் அரசியல் கட்சிகளிலும் காணப்படுகின்றது. இதன் விளைவாக ஒரே குடும்பத்திற்குள் தந்தையும் தனயனும் முட்டி மோதிக்கொள்ளும் நிலைமையும் கூட தோற்றம் பெற்றிருக்கின்றது.


(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத்

# கூட்டு இஜ்திஹாத்-03

## கூட்டு இஜ்திஹாதின் முக்கியத்துவம்



இஸ்லாம் வலியுறுத்தும் கூட்டு இஜ்திஹாதில் பல நன்மைகள், பயன்கள் இருப்பதைக் காணலாம். இவற்றை தனிநபர் இஜ்திஹாத் மூலமாக அடைய முடியாது. இதன் மூலம் கூட்டு இஜ்திஹாத் சமூக வாழ்வில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தவல்லது என்பதை நாம் தீர்மானிக்கலாம். இந்தப் பயன்களில் சிலவற்றை கீழே பார்ப்போம்.

### கூட்டு இஜ்திஹாத் ஷரீஆ சார்ந்த ஒரு கடமை

கூட்டு இஜ்திஹாத் ஷரீஆவின் பார்வையில் அதிமுக்கியத்துவம் பெறுகின்றது. குறிப்பாக தற்காலத்தில் இதன் தேவை அதிகமாகவே உள்ளது. இதற்கான காரணம் சட்டங்களை வேண்டிய நிற்கும் புதிய பிரச்சினைகள் காணப்படுவது மாத்திரமல்ல, அந்தப் பிரச்சினைகளின் வடிவங்கள், பின்னணிகள் வித்தியாசமாகவும், சிக்கலாகவும் காணப்படுகின்றமையுமாகும்.

அதே போன்று முஸ்லிம் உம்மா எதிர்நோக்குகின்ற பல்வகையான சவால்களின் கனதியும், அந்த நிலைமை சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள எதிர்மறையான தாக்கங்களும் மிகவும் அதிகமானவை. இவ்வாறான நிலைமைகளில் தனித்து நின்று சமூகத்திற்குத் தேவையான, பொருத்தமான, சட்ட ரீதியான தீர்வுகளை முன்வைப்பது என்பது எவ்வளவு கடினம் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இங்கு புத்திஜீவிகள், அறிஞர்கள் கூட்டாக இருந்து இந்தப் பிரச்சினைகளை அதன் ஆழ அகலங்களுடன் ஆய்வு செய்து சமூகம் வழிகாட்டப்பட வேண்டிய காலத்தில் நாம் வாழ்கின்றோம்.

### ஷூராவுக்கான நடைமுறை வடிவம் கூட்டு இஜ்திஹாதாகும்

இஸ்லாம் ஷூரா செய்யுமாறு வலியுறுத்திக் கூறுகின்றது. "அவர்களது விவகாரங்கள் அவர்களுக்கு மத்தியில் ஷூராவின் அடிப்படையில் காணப்படும்" (ஷூரா: 38). கூட்டு இஜ்திஹாத் என்பது ஷூரா என்ற கோட்பாட்டிற்கான நடைமுறை வடிவமாகும். கருத்துக்களைப் பரிமாறுவதற்கும், பொருத்தமான நிலைப்பாடுகளைப் பெறுவதற்கும் ஏற்றமான வழிமுறையாக கூட்டு இஜ்திஹாத் காணப்படுகின்றது. நிச்சயமாக இப்பொறிமுறையில் பரகத் இருக்கின்றது என்பது இஸ்லாம் சொல்கின்ற முக்கியமான ஒரு அம்சமாகும்.

### கூட்டு இஜ்திஹாத் சரியான, பொருத்தமான முடிவுகளைத் தரும்

கூட்டு இஜ்திஹாத் என்பது அறிஞர்கள், துறைசார்ந்தோர் என பலரை உள்ளடக்கிய ஒரு குழுவினர் குறித்த விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடும் சபையாக உள்ளது. இதனால் இங்கு கருத்துக்கள் பல கோணங்களில் அலசப்படும். வித்தியாசமான பார்வைகளில் விடயங்கள் முன்வைக்கப்படும். குறிப்பிட்ட ஒரு வட்டத்திற்குள் மாத்திரம் சுருங்காது விரிந்த அமைப்பில் விடயதானங்கள் பேசப்படும் இடமாக இது இருக்கும்.

இதன் காரணமாக கூட்டு இஜ்திஹாத் சபைகளில் முன்வைக்கப்படும் மஸ்அலாக்கள் சரியாக ஆராயப்பட்டு பொருத்தமான முடிவுகள் பெறுவதற்காக வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளது.

நவீன கால சட்டமேதை களாநிதி யூசுப் அல் கர்ளாவி இது பற்றி இவ்வாறு கூறுகின்றார். "தனிநபர் கருத்தை விட கூட்டத்தின் கருத்து சரியாக இருப்பதற்கே நெருக்கமாக இருக்கும். அந்த தனிநபரின் அறிவுத் தரம் எவ்வளவு ஆழமாக இருந்தாலும். குறிப்பிட்ட விடயத்தில் ஒருவர் அவதானிக்காத ஒரு பக்கத்தை மற்றொருவர் கண்டுகொள்வார். ஒருவர் அறியாத ஒரு விடயத்தை அடுத்தவர் அறிந்து வைத்திருப்பார். கலந்தாலோசனை மூலம் மறைவாகக் காணப்பட்ட பல விடயங்கள் வெளிச்சத்திற்கு வரும். அல்லது மயக்கமாக இருந்த பல விடயங்களுக்கு தெளிவு கிடைக்கும். மறந்து போன பல விடயங்கள் நினைவுபடுத்தப்படும். இது ஷூராவின் பரகத் ஆகும்".

### கூட்டு இஜ்திஹாத் மூலம் இஜ்திஹாத் செயற்பாடு நெறிப்படுத்தப்படுகின்றது.

இஜ்திஹாத் இஸ்லாமிய சட்ட வாக்கத்தில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அது இஸ்லாமிய ஷரீஆவின் உயிரோட்டத்திற்கு பங்களிப்பதுடன், அதன் வளர்ச்சிக்கும், நிலைத்த தன்மைக்கும் உருதுணையாக இருக்கின்றது.

ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இஜ்திஹாத் அதன் பல வடிவங்களில் சட்டவாக்கத்தில் செய்த பங்களிப்பு மகத்தானது. பிக்ஹ் மத்ஹபுகள், பல்வேறு இஸ்லாமியக் கலைகள் இக்காலப்பகுதியில் தோற்றம் இடம் பெற்றதுடன், அவை வளர்ந்தது. மட்டுமல்லாது இவை தொடர்பான நூல்கள் பல அறிஞர்களால் எழுதப்பட்டதுடன் அவை பின்னால் வந்த அறிஞர்களுக்கு பெரிதும் துணையாக இருந்ததை சட்டக் கலை வரலாற்றைப் படித்துப் பார்க்கும் போது எளிதாகப் புறிந்து கொள்ள முடியுமான ஒரு அம்சமாகும்.

எனினும் நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டு விட்டது என அறிஞர்கள் கூறினர். இதன் மூலம் இஜ்திஹாத் செயற்பாட்டை நெறிப்படுத்தவே அவர்கள் நாடினார்கள். தகுதியற்றவர்கள் இப்பொறுப்பான பணியில் ஈடுபடாமல் இருக்கும் பொருட்டு இவ்வழைப்பு காணப்பட்டாலும் இஜ்திஹாத் செயற்பாட்டில் தகுதியற்றவர்கள் ஈடுபட்டதுடன், ஷரீஆவின் இயங்கு தன்மையில் சில கோளாறுகளும் ஏற்பட்டன. மத்ஹப் வெறி பரவியதுடன், அறிஞர்களின் கருத்துக்களை அவற்றின் ஆதாரங்களுடன் பார்க்காது பின்பற்றும் தக்லீத் நிலையும் பரவியது.

உண்மையில் இப்படியான ஒரு நிலை தோன்றுவதற்கு மிக முக்கியமான காரணம் கூட்டு இஜ்திஹாத் இன்றி தனிநபர் இஜ்திஹாத் மிகைத்துக் காணப்பட்டமையே. கூட்டு இஜ்திஹாத் அதற்கான வடிவத்துடன் நடைபெற்றிருக்குமாயின் இப்படியான கோளாறுகள் இடம்பெறாமல் இருக்க வாய்ப்பிருந்தது. அதே நேரம் இஜ்திஹாத் என்ற பணி சட்டவாக்கத்திற்கான பங்களிப்பை தொடர்ச்சியாக வழங்கி குறிப்பாக பிக்ஹ் கலை வளர்ச்சி பெற்றிருக்கும். தனிநபர் இஜ்திஹாத் கூட நெறிப்படுத்தப்பட்டிருக்கும்.

### சமூக ஒற்றுமைக்கு கூட்டு இஜ்திஹாத் வழியமைக்கின்றது

சமூக ஒற்றுமையை இஸ்லாம் அதிகமாக வலியுறுத்துகின்றது. அதனை ஒரு கடமையாகப் பார்க்கின்றது. குறிப்பாக சமூகம் சார்ந்த விவகாரங்களின் போது சமூகத்தின் முன்னோடிகள், அறிஞர்கள், தலைமைகளின் சிந்தனைப்பாங்கு சமூக நலன், அதன் நீண்டகால இருப்பை மையப்படுத்தியதாக அமைவது அவசியமாகும். இவ் விடயத்தில் அவர்களுக்கு மத்தியில் கருத்தொற்றுமை இருப்பது இந்நிலைமையை ஏற்படுத்தும். இல்லாத போது முரண்பட்ட கருத்துக்கள் வலுப்பெற்று சமூகத்தில் பிளவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்நிலையில் சமூக ஒற்றுமை, அதன் ஒருமைப்பாட்டுக்கு வழியேற்படுத்தும் பொறிமுறையாக கூட்டு இஜ்திஹாத் காணப்படுகின்றது. பொது நன்மையை மையப்படுத்தி கலந்துரையாடல்கள் நடைபெறும் இடமாக கூட்டு இஜ்திஹாத் நிறுவணங்கள் மாறும் சந்தர்ப்பத்தில் சமூகத்தின் கட்டுக்கோப்பு பாதுகாக்கப்படுவதுடன், அதற்குத் தேவையான பொருத்தமான முடிவுகள், முன்மொழிவுகள் பெறப்படும் இடமாகவும் அவை செயற்படும்.

இஸ்லாமிய சட்டத்தில் ஏற்பட்ட சட்டவாக்க ஒழுங்கீனங்களுக்கான மிகப் பிரதான காரணிகளில் ஒன்றாக தனிநபர் இஜ்திஹாத் இருந்துள்ளது என்பதை வரலாறு சான்றுபகர்கின்றது என அறிஞர் அப்துல் வஹ்ஹாப் கல்லாப் கருதுகின்றார்.

### புதிய பிரச்சினைகளுக்கு கூட்டு இஜ்திஹாத் மூலம் தீர்வு பெறப்படும்

பாரியளவில் சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், அதனுடன் தோன்றிய புதிய பிரச்சினைகளை ஆராயும் போது அதற்கு ஒப்பான நிகழ்வுகளையும், அதற்கான பத்வாக்களையும் ஆரம்பகால புத்தகங்களில் கண்டுகொள்வது சிரமமான அம்சமாக உள்ளது. தற்காலத்தில் தோன்றியுள்ள வியாபார முறைகள், மருத்துவம் தொடர்பான விவகாரங்கள், காப்புறுதி அதன் பல வடிவங்கள், சகலாழ்வு பற்றிய மஸ்அலாக்கள் என சில உதாரணங்களை இங்கு குறிப்பிடலாம்.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு மிகவும் பொருத்தமான ஷரீஆ அடிப்படையிலான தீர்வை முன்வைப்பது தனிநபர்களை விட கூட்டு இஜ்திஹாத் நிறுவனங்களுக்கே முடியும் என்பது மிகப் பெரும் உண்மையாகும்.

இப்படியான நிறுவனங்கள் அப்பிரச்சினைகளை அவற்றின் முழுமையான, பரந்த பார்வையுடன் பல கோணங்களிலும் ஆய்வு செய்யும். தனிநபர்களின் கருத்துச் செல்வாக்கைத் தாண்டி பொது நலன் என்ற இடத்திலிருந்து பிரச்சினைகளை அலசி ஆராய்வதனால் காலத்திற்கும், மனித நலனிற்கும் பொருத்தமான தீர்வுகளைப் பெறுவது சாத்தியமாகும்.

# மகாஸித் தேடல்கள் (7)



ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்



# மகாஸித் என்பது உலக நலன்களுடன் மாத்திரம் சுருங்கியதா?

## - முவாபகாத் சிந்தனைகளிலிருந்து ஒரு துளி -

மகாஸித் என்பது உலக நலன்களுடன் மாத்திரம் சுருங்கியதா? என்ற கேள்விக்கான பதிலை ஒற்றை வார்த்தையில் அளித்தால், இல்லை, அது மறுமை நலன்களையும் உள்ளடக்கியது என்று அழுத்தமாகச் சொல்ல முடியும். பதில் என்னவோ தெரிந்ததுதான். ஆனால், இந்தக் கேள்விதான் இங்கு முக்கியமானது. இந்தக் கேள்விக்கான நேரடியான பதிலை விடவும் இவ்வாறு ஒரு கேள்வி ஏன் தோன்றுகிறது என்ற பின்புலத்திற்கான பதிலை வழங்குவதுதான் முக்கியமான நோக்கம்.

மகாஸித் தேடல்கள் ஐந்தாம் பத்தியில்[1] மகாஸிதுஷ் ஷரீஆ என்றால் என்ன? என்ற கேள்விக்குப் பதில் தேடும் பொழுது, மகாஸித் என்பது அல்லாஹுதஆலா ஷரீஆவை இறக்கியமைக்கான மனித நலன் சார்ந்த நோக்கங்கள் என்று குறிப்பிட்டிருந்தேன். இது கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனியின் வரைவிலக்கணத்தை மையப்படுத்திச் சொல்லப்பட்டது.

மகாஸிதை மனித நலன் சார்ந்த நோக்கங்கள் என்று சொல்லும் போது, மகாஸித் என்பது உலக வாழ்வுடன் மாத்திரம் மட்டுப்பட்ட நலன்கள், மறுமை வாழ்வுடன் அது சம்பந்தப்படவில்லை என்று புரிந்து கொள்ளும் இடம்பாடு இருக்கிறது. ஏனெனில் நலன் என்றவுடன் அது உலகம் சம்பந்தப்பட்டது என்ற புரிதல் இருக்கிறது. இது மகாஸித் கலை குறித்த எதிர்மறை நிலைப்பாடுகளுக்கு அல்லது அச்சங்களுக்கு ஒரு வகையில் காரணமாகியுள்ளது.

அந்தவகையில் மகாஷிதுஷ் ஷரீஆ என்று பேசுவோர் இஸ்லாத்தின் இலக்குகளை உலகத்துடன் சுருக்கி விடுகின்றனர். மறுமை சிந்தனையை அந்நியமாக்கி விடுகின்றனர் என்ற அச்சம் வெளிப்படுத்தப்படுகிறது.

இந்த அச்சமும் கூட ஒரு வகையில் நியாயமானதுதான். ஏனெனில், இன்று சமூக வலைத்தளங்களில் கருத்தாடுவோர் பல சமயங்களில் மகாஸித் என்பது உலகத்துடன் சம்பந்தப்பட்டது மறுமை சம்பந்தப்பட்டது அல்ல என்ற ஒரு விம்பம் ஏற்படும் வகையில் கருத்துப் பரிமாறும் நிலை இருக்கிறது. குறிப்பாக முஸ்லிமல்லாதவர்களுடனான உறவுகள் குறித்த கருத்தாடல்களின் போது இதனை நன்கு அவதானிக்கலாம். இந்த இடத்தில் அவை குறித்து விளக்கமளிப்பது எனது நோக்கமல்ல. மாற்றமாக, மகாஸித் என்ற சிந்தனையை நாம் எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும்? அதன் பிரயோகம் எந்தத் தளத்தில் அமைந்தாலும் அங்கு கடைபிடிக்கப்பட வேண்டிய வரையறை என்ன? என்பதை அடையாளப்படுத்துவதே எனது நோக்கம்.

அந்தவகையில், மகாஸித் என்பது உலக, மறுமை நலன்களை உள்ளடக்கியது என்பதை இமாம் ஷாதிபியின் சிந்தனைகளிலிருந்து சில துளிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்றிருக்கிறேன். இமாம் ஷாதிபியின் முவாபகாத் மீது, அதிலும் குறிப்பாக 'கிதாபுல் மகாஸித்' மீது ஒரு வாசிப்பை மேற்கொள்கின்ற போது, அங்கு மூன்று அடிப்படைகள் மீது நின்று அவர் இக்கருத்தை விளக்குவதை அவதானிக்கலாம்.

***முதலாவது அடிப்படை:*** ஷரீஆ இறக்கப்பட்டமையின் பிரதான மக்ஸத் என்ன என்று பேசுகின்ற பொழுது, உலக வாழ்விலும் மறுமை வாழ்விலும் ஒரு சேர மனித நலனை நிலை நாட்டுதல் என்கிறார்.[2] இந்த உண்மையை இமாம் ஷாதிபி 'இஸ்திக்ராஃ' எனும் ஷரீஆவின் பெரும்பாலான கிளை அம்சங்களை ஆராய்வதன் மூலம், அவை ஒவ்வொன்றும் உலக வாழ்விலும் மறுமை வாழ்விலும் மனித நலனை நிலை நாட்டுவதையே நோக்க [illegible] படை மூலமே அதாரப்படுத்துகிறார். இந்த உண்மை எவரும் கருத்து வேறுபாடு கொள்ளாத ஒரு விடயம் என்பதையும் அழுத்தமாக முன்வைக்கிறார்.

இந்தத் தொடரில் மனித நலனின் வகைப்பாட்டை முன்வைக்கும்போது, அதன் முதலாவது வகையாக அத்தியவசிய நலன்களைக் குறிப்பிடுகின்றார். அத்தியவசிய நலன்களை வரைவிலக்கணப்படுத்துகின்ற பொழுது "உலக மறுமை வாழ்வானது, எவற்றின் மீது எழுந்து நிற்கின்றனவோ அவைதான் அத்தியவசிய நலனாகும். அவை இழக்கப்படுகின்ற பொழுது, உலகில் நலன்கள் நிலை நாட்டப்படாது வாழ்வே இழக்கப்படும் நிலை ஏற்படும். மறுமையில் விமோசனமும் சுவர்க்கமும் இழக்கப்படும். தெளிவான நஷ்டமே அங்கு மீதமிருக்கும்" என்கிறார்.[3]

அந்தவகையில் அத்தியவசிய நலன்களாக ஐந்து அம்சங்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன. அவை, மார்க்கத்தைப் பாதுகாத்தல், உயிரைப் பாதுகாத்தல், அறிவைப் பாதுகாத்தல், மனிதப் பரம்பரையைப் பாதுகாத்தல், செல்வத்தைப் பாதுகாத்தல் என்பனவாகும். இந்த இடத்திலும் மனித நலன் என்பதை தனித்து உலக வாழ்வுடன் மாத்திரம் மட்டுப்படுத்தவில்லை. மறுமை நலன்களும் இணைக்கப்பட்டே, நலன் பற்றிய சிந்தனை முன்வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

இதனடிப்படையில், 'மனித நலன்' என்று சிந்திக்கின்ற பொழுது, உலக மறுமை நலன்கள் இணைந்ததாகவே அந்த சிந்திப்பு காணப்படல் வேண்டும். அந்த வகையில் ஒரு விடயத்தின் மகாஸிதுகள் அடையாளம் காணப்படும் பொழுது, உலக நலன்களை நிலைநாட்டக் கூடியன மாத்திரமன்றி மறுமை நலன்களை நிலைநாட்டக் கூடியனவும் மகாஸிதுகளாக அடையாளம் காணப்படல் வேண்டும். உதாரணமாக தஃவாவின் மகாஸிதுகள் எனும் கருத்தைப் பேசும் பொழுது, கலாநிதி ஜாஸிர் அவ்தா அவர்கள்[4] 'மறுமையில் அல்லாஹ்வுக்கு முன்னால் எல்லா மக்களுக்கும் இஸ்லாம் எடுத்துச் சொல்லப்பட்டது என்பதற்கு சாட்சியாக இருத்தல், அழைக்கப்படுபவனை மறுமையில் அல்லாஹ்வின் தண்டனையில் இருந்து பாதுகாத்தல், ஒரு தாஈ அல்லாஹ்வின் முன்னால் தனது கடமையை நிறைவேற்றியமைக்கான நியாயத்தைப் பெற்றுக் கொள்ளல்' போன்றவற்றைக் குறிப்பிடுகிறார். இவை ஒவ்வொன்றும் நேரடியாக மறுமையுடன் சம்பந்தப்பட்ட மகாஸிதுகள் மாத்திரமன்றி மனித நலன் சம்பந்தப்பட்டவையும் கூட.

இக்கருத்தை வலியுறுத்தும் வகையிலேயே அஹ்மத் ரைஸூனி அவர்கள் மறுமை நோக்கம் இல்லாத போது, மனிதன் வெறுமனே அழிந்து செல்வதற்காகப் படைக்கப்பட்ட ஒருவனாக மாறிவிடுவான். உண்மையில் அடிப்படையான மகாஸிதுகள் மறுமை சம்பந்தப்பட்டனவேயாகும். இதனையே அல்குர்ஆன் 'மறுமைதான் நிரந்தரமான வாழ்வு...' (அன்கபூத் - 64) என்று விளங்கப்படுத்துகிறது. சோதனை எனும் சிந்தனைதான் உலக வாழ்வையும் மறுமை வாழ்வையும் இணைக்கும் பாலமாக அமைகிறது என்கிறார்.[5]

***இரண்டாவது அடிப்படை:*** உலக நலன்கள் கலப்புத் தன்மையுள்ள நலன்கள் ஆனால் மறுமை நலன்கள் கலப்புத் தன்மையற்ற சுத்தமான நலன்கள் என்கிறார். அதாவது, உலக நலன்களைப் பொறுத்தவரையில், தனித்து நலன்களை மாத்திரம் காண முடிவதில்லை. ஒவ்வொரு நலனுடனும் தீங்கும் கலந்துதான் காணப்படுகிறது. அதுபோல் தனித்துத் தீங்கையும் காண முடிவதில்லை. அதனுடன் சில நலன்களும் கலந்துதான் காணப்படுகிறது. இதுதான் படைப்பின் இறைநாட்டம் என்கிறார். அதேவேளை ஷரீஆவின் ஒரு விடயம் அனுமதிக்கப்படுவதும், தடுக்கப்படுவதும் அந்த விடயத்தில்

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று இலங்கையில் இலவசக் கல்விக்கான இடையூறுகளும் சவால்களும்

• நயீமா சித்தீக்

இந்துமா சமுத்திரத்தின் நித்தில மாம் இலங்கை இலவசக் கல்விக்கு முன்னுதாரணமாகக் கொள்ளப்படும் நாடாகும். இலவசக் கல்வியின் தந்தை C.W.W. கன்னங்கரா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இக்கல்விமுறை நாடளாவிய முறையில் நன்கு வியாபித்துள்ளதை நாமறிவோம். பத்தாயிரத்திற்கு அதிகமான பாடசாலையில் பல இலட்சம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இதன் பெறுபேறாகவே தெற்காசிய வலயத்தின் எழுத்தறிவு மிக்கவர்களாக நாம் முன்னணியில் நிற்கின்றோம்.

ஆயினும், நடைமுறை ரீதியில் இலவசக் கல்வி இன்று பல சவால்களை எதிர்நோக்கியிருப்பதையும் நாம் உணர்வே செய்கின்றோம். இலவசக் கல்விக்கெதிரான இடையூறுகள் அல்லது சவால்க்ள் பல கோணங்களில் இருந்து வருபவை.

இன்று அரச பாடசாலைகளில் ஆண்டு ஒன்றிற்கான அனுமதி மிகவும் சிரமமாக உள்ளதை பெற்றோர்கள் அறிவார்கள். ''பக்கத்தில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை'' என்ற கோட்பாடு நல்லதே. ஆனால் பாடசாலைக்குப் பக்கத்தில்உள்ளவர்களுக்கெல்லாம் அனுமதி கிடைத்து விடுகிறதா என்றால் அதுதான் இல்லை. இப்படிக் கிடைக்காதவர்கள் உயர் நீதிமன்றம் வரை செல்வதையும் அறிவோம்.

- பெற்றோரின் வாக்காளர் இடாப்புப் பதிவு
- வீடு, மின், நீக்கட்டண பற்றுச் சீட்டுக்கள்
- கிராம சேவகர் அத்தாட்சி என்று பட்டியல் நீள்கின்றது.

தற்காலத்தில் தொழில் காரணங்களுக்காக அல்லது திருமணத்தின் பின் இடம் மாற வேண்டியிருப்பதால் இருப்பிடங்களை மாற்ற வேண்டியுள்ளது. அதிகமானோர் வாடகை வீடுகளில் அடிக்கடி மாற வேண்டியவர்களாக உள்ளனர். இவர்கள் பாடசாலை அனுமதியின்போது அடையும் இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல.

சிலர் கூட்டுக் குடும்பமாக வாழ்வர்.



அவர்களின் வீட்டுரிமை தாய் தந்தையருக்கே இருக்கும். பிள்ளைகளுக்குப் பிரித்து எழுதியிருக்க மாட்டார்கள். இதனால் மின் கட்டணம், நீர்க் கட்டணம் போன்றன அவர்களின் பெயருக்கே இருக்கும். பேரப் பிள்ளைகளின் பாடசாலை அனுமதிக்காக அவர்களது உரிமையை உடனடியாக விட்டுக் கொடுக்கவும் அவர்கள் தயாராக இருக்க மாட்டார்கள். இப்படி விட்டுக் கொடுத்த பலர் வயோதிபக் காலத்தில் சீரழியும் கதைகளும் உண்டு.

உரிய பாடசாலையின் பெற்றோர் படித்திருந்தால் அல்லது அனுமதி கோரும் பிள்ளையின் வேறு சகோதர சகோதரிகள் படித்துக் கொண்டிருந்தால் கிடைக்கும் புள்ளிகள் மாத்திரம் முதலாந் தர அனுமதிக்குப் போதுமானதாக இருப்பதில்லை. பிள்ளையின் இருப்பிடத்திற்கும் பாடசாலைக்கும் இடையிலான தூரம் சவாலாகி விடுகின்றது. சிலரின் இருப்பிடங்களுக்கு அண்மையில் பாடசாலைகளே இல்லாமலிருக்கும்போது, அனுமதி சிரமமாகிவிடுகின்றது.

பாடசாலை அனுமதியின்போது பச்சைக் குழந்தைகளுக்கு நேர்முகப் பரீட்சை வேறு

'கதை சொல்லுங்கள்'

'பாட்டுப் படிங்க'

'உங்கட எதிர்கால இலட்சியம் என்ன?'

என்பனவாய் கேள்விக் கனைகள். இதையெல்லாம் சமாளிக்கக் கட்டாயம் முன்பள்ளிக்குப் பிள்ளைகளை அனுப்ப வேண்டிய நிலை உள்ளது. முன்பளிளிச் செலவினங்கள் கொஞ்சநஞ்சமல்ல. சாதாரண கிராமப் புறங்களில் இயங்கும் முன்பள்ளிக்கே செலவு அதிகமாக இருப்பதோடு, நகர்ப்புற முன்பள்ளிச் செலவுகளைக் கேட்கவும் தேவையில்லை. இச்செலவை சமாளிக்கப் பெற்றோர் பெரும் பாடுபடுகின்றனர். தற்காலத்தில் முன்பள்ளி நடாத்துவதும் இலாபகரமான ஒரு தொழிலாகவும் ஆகிவிட்டது என்பதே யதார்த்தம்.

முதலாந் தரத்திற்கான அனுமதி மறுக்கப்பட்ட நேரங்களில் அதிகமானவர்கள் நாடுவது சர்வதேசப் பாடசாலைகளைத்தான். உண்மையில் அச்சந்தர்ப்பங்களில் கைகொடுப்பது அப்பாடசாலைகளே. ஆனால், பலருக்கு அது புலிவாலைப் பிடித்த கதைதான். செலவுகளை சமாளிக்க முடியாது இறுதியில் பிள்ளையின் கல்வி இடைநிறுத்தப்படுகிறது. அரச பாடசாலைகளிலும் சேர்க்க முடியாது, காரணம் மொழி மூலம் ஆங்கிலமாக இருப்பது. தேடிப் பார்த்து ஒரு புள்ளி விபரத்தைத் திரட்டினால் வியக்கத்தக்க உண்மை வெளிவரும்.

இன்று இலவசக் கல்விக்குள்ள அடுத்த இடையூறு 'டியூஷன்'. முன்பள்ளி தொடங்கி, படித்து முடியும்வரை டியூஷன்... டியூஷன்... டியூஷன்தான். ஒவ்வொரு பாடங்களுக்கும் டியூஷன் என்பது மாத்திரமல்ல, ஒரே பாடத்துக்கும் பலரிடம் டியூஷன் போகிறார்கள். இலவசக் கல்வி என்ற பெயரில் தமது பிள்ளைகளுக்காகப் பெற்றோர் தமது உழைப்பில் பெரும் பகுதியைச் செலவிட வேண்டியவர்களாக உள்ளனர்.

டியூஷனுக்குப் போனால் அங்கு பிள்ளைகள் அதிகம், சந்தேகங்களைக் கேட்க முடியாது, போய்வர நேரம் வீணாகிறது என்ற காரணங்களின் அடிப்படையில் ஆசிரியர்களை வீட்டிற்கே அழைத்து டியூஷன் செய்பவர்களும் உளர். அதிகமாக இப்படி வீடுகளுக்குப் போய் வகுப்பு எடுப்பவர்கள் ஒரு மணித்தியாலத்திற்கு இவ்வளவு என்ற முறையிலேயே எடுக்கின்றனர். கல்வியைத் தேடி மாணவர்கள் போகும்முறை மாறி, மாணவர்களின் வீடு தேடி ஆசிரியர்கள் வரும் நிலைக்கு இலவசக் கல்வி மாறிவிட்டது.

சாதாரண தரத்தில் மிகத் திறமையாக சித்தியடைந்திருந்தும், உயர் தரத்தின் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கற்க ஆசையிருந்தும் அதனை விடுத்து கலைத் துறை அல்லது வர்த்தகத் துறையைப் பலர் தெரிவு செய்வதற்கான காரணம் டியூஷன் செலவைச் சமாளிக்க முடியாமைதான். இந்த 'டியூஷன்' என்பது இலவசக் கல்விக்குரிய மிகப் பெரிய சவாலாகும். இலவசக் கல்வி என்ற கோட்பாட்டையே இல்லாமலாக்கும் சக்தியாக இந்த டியூஷன் இருக்கின்றது என்றும் கூறலாம்.


''டியூஷன் போகாவிட்டால் பரீட்சையில் சித்தியடைவதே கஷ்டம்'' என்ற எண்ணம் பெற்றார், மாணவர் மனங்களில் மிகவும் ஆழமாகப் பதிந்து விட்டது. இதன் அடிப்படையிலேயே டியூஷன் கலாசாரம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்கின்றது. மறுபுறமாக இலவசக் கல்வியால் அடைய வேண்டிய இலங்கையும் இது இல்லாமலாக்குகின்றது.

உயர் தரத்தில் கற்பதற்காக ஒரு சிறந்த பாடசாலையில் அனுமதி பெறுவதும் பெரிய சவாலாகவே இருக்கின்றது. எத்தனை சட்டங்கள் அமுலாக்கப்பட்டாலும் அனுமதிக்காகப் பெருந்தொகைப் பணம் செலுத்த வேண்டியிருப்பதே நடைமுறை உண்மை. இதனாலும் இலவசகக் கல்வி என்ற புனிதமான கோட்பாடு மாசடையவே செய்கின்றது.

இந்த இடையூறுகள் நீக்கினால்தான் உண்மையான இலவசக் கல்வியின் பயன்பாடுகளை அனுவிக்க முடியும்.

# மகிழ்ச்சியை தக்க வைக்க

இல்லையே என்றும்
இழந்தோமே என்றும்
எண்ணி எண்ணியே
ஏங்கி வாழ்ந்து
உன்னையே நீ இழந்து
ஆளில்லை என்று ஆகாமல்
இருப்பதை ஏற்று
உளமகிழ்வுடன் வாழ்வதே
உண்மையான வாழ்வு






மனநலத்தின் பிரதான குறிகாட்டி மனிதன் அனுபவிக்கும் மகிழ்ச்சியே என்பதை முன்னைய பத்திகளிலும் நோக்கினோம். மகிழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் சில காரணிகள் கடந்த பத்தியில் முன்வைக்கப்பட்டன. அதன் தொடராக மகிழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் அல்லது ஏற்படுத்தும் வேறு சில காரணிகளை இங்கு தருகிறோம்.

### 10. சுய திருப்தி

தனக்கு திருப்தி ஏற்படும் வரை எழுதுகின்றவன் சிறந்த எழுத்தாளன் ஆகிறான். தன் மனம் நிறைவு பெறும்வரை படம் வரைபவன் ஓவியனாகிறான். தானே ஒரு இசையைக் கேட்டு மெய்மறக்கும் வரை மனமொன்றிப் பாடுகின்றவன் இசைஞானி ஆகிறான். கலைஞனுக்கு தூண்டுகோலாக இருப்பது சுயதிருப்தியே. ஒவ்வொருவருக்கும் அவரது செயற்பாடுகளில் காணும், அனுபவிக்கும் சுயதிருப்தியே மகிழ்ச்சியின் ஊற்றுக் கண்ணாகும்.

### 11. நம்பிக்கை

சாதனையாளனுக்கும் சாதாரண சராசரி மனிதனுக்கும் தேவை தன்னம்பிக்கை. அவநம்பிக்கை, மனிதனை கவலையில் தோய்த்து விடும். தன்னால் இந்தக் காரியத்தையெல்லாம் சாதிக்க முடியுமா என்ற அவநம்பிக்கை ஒருவனுக்கு நேர்ந்தால் அவனால் எதனையும் பூரணப்படுத்த முடியாது. நிறைவேற்றுதலோ சாதித்தலோ அவனுக்குச் சாத்தியமாகாது. தன் ஆற்றல் மீது முழு நம்பிக்கை வேண்டும். தன்னம்பிக்கையே வெற்றியின் அடித்தளம். சாதனையின் ஆதார சுருதி. சாதனை மகிழ்ச்சியின் உறைவிடம்.

### 12. அடுத்தவர்களை அங்கீகரித்தல்

நாம் நம் மீது எல்லை மீறிய, அளவு கடந்த மதிப்பீட்டுடன் வாழ்வதும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்குத் தடையாகி விடும். நாமே உலகில் பெரும் கெட்டிக்காரன் என நினைத்துக் கொண்டு அடுத்தவர்களை ஏமாற்ற முடியாது. அவ்வாறு முயன்றால் வசமாக மாட்டிக் கொள்ளும் ஒரு தருணம் ஏற்படும். அது அவமானத்தை மட்டுமன்றி, அமைதியையும் இழக்கச் செய்யும். எனவே, நம்மை விட கெட்டித்தனமானவனும் உலகத்தில் உள்ளான் என்ற உணர்வோடு வாழப் பழக வேண்டும். நம்மை விட்டால் ஆளில்லை என்ற அகம்பாவம் நமக்கு துயரத்தையே தேடித்தரும்.

### 13. சுய உழைப்பு

உழைத்து வாழும் போதே ஒரு மனிதனுக்கு உண்மையான சந்தோசம் கிடைக்கின்றது. உழைப்பைப் போல் உயர்ந்த நண்பன் எவருமில்லை. புன்முறுவல், துணிவு, நம்பிக்கை, நாணயம், ஒற்றுமை போன்றவற்றைக் கொண்டு சிறப்பாக உழைப்பவர்களாலேயே உலகம் உய்க்கின்றது. எல்லாம் என் தலையெழுத்து என்று ஒப்பாரி வைத்துக் கொண்டு மூலையில் முடங்குபவன் தனது சந்தோசத்தை மட்டுமன்றி, அடுத்தவர்களின் சந்தோசத்தையும் கெடுக்கின்றான். இத்தகையோர் வாழ்நாள் முழுவதும் அதே இடத்தில் அப்படியே இருக்கின்றனர். முன்னேற்றம் என்பது அவர்கள் வாழ்வில் ஓர் அடியேனும் நிகழ்வதில்லை. அதனால் மகிழ்ச்சி ஓர் அங்குல மேனும் உயர்வதில்லை.

### 14. போதுமான தூக்கம்

போதுமான தூக்கம் மகிழ்ச்சியான வாழ்வின் முக்கிய குறிகாட்டியாகும். சரியாகத் தூங்கா விட்டால் உடலில் நோயெதிர்ப்புக் குறையும். மறுநாள் காரியாலயத்தில் பணியாற்றுதல் கடினமாகும். கோபம், எரிச்சல், சோர்வு நம்மை ஆட்கொள்ளும். இவை சக மனிதர்களுடனான உறவுகளில் கூட நேரெதிராய்த் தாக்கும். எனவே, உடல் ஆரோக்கியத்திற்கும் உள ஆரோக்கியத்திற்கும் போதுமானளவு தூக்கம் முக்கியமானது.

### 15. செய்யும் வேலையை ரசித்துச் செய்தல்

நாம் செய்யும் எந்த வேலையையும் திருப்தியோடும் கடமை என்ற உணர்வோடும் ரசித்துச் செய்யும்போது ஒரு மகிழ்ச்சியான மனோநிலை கைகூடுகின்றது. சந்தோசமற்ற செயல், வேலை மீது ஒரு மனப்பாரத்தை ஏற்படுத்தி விடும். ஈடுபாட்டுடன் வேலை செய்யும் போது மனது எளிதாகின்றது. வீட்டுத் தோட்டத்தில் பூச்செடிகளுக்கு தண்ணீர் தெளித்தல், படுக்கை அறையை நன்கு ஒழுங்குபடுத்தல், சுற்றுச் சூழலை தூய்மையாக வைத்திருத்தல், பூச்செடிகளின் இடத்தை அடிக்கடி மாற்றுதல், அலுவலகத்தில் காற்றோட்டமுள்ள ஓர் இடத்தில் அமர்தல், தேவையானளவு வெளிச்சத்தை உறுதி செய்தல் என்பன ஒரு இதமிப்பை உருவாக்குகின்றது.

### 16. எதிர்மறையான எண்ணங்களைத் தவிர்த்தல்

எதிர்மறையான எண்ணங்கள் தலைதூக்கி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அது கவலை உணர்வில் நம்மை மூழ்கடித்து விடும். எதிர்மறை எண்ணங்கள் ஜலதோசம் பிடிக்கக் காரணமாவதை ஆய்வுகள் நிறுவியுள்ளன. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு குழந்தைத் தனம் குடிகொண்டுள்ளது. நமக்குள் இருக்கும் அக்குழந்தைத் தனத்தை அவ்வப்போது வெளிப்படுத்த வேண்டும்.

ஓடும் நதியில் குளித்துப் பார்த்தல், பிடித்த பாடலை அனுபவித்துப் பாடல், கூட்டம் மிகுந்த பேரூந்தில் ஜன்னலோரம் உட்காரல், தூங்கச் செல்லும் முன்னர் குடும்பத்தோடு இருந்து கொஞ்ச நேரம் கூடிக் கு[illegible] நம்மை நாமே பாராட்டிக் கொள்ளல், இருக்கும் இடத்தை ஒழுங்காகவும் தூய்மையாகவும் வைத்துக் கொள்வது, நமக்கு மகிழ்ச்சியானதை அணிவது, புத்தகங்களை வாசிப்பது, தொலைக்காட்சியில் பயனுள்ளவற்றைப் பார்ப்பது என்று சின்னச் சின்ன மகிழ்ச்சி குடியிருக்கும் இடங்கள் பல. அவற்றை அனுபவிக்கத் தெரிந்த மனிதர்களாக நாம் மாற வேண்டும்.

எதிர்மறையாகப் பேசும் மனிதர்களுடனான உறவை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். சில நண்பர்கள் உன்னால் அதெல்லாம் முடியாது, இப்போது எல்லாம் பெரிய பிரச்சினையாகி விட்டது என்றவாறு பேசி நம்மை உற்சாகமிழக்கச் செய்துவிடுவர். இத்தகையோர் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

புறம் பேசுபவர், கோள் சொல்பவர், பொறாமைப்படுபவர் போன்ற எதிர்மறைச் சிந்தனையாளர்களுடன் சகவாசம் வைப்பதை முற்றாகவே குறைத்துக் கொள்ள வேண்டும். நமக்கு நம்பிக்கையூட்டி, உற்சாகமளித்து, பாராட்டுக் கூறும் மனிதர்களை பக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பொன் விளக்கு என்றாலும் தூண்டப்பட வேண்டும் என்பார்கள். சாதனை அடைந்து மகிழ்ச்சி பெருக வேண்டுமாயின், தூண்டுகின்ற மனிதர்களையே நாம் அருகில் அமர்த்திக் கொள்ள வேண்டும்.

இறங்கச் சொல்பவர்களையும் தள்ளி விடுபவர்களையும் தட்டிக் கழிப்பவர்களையும் எட்டி உதைப்பவர்களையும் பக்கத்தில் கொள்வது நமது மகிழ்ச்சியை மட்டுமன்றி, நம்மைச் சூழ்ந்திருக்கின்ற அத்தனை மனிதர்களின் மகிழ்ச்சியையும் கெடுத்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெரூசலத்தை... (01 ஆம் பக்கத் தொடர்)

இதன்படி 120 நெஸ்ஸெட் அங்கத்தவர்களில் 80 அங்கத்தவர்களுடைய விருப்பு வாக்குகளைப் பெற்றே இது தொடர்பான எந்தச் சட்டங்களும் நிறைவேற்றப்பட வேண்டும். இஸ்ரேலின் ஆளும் வலதுசாரி கூட்டணியினால் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்ட மூலத்துக்கு ஆதரவாக 64 பேர் வாக்களித்துள்ளனர். 51 பேர் எதிராக வாக்களித்துள்ளனர்.

இந்த வாக்கெடுப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட எதிர்த்தரப்பு ஸியோனிஸ்ட் யூனியனின் பாராளுமன்ற உறுப்பினர் நஹ்மான் ஷா, ஜெரூசலத்துக்கான புதிய சட்டமேதும் இப்போது தேவையில்லை, ஜெரூஸலம் எரிந்தால் எல்லாமே எரிந்து விடும் என்று தெரிவித்தார்.

தற்போதைய ஜெரூசலம் நகராட்சி எல்லைக்குள் இருக்கும் இரு பலஸ்தீன சுற்றுப்பகுதிகளை அகற்றுவதற்கும் இந்த சட்டமூலம் இடமளிக்கிறது. இதனால் இஸ்ரேலின் தடைச் சுவருக்கு மறுபக்கம் உள்ள அகபாத் ஜபர், ஷுவாபத் அகதி முகாம் ஆகிய இரு பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஜெரூசலத்தில் உள்ள பெரும்பாலான பலஸ்தீனர்களுக்கு நிரந்தர வதிவிட அந்தஸ்து இருக்கின்றபோதும் அவர்களிடம் இஸ்ரேலிய பிரஜா உரிமை இல்லை. இந்த நிரந்தர வதிவிட உரிமையும் பல்வேறு காரணங்களைக் காட்டி எந்த நேரத்திலும் நீக்கப்படவும், அவர்கள் ஜெரூஸலத்தை விட்டு வெளியேற்றப்படவும் முடியும். 1967 ஜெரூசலம் ஆக்கிரமிப்பிலிருந்து இதுவரை சுமார் 15,000 குடியிருப்பாளர்களின் வதிவிட அனுமதியை இஸ்ரேல் இவ்வாறு ரத்துச் செய்திருப்பதாக மனித உரிமை கண்காணிப்புக் குழு கணித்துள்ளது.

2017 டிசம்பர் 31 இலிருந்து யுனெஸ்கோவில் இருந்தும் விலகிக் கொள்வதாக இஸ்ரேல் அறிவித்திருந்தது. இதற்கு முன்னர் அமெரிக்காவும் யுனெஸ்கோவிலிருந்து விலகியது.

## ஸீராவின்... (07 ஆம் பக்கத் தொடர்)

ஒன்று கூடியதை நினைவுகூர்ந்து, அது போன்ற ஒரு சமூக செயற்பாட்டிற்காக இன்று அழைக்கப்பட்டாலும் நான் நிச்சயமாக பதில் அளிப்பேன் எனக் கூறினார்கள். இவை உலக விவகாரங்களில் நபிகளார் (ஸல்) அவர்கள் தேச மற்றும் மக்கள் நலன்கள் கருதி பற்றோடும் விசுவாசத்தோடும் அடுத்த தரப் பினரோடு சேர்ந்து செயற்பட்டுள்ளார்கள், ஒத்துழைத்துள்ளார்கள் என்பதையே காட்டுகின்றன.

எனவே நாம் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பது என்பது ஒரு மார்க்கக் கடமையை நிறைவேற்றப் போகின்றோம் என்பதுதான் அர்த்தம். அது ஒரு வணக்க வழிபாடு. அதற்கான வழிகாட்டல் ஸீராவில் தெளிவாக உள்ளது என்பதைப் புரிந்து கொண்டோம்.

எனவே தாய் நாட்டின் குற்றச் செயல்களை ஒழித்து நீதி, நேர்மை, இனங்களுக்கு இடையிலான சௌஜன்யம், சமாதானம், பொருளாதார சுபீட்சம் போன்றவற்றை உருவாக்குவதற்கு அதிக பட்சம் உழைப்பார் என்று கருதும் வேட்பாளருக்கு மட்டுமே நாம் வாக்களிக்க வேண்டும். அந்த வாக்கு நாட்டின் பெருந் தீமையொன்றை ஒழிப்பதற்காக நீங்கள் செய்யும் உதவியாகும். தூய எண்ணத்துடன் அது நடந்தால் கூலி நிச்சயம். அல்லாஹ் விளைவுகளை பார்த்து கூலி வழங்குவதில்லை. எண்ணத்திற்கே வெகுமதி தருகின்றான்.

அவ்வாறே வாக்குரிமை ஒரு சாட்சியம். பொய் சாட்சி சொல்வது பெரும் பாவம். எனவே எமது சாட்சியம் நேர்மையானதாக இருக்க வேண்டும். பொருத்தமானவர் ஒருவர் இருக்க தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தி பொருத்தமற்றவருக்கு வாக்களிப்பது மாபெரும் தவறும் பாவமுமாகும். தேர்தலில் வாக்குரிமையை பயன்படுத்துவது ஒரு வணக்கம் என்ற உணர்வோடு எமது பங்களிப்பை நாட்டு நலனுக்காக வழங்கி ஒத்துழைப்போம். விழுமிய அரசியலுக்கு வாழ்வு கொடுப்போம்.

## இயக்க, கட்சி... (11 ஆம் பக்கத் தொடர்)

அதிலும் அரசியல் கட்சிகள் ரீதியாகப் பிரிந்திருப்பவர்கள் அடுத்தவர் மீது அபாண்டம் சுமத்துவதிலும், புறம் பேசுவதிலும், அடுத்தவரின் குறைகளைத் துருவித் துருவி ஆராய்வதிலும், அடுத்துவரின் கண்ணியத்தைப் போக்குவதிலும் சர்வ சாரதாரணமாக ஈடுபடுகின்றனர். இதற்கு தற்போதைய தேர்தல் காலம் நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இவர்களது செயற்பாடுகளுக்கு சமூக வலைத்தளங்களும் பக்க துணையாக அமைந்திருக்கின்றன.

இவ்வாறு இந்நாட்டு முஸ்லிம்கள் ஒவ்வொரு ஊரிலும் இயக்க ரீதியிலும், அரசியல் கட்சிகள் ரீதியிலும் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து குழுக்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் அல் குர்ஆனின் கட்டளை, இஸ்லாத்தின் இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வழிகாட்டல்களின்படி முஸ்லிம்கள் பிரிந்திருக்க முடியாது.

அப்படி என்றால் இந்நாட்டு முஸ்லிம்கள் இயக்க ரீதியிலும், அரசியல் கட்சிகள் ரீதியிலும் பிரிந்து செயற்படுவது அல்குர்ஆனின் கட்டளைகளையும், முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களையும் உதாசீனம் செய்வதாகவே அமையும். அது ஈடுசெய்ய முடியாத நஷ்டத்தையுமே தேடித் தரும். இதனை ஒவ்வொருவரும் கருத்தில் கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

அதேநேரம் முஸ்லிம்களாகிய நாம் இந்நாட்டில் சிறுபான்மையினர் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அத்தோடு முஸ்லிம்களாகிய நாம் பண்பாட்டின் மூலமும், செயற்பாடுகள் ஊடாகவும் அடுத்தவர்களுக்கு முன்மாதிரியாக வாழவும், செயற்படவும் வேண்டிய பொறுப்பைக் கொண்டவர்களாவர். இதனை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மறந்து விட முடியாது.

அதனால் ஒவ்வொரு ஊரிலும் ஒரு நிலத்தில் வாழும் முஸ்லிம்கள் இயக்க, அரசியல் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றுபடக் கூடிய மையத்தை, புள்ளியை நோக்கி நகர்வது குறித்து சிந்திப்பதும், அதற்காக செயற்படுவதும் உடனடித் தேவையாக உள்ளது. அது இன்றைய காலகட்டத்தில் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய விடயமாகும். தவறும் பட்சத்தில் எதிர்காலத்தில் முஸ்லிம்கள் எத்தனை இலட்சமாக இருந்தாலும் கூட அவர்கள் செல்லாக் காசாகவே இருப்பர். அந்நிலைமை பலவிதப் பாதிப்புக்களுக்கும், தாக்கங்களுக்கும் வழிவகுக்கும். அதனைத் தவிர்க்க முடியாது.

## பலஸ்தீனும்... (03 ஆம் பக்கத் தொடர்)

அறைகூவல் விடுத்த வேளையில், கொழும்பிலிருந்த எத்தனை ஜும்ஆப் பள்ளிவாசல்களில் அன்றைய தினம் இது தொடர்பாகப் பேசப்பட்டது என்பது கேள்விக்குறியாக உள்ளது.

அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சு, பலஸ்தீன் இலங்கை பாராளுமன்ற நட்புறவுச் சங்கம், உலக நீதிக்கான இலங்கைப் பத்திரிகையாளர்கள் என முஸ்லிமல்லாதவர்களைப் பிரதி நிதித்துவப் படுத்தும் பல அமைப்புக்கள், பலஸ்தீனுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக கண்டன அறிக்கைகளை வெளியிட்ட பொழுது, இலங்கை முஸ்லிம்களின் தலைமையாகக் கருதப்படுகின்ற அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா இது தொடர்பில் முஸ்லிம்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலேனும் எதுவுமே செய்யாமல் இருந்தமை முஸ்லிம்களின் விவகாரத்தில் அதற்குள்ள அக்கறையை எடுத்துக் காட்டுகிறது. ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத் ஆர்ப்பாட்டம் நடத்தினாலும் தனித்தே ஆர்ப்பாட்டம் நடத்தியதால் அது அவர்களுடைய தனிப்பட்ட விளம்பரமாகவே சமூக மட்டத்தில் பார்க்கப்பட்டது.



இன்னும் சிலரைப் பொறுத்தவரையில் பலஸ்தீனின் விடுதலைக்காகப் போராடுகின்ற இயக்கங்களின் பின்னணி அவர்களுக்குத் தேவைப்படுகிறது. பதாஹ் அமைப்பின் பின்னணி எப்படிப் போனாலும் ஹமாஸ் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பற்கான தெளிவு, பலஸ்தீன் போராட்டத்துக்கு ஆதரவளிப்பதற்கான முக்கியமான பிரச்சினையாக சிலருக்குப்படுகிறது. இன்னும் சிலருக்கு தங்களுக்கு நிதியுதவி வழங்கும் நாடு எந்த நிலைப்பாட்டை எடுக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் வரை கால அவகாசம் தேவைப்படுகிறது. மற்றும் சிலருக்கு இது துன்யாவுடைய பிரச்சினை. இதிலே தலையிட்டு ஆகிரத்துடைய வாழ்க்கையை பாழாக்கிக் கொள்ளத் தேவையில்லை என்று வாசித்துக் காட்டப்படுகிறது. இன்னும் ஒரு சாரார், இஸ்லாத்திலே போராட்டம் என்று ஒன்றுமே இல்லை, ரஸூலுல்லாஹ் எதிர்வு கூறியபடியே எல்லாம் நடக்கும், நாங்கள் எங்களுடைய திக்ர், அவ்ராதுகளை அதற்குரிய ஸில்ஸிலாவைப் பேணி செய்து வந்தால் போதும் என்ற கருத்தில் இருக்கிறார்கள். எஞ்சியிருப்பவர்கள் இதிலே தலையிட்டு பெரும்பான்மைச் சமூகத்தின் எரிச்சலைச் சம்பாதித்துக் கொள்ளத் தேவையில்லை என்று ஒதுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

முதல் கிப்லா பற்றிய முஸ்லிம்களின் இந்த நிலைப்பாடுகளையெல்லாம் தாண்டி, இலங்கையிலுள்ள முஸ்லிமல்லாதவர்கள் இஸ்லாம் சொல்லுகின்ற நீதியையும் நியாயத்தையும் பாதுகாக்கவென கொள்கை, கட்சி வேறுபாடுகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளி ஒன்றுபட்டிருக்கிறார்கள். இனி இலங்கை முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டுக் குரல் கொடுக்காவிட்டால் அவர்களே எங்களை முஸ்லிம் சமூகத்திலிருந்து அந்நியமாக்கிப் பார்க்கின்ற நிலை இந்த நாட்டிலே வரக் கூடும்.

அந்த வெட்கக் கேடான நிலைமை வருவதற்கு முன்னர், உலக ஒற்றுமைக்கான காரணகர்த்தாவாக இருக்கின்ற பலஸ்தீன் விவகாரத்தில் ஒரு நிலைப்பாட்டுக்கு வருவதில் இருந்து இலங்கை முஸ்லிம்களின் ஒற்றுமைக்கான தொடக்கப் புள்ளிக்கு பிஸ்மில் சொல்ல முடியும்.

## ஜெரூசலம்... (09 ஆம் பக்கத் தொடர்)

முஸ்லிம் ஸ்பெய்ன் வீழ்ச்சியடைந்த பின்னர் முஸ்லிம்களின் அன்பையும் ஆதரவையும் பெற வட ஆபிரிக்காவை நோக்கிச் சென்றனர்.''

வரலாறு இப்படியிருக்க, மண்ணின் மைந்தர்களை அகதிகளாக்கி, வந்தேறு குடிகளை வரலாற்று உரிமையாளர்களாகப் பிரகடனம் செய்யும் ட்ரம்பின் பிரகடனத்தின் மீது வரலாறு காறி உமிழ்கின்றது. யூதர்கள் ஜெரூசலம் மீது உரிமை கோர எந்த அருகதையும் இல்லாதவர்கள் என்பதை வரலாறு மூன்றாவது முறையும் அவர்களுக்கு நிச்சயம் கற்றுக் கொடுக்கும்.

## மகாஸித்... (12 ஆம் பக்கத் தொடர்)

உள்ள நலன் தீங்கைப் பொறுத்தே அமையும். அந்த வகையில் ஒரு விடயத்தின் நலன் மிகையாகக் காணப்படுகின்ற பொழுது அது அனுமதிக்கப்படுகிறது. தீங்கு மிகையாகக் காணப்படுகின்ற பொழுது அது தடுக்கப்படுகிறது.[6]

அல்குர்ஆன் மதுவையும் சூதையும் தடை செய்தமையில் இந்த உண்மையைத் தெளிவாகக் காணலாம். ''உங்களிடம் மதுவையும் சூதையும் பற்றிக் கேட்கின்றனர். அவற்றில் பெரிய தீங்கும் மக்களுக்குப் பயன்களும் இருக்கின்றன. அவற்றில் நலனை விடவும் தீங்கு மிகப் பெரியது என்று சொல்லுங்கள்'' (பகரா - 219) என்று அல்குர்ஆன் கூறியது. இங்கு தீங்கில் நலனும் கலந்திருப்பது அடையாளப்படுத்தப்படுவது போல் ஷரீஅத் தீர்ப்பு வழங்கப்படுவது அவற்றில் மிகையான பண்பு எது என்பதை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

இமாம் ஷாதிபி அவர்கள் உலக நலன்களும் தீங்குகளும் கலப்பு நிலையில் அமைக்கப்பட்டுள்ளமையின் நோக்கம் மனித வாழ்வின் சோதனைக்காக என்கிறார். இந்நிலையில்தான் உலகில் மனித வாழ்வு ஒரு சோதனை, ஒரு பரீட்சை என்பதன் பொருளை மிகச் சரியாக நிறைவேற்ற முடியும். நபியவர்கள் ''சுவர்க்கம் வெறுப்புக்குரிய விடயங்களாலும் நரகம் விருப்புக்குரிய விடயங்களாலும் சூழப்பட்டிருக்கிறது'' (முஸ்லிம்) என்று கூறியமையும் இதனையே உணர்த்துகிறது.

மேற்சொன்ன சிந்தனைக்கு மறுதலையாக, மறுமை நலன்களும் சரி, தீங்குகளும் சரி கலப்பு நிலையிலன்றி தனித்து, முழுமையான நலனாகவும்

முழுமையான தீங்காகவுமே காணப்படுகின்றன. அல்குர்ஆனும் சுன்னாவும் இந்த உண்மையை மிகவும் தெளிவாக வலியுறுத்துவதாக இமாம் ஷாதிபி குறிப்பிடுகிறார். உதாரணமாக சுவர்க்கம் பற்றிக் குறிப்பிடும் பொழுது ''அதிலே அவர்கள் எந்தக் களைப்பையும் உணர மாட்டார்கள். அதிலிருந்து ஒருபோதும் வெளியேறவும் மாட்டார்கள்'' (ஹிஜ்ர் - 45, 46). நரகம் பற்றிக் குறிப்பிடும் பொழுது ''அவர்களுக்கு அதில் எதுவும் இலேசாக்கப்படமாட்டாது. அவர்கள் அதிலிருந்து மீட்சி பெறவே மாட்டார்கள்'' (ஸுஃருப் - 75) என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

இதுதான் மறுமையின் அடிப்படைப் பண்பு. ஆனாலும் விதிவிலக்காக நலனும் தீங்கும் கலந்த ஒரு நிலை காணப்பட முடியும் என்கிறார். அதுதான், அல்லாஹ் ஒருவன் என்று ஏற்றவர்கள் நரகம் நுழைகின்ற சந்தரப்பம். இதன்போது அவன் ஸுஜூது செய்யப் பயன்படுத்திய உறுப்புக்களை நரகம் தீண்டாது. அவனுக்குத் தண்டனை வழங்கப்படுகின்ற அதே வேளை அவனது நற்செயல்களுக்கான சலுகைகளும் இருக்கிறன. இந்நிலையை இமாம் ஷாதிபி நலனும் தீங்கும் கலந்த நிலை என்கிறார்.

***மூன்றாவது அடிப்படை:*** உலக வாழ்வின் நலன்கள் ஏன் தேடப்பட வேண்டும்? மறுமை நலன்களை அடைந்து கொள்வதற்காகவே உலக வாழ்வின் நலன்கள் தேடப்படல் வேண்டும் என்கிறார். அதாவது ஷரீஅத் ரீதியில் ஒரு விடயம் நலன் என்று தீர்மானிக்கப்படுவதும் சரி, ஒரு விடயம் தீங்கு என்று தீர்மானிக்கப்படுவதும் சரி, அவை மறுமை வாழ்வை அடைந்து கொள்ளும் வகையில், உலக வாழ்வை நிலை நிறுத்தக் கூடியனவாகக் காணப்படல் வேண்டும். அன்றி மனித விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில் நின்று ஒரு விடயம் நலன் என்றோ அல்லது தீங்கு என்றோ தீர்மானிக்கப்படுவதில்லை. ஒரு விடயம் ஷரீஅத்தில் நலன் என்றோ தீங்கு என்றோ கருதப்படுவதற்கு அது மறுமை வாழ்வுக்கான உலக வாழ்வை நிறுத்தக் கூடியதாகக் காணப்படல் வேண்டும். மாற்றமாக மனித மனோ இச்சைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதில்லை.[7]

இந்த அடிப்படையை இமாம் ஷாதிபி பேசும் பின்புலம் என்னவெனின், மனித நலன் என்பது எவ்வாறு வரையறை செய்யப்படல் வேண்டும்? அது தனித்து மனித மனோ விருப்பங்கள், வெறுப்புகள் மீது நின்று மாத்திரம் வரையறுக்கப்படுவதில்லை. மாற்றமாக மனித நலன் என்பது உலக வாழ்வை நிலைநிறுத்துவதற்கான ஒன்றுதான். ஆனால் உலக வாழ்வை நிலைநிறுத்தக் கூடிய நலன் என்பது எது? அது எவ்வாறு வரையறை செய்யப்படும் எனின், உலகில் எந்த செயல் மூலம் மறுமை வாழ்வு நிலை பெறுகிறதோ அதுதான் உண்மையில் நலன். மறுமை நலனைப் பெற்றுத் தராத ஒன்று உலகில் நலனாகக் கருதப்பட முடியாது. இதுதான் இமாம் ஷாதிபி முன்வைத்த நலன் பற்றிய ஷரீஅத் பார்வை.

இந்தக் கருத்தைத் தான் அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது. மறுமையில் நரகிற்கு எடுத்துச் செல்லப்படும் ஒருவனின் கைசேதத்தைப் பற்றிப் பேசும் பொழுது, ''அவன் சொல்கிறான் எனது இந்த வாழ்வுக்காக நான் முன்னரே வழங்கியிருக்கக் கூடாதா?'' (பஜ்ர் 24). இந்த வசனத்திற்கு இமாம் தபரி அவர்கள் விளக்கமளிக்கும் போது[8] மறுமையில் ஒரு அடியான் தனது நிலையை நினைத்து கைசேதப்படும் ஒரு சந்தர்ப்பம் இது. உலக வாழ்வில் நல்லமல்கள் செய்திருக்கக் கூடாதா? அவ்வாறு செய்திருந்தால் மறுமையின் இந்த நிரந்தரமான வாழ்வுக்கு அது பிரயோசனமாக இருந்திருக்குமே என்று அவனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறான் என்கிறார்கள்.

இங்கு மறுமையின் நலனை இழந்தமை, உலகின் நலனை தவற விட்டமையால் விளைந்தது என்பதையே அல்குர்ஆன் கூறுகிறது.

இமாம் ஷாதிபி அவர்கள் தனது நலன் பற்றிய சிந்தனையை முன்வைக்கும் பொழுது, நலன் என்பது உலக மறுமை வாழ்வை இணைத்தது என்ற கருத்தைத் தான் இந்த மூன்று அடிப்படைகளில் நின்றும் விளங்கப்படுத்தியிருக்கிறார்கள். முதலாவது ஷரீஆ இறக்கப்பட்டமை உலக மறுமை நலன்களை நிலை நாட்டுவதற்காக, இரண்டாவது உலக நலன்கள் நன்மையும் தீமையும் இரண்டறக் கலந்தவை, மறுமை நலன்கள் தனித்து தூய்மையான நலன்கள். மூன்றாவது மறுமை நலனை அடைந்து கொள்ளக்கூடிய ஒன்றே உலகில் நலனாகக் கருதப்படும்.

இந்த மூன்று அடிப்படைகள் மூலம் நாம் விளங்கிக் கொள்ளும் முக்கிய உண்மை என்னவெனின், மகாஸிதுஷ் ஷரீஆவுக்கான முக்கியதொரு வரையறை இங்கு புரிந்து கொள்ளப்படுகிறது. அதாவது மகாஸிதுஷ் ஷரீஆ என்பது உலக, மறுமை நலன்கள் சம்பந்தப்பட்ட இலக்குகளையே குறித்து நிற்கின்றது. தனித்து உலக நலன்கள் மாத்திரம் மகாஸித் என்பதன் மூலம் அடையாளப்படுத்தப்படவில்லை.

அல்லாஹ்வே போதுமானவன்.

(1) பார்க்க : மீள்பார்வை இதழ் 381, பக்கம் 12.

(2) அபூ இஸ்ஹாக் அஷ்ஷாதிபி, மகாஸிதுஷ் ஷரீஆ, செம்மையாக்கல்: கலாநிதி அஸ் அத் அஸ்ஸஹ்மரானி (கிதாபுல் மகாஸித் மாத்திரம் தனித்துத் தொகுக்கப்பட்டது) பதிப்பகம் : தாருன் நபாஇஸ், பெய்ரூத், முதலாம் பதிப்பு 2015, பக்கம் 11.

(3) மேலது, பக்கம் 15.

(4) கலாநிதி ஜாஸிர் அவ்தா, தஹ்கீக் மகாஸிதித் தஃவா பில் கர்ப் ஆயிகுல் இஸ்திப்தாத், இஃமாலுல் மகாஸித் பில் மஜாலித் தஃவி, ஆய்வுகளின் தொகுப்பு, வெளியீடு: முஅஸ்ஸதுல் புர்கான் லித்துராஸ் அல் இஸ்லாமி, மர்கஸுல் மகாஸிதுஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா, முதலாம் பதிப்பு 2016, பக்கம் 304, 305.

(5) கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனி, அல் முவாபகாத் லிஷ்ஷாதிபி, விரிவுரைத் தொடர், யூடியூப், உரை இல. 05.

(6) பார்க்க : அல்முவாபகாத், இரண்டாம் பாகம், ஷரீஆ இறக்கப்பட்டமைக்கான மகாஸிதுகள், 5ம் 6ம் மஸ்அலாக்கள்.

(7) பார்க்க : அல்முவாபகாத், இரண்டாம் பாகம், ஷரீஆ இறக்கப்பட்டமைக்கான மகாஸிதுகள், 8ம் மஸ்அலா.

(8) இப்னு ஜரீர் அத்தபரி, தப்ஸீர் தபரி, பக்கம் 594.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | |
|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00 | இந்தியா | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் - 5500.00 |
| 12 இதழ்கள் - ரூபா 600.00 | தனிப் பிரதி - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா - 6500.00 |
| 24 இதழ்கள் - ரூபா 1200.00 | ஒரு வருடம் - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா - 4700.00 |
| | | | சீனா - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாதனையாளர்கள் வெளியில் உள்ள எந்த சூழ்நிலைகளும் தங்களது வெற்றியை தடுக்க இயலாது என ஆழமாக நம்புகின்றனர். வித்தியாசமான, புதுமையான செயல்களை செய்து அடைய வேண்டிய இலக்கை அடைந்து மற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தருவதில் மட்டுமே கவனமாய் இருக்கின்றனர்.

ஒரு விஷயத்தை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. தோல்விக்கு "உங்களது குடும்பம், நண்பர்கள், ஆசிரியர்கள், பள்ளி, சமுதாய-பொருளாதார பின்னணி, அரசுகளின் திட்டங்கள், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி" என யாரை வேண்டுமானாலும் நீங்கள் குறை கூறலாம், ஆனால் உங்கள் வாழ்க்கை சிற்பத்தை நீங்கள் மட்டுமே செதுக்குகிறீர்கள்; உங்கள் வெற்றி தோல்விக்கு நீங்கள் மட்டுமே முழுக் காரணமாக உள்ளீர்கள் என்பதை தெளிவாகப் புரிந்துக்கொள்ளுங்கள்.

மாணவர்களாகிய நீங்கள். சில ஆண்டுகளுக்குப் பின், உங்களது வாழ்வில் நீங்கள் வெற்றி அடைந்துள்ளீர்களா, தோல்வி அடைந்துள்ளீர்களா" என்பதை மட்டும் தான் சமூகம் பார்க்கும்.

அதனால் மாணவர்களே, உங்கள் சகோதரனாக உங்களை கேட்டுக்கொள்கிறேன். உங்கள் படிப்பில் கவனத்தை செலுத்துங்கள். ஒரு பெரிய இலக்கை, தொலைநோக்குப் பார்வையை வைத்துக்கொண்டு, அதில் முழு முயற்சியுடன் ஈடுபடுங்கள். சுயலாபம் அடையும் சில மனிதர்களின் பசிக்கு உங்கள் வாழ்க்கையை இரை ஆக்கிவிடாதீர்கள்.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் உங்கள் வாழ்க்கை மிக முக்கியமானது. நீங்கள் மிகப்பெரிய வெற்றியாளர்களாக பின்னாளில் மாறும்போது, நூற்றுக்கணக்கான மருத்துவர்களையும், அறிஞர்களையும், நல்ல குடிமகன்களையும் நம் சமூகத்திற்கு புதிதாக உருவாக்கி விட்டுச்செல்ல முடியும். அது மாதிரியான ஒரு சூழ்நிலை உங்களை இன்னும் பெரிய மனிதனாக அடையாளம் காண்பிக்கும்.

வெற்றியாளர்களில் பலர் பள்ளிகளில், கல்லூரிகளில் முதல் மதிப்பெண் எடுத்தவர்களாக இருக்கவில்லை. சராசரி மாணவர்களாய் தான் இருந்துள்ளனர். அவர்கள் இந்த நிலையை அடைய ஆர்வம், அர்ப்பணிப்பு, கடின உழைப்பு போன்ற குணங்களே காரணமாய் இருந்துள்ளன. அதனால் நேர்மறையாக சிந்தித்து, உங்களிடம் உள்ள திறமைகளை வைத்து, உங்கள் வாழ்க்கையையும், சமூகத்தையும் எத்தனை அழகாக மாற்ற முடியும் என்பதை வெளியுலகிற்கு காட்டுங்கள்.

யோசித்து செயல்படுங்கள். உணர்ச்சிகளுக்கு அடிமையாகாது அறிவுக் கதவை திறந்திடுங்கள். உங்கள் வாழ்க்கை மட்டுமல்ல, உலகமே உங்கள் கையில்

"எதைப் பற்றியும் பிறருக்குக் கற்றுக் கொடுக்க என்னால் முடியாது; அவர்களை சிந்திக்க வைக்க மட்டுமே என்னால் முடியும்." -சாக்ரடீஸ்

# எதிர்கால வாழ்க்கை



தொகுப்பு: அஸாருதீன்

ஒரு நாள் முல்லா தெருவழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார். ஒரு குடிசை வாசலை அவர் கடந்து சென்ற சமயம் குடிசைக்குள் ஏதோ சத்தம் கேட்கவே உள்ளே சென்றார்.

அந்தக் குடிசையில் ஒரு ஏழை விதவைப் பெண் வசித்து வந்தாள். துணிகளை தைத்துக் கொடுத்து அவள் கஷ்ட ஜீவனம் நடத்திக் கொண்டிருந்தாள் அவளுக்கு பத்து வயதில் ஒரு மகன் இருந்தான்.

அந்தக் குடும்பத்தைப் பற்றி முல்லாவுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் மீது அவருக்கு அனுதாபமும் உண்டு. வீட்டுக்குள் தாயும் மகனும் ஏதோ சச்சரவில் ஈடுபட்டிருந்தனர்.

'இங்கே என்ன நடக்கிறது?' என்று முல்லா வினவினார்.

'முல்லா அவர்களே! இவனைப் பாருங்கள்! ஒழுங்காக பள்ளிக்கூடம் போக மாட்டேன் என்று அடம்பிடிக்கிறான், அறிவுரை கூறிப் பார்த்தேன், அடித்து மிரட்டிப் பார்த்தேன், ஒன்றுக்கும் மசியமாட்டேன் என்கிறான்' என்றாள் தாய் வேதனையோடு.

'குழந்தாய், நீ பள்ளிக்கூடம் போக வேண்டியது அவசியமில்லையா? அது உன் எதிர்காலத்துக்கு நல்லதில்லையா?' என்று முல்லா சிறுவனுக்கு புத்திமதி கூறினார். பையன் கேட்பதாக இல்லை.

'நான் பள்ளிக்கூடம் போகப் போவதே இல்லை' என்று அடம் பிடித்தான்.

முல்லா சுற்றும் முற்றும் பார்த்தார். தைப்பதற்காக அந்தப் பையனின் தாய் வைத்திருந்த விலை உயர்ந்த துணி ஒன்று அவர் கண்களில் பட்டது.

அதை எடுத்து முல்லா துண்டு துண்டாகக் கிழித்துப் போட்டு விட்டார். அதைக்கண்டு தாயும் மகனும் அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தனர்.

'அம்மா, முல்லா விலை உயர்ந்த துணியைக் கிழித்துப் பாழாக்கி விட்டரே?' என்று திகைப்போடு கேட்டான் பையன்.

'பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்று உன் எதிர்கால வாழ்க்கையையே பாழாக்கிக் கொள்கிறாயே, அதைவிட இந்த விலை உயர்ந்த துணி பாழானது பெரிய விஷயமா' என்றார் முல்லா.

இந்தச் சொற்கள் அவன் மனத்தில் பெரிய மாறுதலை உண்டாக்கிற்று. உடனே புத்தகங்களை எடுத்துக் கொண்டு பள்ளிக்குப் புறப்பட்டான்.

அவன் சென்றபிறகு முல்லா தாம் கிழித்த துணியின் மதிப்புக்கேற்ற விலையைக் கொடுத்து விட்டுப் புறப்பட்டார்.

# விருப்பப் பட்டியல்

பேரரசன் நெப்போலியன் பெருங்களிப்பில் இருந்தான். போரில் பெற்ற மாபெரும் வெற்றிதான் அதற்குக் காரணம். அந்த வெற்றிக்குப் பேருதவியாக இருந்த அவனது நான்கு தளபதிளையும் அழைத்து 'உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள்' என்று கூறினான்.

முதல் தளபதி ஜெர்மனியைச் சேர்ந்தவன். அவன் 'மன்னா! என்க்கு பாரிஸ் நகரத்தில் ஒரு வீடு கட்டிக் கொள்ள வெகுநாளாக ஆசை' என்றான்.

'உனக்கு பாரிஸ் நகரத்தில் பெரிய மாளிகையே கட்டித் தரச் சொல்கிறேன்' என்றான் நெப்போலியன். அடுத்தவன் பாரிஸ் நகரத்தைச் சேர்ந்த வன். தனக்கு சொந்தமாக ஒரு தங்கும் விடுதி (Hotel) நடத்த ஆசை என்று மன்னனிடம் கூறினான்.

மாமன்னன் நெப்போலியன் சிரித்துக் கொண்டே மகிழ்ச்சியுடன் ஏற்பாடு செய்வதாகக் கூறினான். மூன்றாம் தளபதி போலந்துக் காரன். அவன் தனக்கு திராட்சை தோட்டமும், தொழிற்சாலையும் வேண்டும் என்று கேட்டான். அதற்கும் நெப்போலியன் அதே பதில்தான் சொன்னான்.

கடைசித் தளபதி. அவன் நெப்போலியனிடம் இரண்டு வார விடுப்பு பரிசாக வேண்டும் என்று கேட்டான். அதற்கு மன்னன் நெப்போலியன் 'உன் விடுப்பு நாளை முதல் தொடங்கும்' என்றான்.

அவன் பணித்தவுடன் வெளியே வந்த தளபதிகளில் முதல் மூவரும் பார்த்து 'சரியான முட்டாளாக இருக்கிறாயே! ஏதாவது விலை மதிப்புள்ளதாகக் கேட்காமல் விடுப்பைப் போய் கேட்டாயே?' என்று ஏளனம் செய்தார்கள்.

அதற்கு அவன் 'நண்பர்களே! நீங்கள் கேட்டதையெல்லாம் மன்னன் ஏற்பாடு செய்து தருவதாகத்தான் கூறியிருக்கிறான். இன்னும் அவை உங்கள் கையில் கிடைக்கவில்லை. மன்னன் அவன் கொடுத்த வாக்குகளை நேரடியாகச் செயல் படுத்த அவனுக்கு நேரமிருக்கப் போவதில்லை. அவனது காரியதரிசியைத்தான் பணிக்கப் போகிறான். காரியதரிசியோ ஆயிரம் வேலை செய்பவன். அவனும் அவனுக்குக் கீழ் வேலை செய்பவர்களுக்குத்தான் இந்த வேலைகளைக் கொடுப்பான். உங்களுக்கு அளிக்கப்பட்ட பரிசுகளுக்கான வாக்குறுதிகளின் முக்கியத்துவம் இப்படி கீழே ஆணைகள் செல்லச் செல்ல கரைந்து கொண்டே போய் மறக்கப் படும் வாய்ப்புகள் அதிகம்' என்றான்.

மற்ற தளபதிகள் 'அப்படி நடந்தால் மன்னனிடம் போய் முறையிடலாம்தானே' என்றார்கள்.

தளபதி சொன்னான் 'நண்பர்களே. மன்னனுக்கு இன்றைக்கு இருக்கும் வெற்றிக் களிப்பு வெகுநேரம் நிலைக்காது. போரில் பெற்ற வெற்றியின் மதிப்பு நாளடைவில் மற்ற பிரச்சினைகளுக்கு இடையே ஒளியிழந்து போகும். அதோடல்லாமல் இந்தக் கணத்தின் உங்கள் துறையின் வெற்றி மட்டுமே அவன் கண் முன் நிற்கிறது. நாளை உங்கள் துறையில் ஏதாவது தவறு நடந்தால் நீங்கள் தலை நிமிர்ந்து அவன் முன் நின்று உங்கள் பரிசை உரிமையுடன் நினைவுறுத்த இயலாது. ஆனால் நான் கேட்ட பரிசோ இப்போது என் கையில்'

இதைக் கேட்ட மற்றவர்கள் பேச்சடைத்துப் போனார்கள். தளபதி தன் விடுமுறையைத் திட்டமிடக் கிளம்பினான்.

நீதி: அரிதான இடத்தில் உடனே கிடைக்கக் கூடிய ஒரு ரூபாய், பின்னால் கிடைக்கப் போகும் நூறு ரூபாய்களை விட மேலானது.

## குடியிருப்புக்கள்...

(01 ஆம் பக்கத் தொடர்)

மீள்குடியேறும் மக்களுக்காக உரிய இடம் ஒதுக்கப்பட வேண்டும் எனவும், அது வனப்பாதுகாப்புப் பிரதேசமல்லாத பகுதிகளில் அமைய வேண்டுமெனவும் கணக்காய்வு அறிக்கை விதந்துரைத்துள்ளது. இதன்படி, குறித்த பிரதேசம் வெளியேற்றப்பட்டவர்களுக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும், வர்த்தமானி அறிவித்தல் மூலம் வனப்பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தை குடியிருப்புப் பிரதேசமாக்குவது அரசியல் யாப்பின் 27(14) பிரிவுக்கு முரணானது எனவும் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் போது அது தொடர்பில் அசட்டையாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், தற்போது அங்கு குடியிருப்புக்களை நிறுவுவது வல்லந்தமான செயற்பாடாகும். இதை விடுத்து வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெறுவது தொடர்பில் ஜனாதிபதியை வேண்டுவதே தற்போதுள்ள நிலைக்கான தீர்வாகும் எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

## துறைமுக...

(01 ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய சட்டம், மக்களின் அவதானத்துக்கான போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டே சட்டமாக்கப்பட வேண்டிய நிலையில், இந்தச் சட்ட மூலம் நேரடியாகவே பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக் கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. இதேவேளை 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்தில் 2018 புது வருடத்தை முன்னிட்டு சீன தேசியக் கொடி பறக்க விடப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## அசத்தியம்...

(01 ஆம் பக்கத் தொடர்)

பதவிவிலகலின் போது அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில், நாட்டுக்காக தனது பதவியை தியாகம் செய்வதாகவும், இந்த முடிவையிட்டு தாம் பெருமையடைவதாகவும் தெரிவித்திருந்தார். 20 நிமிடங்கள் நீடித்த அவரது உருக்கமான உரையில், எனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் எதுவுமே அடிப்படையற்றவை, இவற்றுடன் நான் தொடர்புபடவில்லை. சேர் ஜோன் கொதலாவல, டட்லி சேனாநாயக்க, லலித் அதுலத் முதலி, காமினி திஸாநாயக்க, ஆர்.பிரேமதாச, ஜே.ஆர். ஜயவர்தன ஆகியோர் மீதும் பொய்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. பின்னர் அவை பொய்யானவை என நிரூபணமாகின. புத்தரும் கூட பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டார். உண்மையை நீண்ட காலம் மறைக்க முடியாது, அப்படி யாரும் மறைக்க நினைத்தால் அவர்கள் தோல்வி அடைவர் என்று அல்குர்ஆன் சொல்லுகிறது. நான் நேர்மையாகவே நடந்து கொண்டிருக்கிறேன் என்று அவர் தெரிவித்தார்.

பிணைமுறை விற்பனையில் நடந்த ஊழல் காரணமாக அரசாங்கம் 1145 கோடி ரூபா வருமானத்தை இழந்துள்ளது. இந்தக் கொடுக்கல் வாங்கலைச் செய்வதற்கு நிதியமைச்சருக்கு இலஞ்சம் கொடுக்கும் வகையிலேயே குறித்த வீடு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது என ஆணைக்குழுவின் அறிக்கைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## ஏறாவூர்...

(01 ஆம் பக்கத் தொடர்)

தற்போது மூன்று பேர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார். கூட்டம் நடக்கின்ற வேளைகளில் தனது பணி சார்ந்த வேறு கூட்டங்களிலும் கலந்து கொள்ள வேண்டி வந்ததனால் கூட்டங்களில் தன்னால் கலந்து கொள்ள முடியவில்லை எனவும், தன்க்குப் பதிலாக தனது நிர்வாக அதிகாரியை அனுப்பி வைத்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றிய பிர்னாஸ் இஸ்மாயில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் தான் ஏறாவூர் நகரசபையின் பொறுப்பாளராகப் பதவியேற்றார்.

# 'குர்ஆனிய சிந்தனை'

## தப்ஸீர் நூல் சிங்கள மொழியில்

ஸூரதுல் பகரா மற்றும் ஸூரதுல் பாதிஹாவுக்கான விளக்க உரையாக உஸ்தாத் மன்ஸுர் அவர்களால் எழுதப்பபட்ட "குர்ஆனிய சிந்தனை" எனும் தப்ஸீர் நூல் சிங்கள மொழியில் வெளியிடப்பட்டது.

இஸ்லாம் மனித வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறது.மனித சமூகத்திற்கு அது எத்தகைய செய்தியைச் சுமந்து வந்துள்ளது,எத்தகைய ஒரு சமூகத்தை அது கட்டியெழுப்ப முனைகிறது என்பதைத் தெளிவுபடுத்தும் நோக்கில் குர்ஆன் சின்தாவ எனும் தலைப்பில் இந்த நூல் வெளிவந்துள்ளது.

அல்குர்ஆன் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சந்தர்ப சூழ்நிலைகளில் இறங்கிய ஒன்று.அதனது வார்த்தைகளை மேலோட்டமாகப் புரிந்து கொள்வது சிரம்மானது. முஸ்லிம்களே இதனை பிழையாகப் புரிந்து கொள்கின்ற




சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அந்தவகையில் சிங்களத்தைத் தாய்மொழியாக்க் கொண்ட ஒரு சமூகம் அல்குர்ஆனைப் புரிந்து கொள்வது இன்னும் சிரமமானது.எனவே அவர்கள் அல்குர்ஆன் முன்வைக்கும் கருத்துக்களை இலகுவாகப் புரிந்து கொள்ளும் நோக்குடன் இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இஸ்லாம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட ஒரு மார்க்கமாக இருக்கிறது.தவறான புரிதல்களை நிவர்த்தி செய்யவும் இஸ்லாத்தை முறையாக அறிமுகம் செய்ய வேண்டிய தேவையும் முன்னெப்போதையும் விட இன்றைய சூழலில் அதிகமாக்க் காணப்படுகிறது. அந்தவகையில் இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரமான அல்குர்ஆன் சொல்லும் கருத்துக்களை இலங்கைச் சூழலை மையமாக வைத்து உஸ்தாத் மன்ஸுர் அவர்கள் விளக்கியுள்ளார்கள்.

இந்தக் குர்ஆனிய விளக்க உரையானது முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அல்குர்ஆன் சொல்ல வரும் விடயங்களை சிறப்பாக தெளிவுபடுத்தும் என நம்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு

## எகிப்தின் சலாஹ்வுக்கு அரேபியாவின் சிறந்த கால்பந்து வீரர் விருது



2017 ஆம் ஆண்டுக்கான அரேபியாவின் சிறந்த கால்பந்து வீரருக்கான விருதை எகிப்து நாட்டின் பிரபல கால்பந்து வீரரும், லிவர்பூல் கழகத்தின் நட்சத்திர முன்கள வீரருமான மொஹமட் சலாஹ் பெற்றுக்கொண்டார்.

அரேபிய நாடுகளில் உள்ள கால்பந்து வீரர்களில் 2017ஆம் ஆண்டில் யார் சிறந்தவர் என்பதை தேர்வு செய்ய அரேபிய நாடுகளில் உள்ள 100 விளையாட்டுத்துறை ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து கணிப்பு நடத்தப்பட்டது. இதன்படி, பெரும் பான்மை வாக்குகளுடன் 582 புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மொஹமட் சலாஹ், வருடத்தின் சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிலையில், கடந்த முதலாம் திகதி டுபாயில் நடைபெற்ற குளோப் கால்பந்து விருது வழங்கும் நிகழ்வின் போது மொஹமட் சலாஹ்வுக்கான குறித்த விருதை சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் ஜியானி இன்பென்டினோ வழங்கி வைத்தார்.

இதேநேரம், சவூதி அரேபியாவின் அல்-ஹிலால் அணிக்காக விளையாடும் சிரிய நாட்டு வீரரான ஓமர் கிரிபின் (198 புள்ளிகள்) 2ஆவது இடத்தையும், சவூதி அரேபியாவின் அல்-அஹ்லி அணிக்காக விளையாடி வருகின்ற மற்றொரு சிரிய நாட்டு வீரரான ஓமர் அல்-சோமா (144 புள்ளிகள்) 3ஆவது இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இந்நிலையில், ஆபிரிக்காவின் சிறந்த கால்பந்து வீரருக்கான விருதையும் மொஹமட் சலாஹ் பெற்றுக்கொள்ளவுள்ளதாக கால்பந்து வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதற்கான உத்தியோக பூர்வமான அறிவிப்பு எதிர்வரும் வியாழக்கிழமை வெளியிடப்படவுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் லண்டனில் நடைபெற்ற 2017இன் பி.பி.சி.யின் ஆபிரிக்காவின் சிறந்த கால்பந்து வீரருக்கான விருதையும் மொஹமட் சலாஹ் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

25 வயதாகும் சலாஹ், ஏ. எஸ் ரோமா கழகத்திலிருந்து லிவர்பூல் கழகத்துக்கு மாறினார். ஆபிரிக்க நாடுகளில் அதிக விலைக்கு ஒப்பந்தம் செய்த வீரராக லிவர்பூல் அணிக்கு மாறியதும் அங்கு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்ற சலாஹ், பிரிமீயர் லீக் தொடரில் இதுவரை நடைபெற்ற 21 லீக் போட்டிகளில் 17 கோல்களை அடித்துள்ளார். மேலும் ஒட்டுமொத்தமாக அந்த அணிக்காக 23 கோல்கள் அடித்துள்ளார்.

இதன்படி, பிரீமியர் லீக் தொடரின் நவம்பர் மாதத்துக்கான சிறந்த வீரருக்கான விருதையும் அவர் பெற்றுக்கொண்டார்.

முன்னதாக கடந்த ஒக்டோபர் மாதம் கொங்கோ அணிக்கெதிரான உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளின் ஆபிரிக்க மண்டல இறுதி ஆட்டத் தில் இளம் நட்சத்திர வீரரான மொஹமட் சலாஹ் வின் அபார கோலினால் 2 - 1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றதன் மூலம் சுமார் 28 வருடங்களுக்குப் பிறகு எகிப்து அணி 2018 உலகக் கிண்ண கால்பந்து தொடரில் விளையாடுவதற்கு தகுதி பெற்றுக்கொண்டது.

அதேநேரம், கடந்த வருடம் நடைபெற்ற ஆபிரிக்க நாடுகளுக்கிடையிலான கால்பந்து தொடரிலும் எகிப்து அணியை இறுதிப் போட்டி வரை கொண்டு சென்ற பெருமையும் சலாஹ் வையே சாரும். எனினும், கெமரூன் அணியுடனான இறுதிப் போட்டியில் எகிப்து அணி தோல்வியைத் தழுவியிருந்தமை நினைவுகூரத்தக்கது.

இந்நிலையில், எதிர்வரும் பருவகாலத்திற்காக ஸ்பெய்னின் ரியல் மெட்ரிட் கழகம், மொஹமட் சலாஹ்வை 100 மில்லியன் யூரோக்களுக்கு ஒப்பந்தம் செய்யவுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, வருடத்தின் சிறந்த அரேபிய கால்பந்து அணியாக சவூதி அரேபியா தெரிவாகியது. பிபா உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு 5ஆவது தடவையாகவும் தெரிவான சவூதி அரேபியாவுக்கு இவ்விருது வழங்கப்பட்டமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.






கொழும்பு மாவட்ட அஹதிய்யா பாடசாலைகள் சம்மேளனம் ஏற்பாடு செய்த மாபெரும் இஸ்லாமிய கலைக் கண்காட்சி அண்மையில் கொழும்பு அல்ஹிதாயா பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. மாணவர்களின் பல்வேறு திறமைகளை வெளிக்காட்டும் நோக்கில் இக்கண்காட்சி தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்றது. கொழும்பு மாவட்டத்தில் இயங்கும் சுமார் 26 அஹதிய்யா பாடசாலைகள் இக்கண்காட்சியில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.



மீள்பார்வை பத்திரிகையில் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தொடராக எழுதிய பத்திகளின் தொகுப்பு 'நாடுவது நலம் - ஓர் அரசியல்வாதியின் சமூக அனுபவங்கள்' எனும் பெயரில் நூலாக வெளியிடப்பட்டது. இந்நூல் வெளியீட்டு விழா கடந்த டிசம்பர் 21ஆம் திகதி மாலை தேசிய நூலக ஆவணவாக்கல் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி தலைமை தாங்கியதோடு, நூலுக்கான விமர்சன உரைகளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.எம்.சுஹைர், நவமணி நாளிதழின் ஆசரியர் என்.எம். அமீன், விடிவெள்ளி நாளிதழின் ஆசிரியர் எம்.பி.எம். பைரூஸ் ஆகியோர் நிகழ்த்தியிருந்தனர். இங்கு முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் நூலுக்கான ஏற்புரையை நிகழ்த்தியிருந்தார்.

Printed and Published by Express Media (Pvt) Ltd, 89, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org